A.5994

# நான் கண்ட ஜப்பான்

# நான் கண்ட
# ஜப்பான்

A.5994

ஆசிரியர் :
சு. இராமசுவாமி நாயடு
முன்னாள் மேயர், சென்னை.

வெள்ளையன் பதிப்புக் கழகம்
கண்டனூர் : : இராமநாதபுர மாவட்டம்

முதற் பதிப்பு—பிப்ரவரி 1952

உரிமை பதிவு செய்யப்பட்டது

விலை ரூ. 2

Kabeer Printing Works, Madras (1851)

# முகவுரை

“ஜப்பான் இயற்கை எழில் மிகுந்த நாடு. ஜப்பானியர் உழைப்பின் உருவங்கள்,” என்று ஜப்பானை நேரிற் கண்டு மீண்ட நண்பர் பலர் கூறக் கேட்ட நான், அவ்வழகிய நாட்டைக் காண விழைந்தேன். விழைவு கொண்டு பல ஆண்டுகள் கழிந்தன. எனினும் சென்ற ஆண்டுதான் ஜப்பானுக்குச் செல்ல எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

நான் அங்கு ஒரு திங்களுக்கு மேல் இருந்தேன்; ஜப்பான் தீவுகளைச் சுற்றி வந்தேன்; பல நகரங்களைப் பார்த்தேன்; நகர “மேயர்களி”ன் விருந்தினனாக இருந்தேன்; அரசியல் தலைவர்கள், படைத் தலைவர்கள், அரசாங்க உயர் அலுவலர், வணிகப் பெருமக்கள், கைத்தொழில் விற்பன்னர், சிறந்த செய்தித்தாள் ஆசிரியர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர் முதலிய பல துறை அறிஞருடனும் அளவளாவும் பேறு பெற்றேன்.

ஜப்பான் எரிமலைகள் மிகுந்த நாடு. எந்த நேரத்திலும் நிலநடுக்கம் ஏற்படலாம்; அழிவு நேரலாம். இத்தகைய அஞ்சத்தகும் நிலையில் உள்ள ஒரு நாட்டினர், மேனாட்டார் மதிக்கத்தக்க வல்லரசினைப் படைத்தமைக்கு, அவர்தம் இடையறா ஊக்கமும் உழைப்புமே ஏற்ற காரணமாகும். அங்குச் சென்று கண்ட பின்னரே இவ்வுண்மை எனக்கு நன்கு புலனாயிற்று.

என் வாயிலாக ஜப்பானைப் பற்றிய் பல விவரங்களைக் கேட்டறிந்த நண்பர் பலர், நம் நாட்டவர் நலன் கருதி, அவற்றை ஒரு நூலாக வெளியிட வேண்டும் எனப் பன்முறை வற்புறுத்தினர். அவர்தம் வற்புறுத்தலை மறுக்க இயலாது, எனக்குக் கிடைத்த குறுகிய ஓய்வு நேரத்தில் இந்நூலை எழுதத் துணிந்தேன். இதில் நான் கண்ட சில செய்திகளை மட்டும் குறிப்பிட்டுள்ளேன் ; ஓய்வு கிடைக்கும்போது பிற செய்திகளையும் எழுதிப் பல நூல் களாக வெளியிட எண்ணியுள்ளேன். என்னுடைய நண்பர் திருவாளர் **வெள்ளையன் செட்டியார் பி. ஏ.,** அவர்கள் இந்நூலைப் பெருமகிழ்ச்சியோடு வெளியிட முன்வந்தார். அவருக்கு எனது உளம் உவந்த நன்றி. இதனைச் சிறந்த முறையில், நான் விரும்பியவாறு அச்சிட்டுதவிய **கபீர் அச்சகத்தார்**க்கும் எனது நன்றி மிகவும் உரியதாகும்.

நம் நாட்டு இளைஞர் இந்நூலிற் காணும் செய்திகளால் உணர்ச்சி பெற்று, ‘ நமது நாட்டை ஜப்பானைப் போலப் பல துறைகளிலும் மேனிலைக்குக் கொண்டுவரவேண்டும் ’, என மனவுறுதி கொள்வாராயின், அஃதொன்றே இந்நூல் எழுதியதற்கு ஏற்ற பயனாகும் என்பது என்னுடைய கருத்து. வணக்கம்.

சென்னை
15-2-52

சு. இராமசுவாமி

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | நாடும் நகரங்களும் | ... | 1 |
| 2. | போக்குவரவு | ... | 27 |
| 3. | கல்வி | ... | 34 |
| 4. | கைத்தொழில்கள் | ... | 43 |
| 5. | சமயங்களும் கடவுளரும் | ... | 74 |
| 6. | பிறப்பு முதல் இறப்பு வரை | ... | 92 |
| 7. | பழக்க வழக்கங்கள்—I | ... | 112 |
| 8. | பழக்க வழக்கங்கள்—II | ... | 127 |
| 9. | பாராட்டத்தகும் பண்புகள் | ... | 143 |



திரு. நாயடு அவர்கள் டோக்கியோ கவர்னருடன் அளவளாவுதல்

# நான் கண்ட ஜப்பான்

## 1. நாடும் நகரங்களும்

**அழகிய நாடு**

நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் அழகு படைத்த நாடுகள் இவ்வுலகில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள் ஒன்று ஜப்பான் என வழங்கும் **நிப்பான்** நாடாகும். 'நிப்பான்' என்பதற்கு 'எழு ஞாயிற்றுக்குரிய நாடு' என்பது பொருள். நிப்பான் நாடு கைபுனைந்தியற்ருக் கவின்பெறு வனப்புடையதாகும்.

ஜப்பானில் காலேயில் தோன்றும் நீலவான் வனப்பும், செம்பொன்னே உருக்கி வார்த்தது போன்று காட்சியளிக்கும் அந்திவான் அழகும், முகில் தவழ வானுற ஓங்கி நிற்கும் வெள்ளிப்பனிமலேப் பொலிவும், கொண்டல் பொழியும் மழை எழிலும், அம்மழைநீர் மலேக் கற்களே அரித்தோடும் அருவியழகும், பின் அவ்வருவிகள் ஆருகப் பெருகிப் பசுமை வளம் பெருக்கும் பொற்பும், அதனுல் நாடெங்கும் பச்சைப் பசேலெனப் பெருங்காட்சி நல்கும் பொழில்களின் பொலிவும் இனிய காட்சியளிப்பனவாகும். அப்பொழில்களில் வானளாவி நிற்கும் மரங்களும், அவைகளேப் பற்றுக்கோடாகக் கொண்டு பின்னிக் கிடக்கும் பசுங்கொடிகளின் பெருவனப்பும், இப்பசுமையினிடையே பல நிற மலர் தரும் கண்கவர் தோற்றமும் காண்போர் உள்ளத்தைக் கொள்ளே கொள்ளுவனவாக அமைந்திருக்கின்றன.

### மூவாயிரம் தீவுகள்

படத்தில் பார்க்கும்போது, ஜப்பான் நாடு என்பது, வளர்பிறை எனக் காட்சி நல்கும் பல தீவுக் கூட்டம் என்பது விளங்கும். சற்றேறத்தாழ மூவாயிரம் தீவுகள் இப்பிறை வடிவத்தில் அடங்கிக் கிடக்கின்றன. இவற்றுள் பல வளமற்ற பாறைத் தீவுகளாகும். ஆதலால், மக்கள் இவற்றில் குடியேறி வாழவில்லை. நான்கு பெருந் தீவுகளே, சிறப்பாக மக்கள் வாழ்விற்குரியனவாயும் காண் போர் கருத்தை ஈர்ப்பனவாயும் மிளிர்கின்றன. இந்நான்கு தவிர, மற்றும் சில தீவுகள் எரிமலைகளை எண்ணற்றுப் பெற்றிருப்பனவாய், மக்களுக்கு அச்சமூட்டுவனவாய் அமைந்திருக்கின்றன. ஒருபுறம் இயற்கையின் எழில் சிறந்து விளங்கும் அறநெறிக் காட்சி, மற்றொருபுறம் இயற்கையின் படைப்பாகிய எரிமலைக் கூட்டம் வழங்கும் மறநெறிக் காட்சி என, ஜப்பான் தீவுகள் மக்களுக்கு இரு வகைக் காட்சிகளையும் அளிப்பனவாய் உள்ளன.

ஜப்பான் நாட்டில் மக்கள் வாழ்விற்குரியனவாகச் சிறு தீவுகள் சில இருக்கின்றன. அவை, கியுஷூ (Kyushu), ஷிக்கோகு (Shikoku), எஸோ (Yezo), ஸடோ (Sado), ஸூஷிமா (Tsushima), ஹிராடோ (Hirado), அவாஜி (Awaji), ஓஷிமா (Oshima), ஐகி (Iki), ஓகி (Oki), கோட்டோ (Goto), போனின் (Bonin), ரியூகியூ (Riukiu), குரைல் (Kurile), பெப்பு (Beppu) முதலியன.

### எட்டுக்கோடி மக்கள்

ஜப்பானியர் இன்று 1,48,742 சதுர மைல் நிலப்பரப் புடைய பிரதேசத்தையே தங்கள் வாழ்வுக்குரிய நாடாகக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏறக்குறைய எட்டுக் கோடி மக்கள் இருக்கின்றனர். எனவே, மக்கள் தொகை மிகுதியாயும், மக்களுக்குப் போதுமான இடமின்றி நெருக்கமாயும் உள்ள உலக நாடுகளுள் இதுவும் ஒன்றாகும் என்பதனை நன்கறியலாம். ஜப்பான் மக்களில் நூற்றுக்கு

நாற்பத்தாறுபேர் உழவர்களாகவே உள்ளனர். மற்றையோர் பிற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஜப்பானியரின் சிறப்புணவு அரிசியேயாகும். மீன், காய்கறி வகைகள் முதலியவற்றைத் துணை உணவாக அவர்கள் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

ஜப்பான் நாடு நாற்பத்தாறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஜப்பானிய மக்கள் தங்கள் அரசர்மாட்டுப் பேரன்பும் பெரும்பணிவும் கொண்டவராக விளங்குகின்றனர். ஜப்பான் அரசர் பெயர் ஹிரோஹிட்டோ (Hirohito) என்பதாகும்; அரசியார் பெயர் நகாகோ (Nagako) என்பது.

## புனிதம் மிக்க பூஜியாமா

ஜப்பானில் நோக்கும் திசையெல்லாம் மலைகளைக் காணலாம். எனினும், ஏழு மலைகளே அங்குக் குறிப்பிட்டுக் கூறத் தக்கவையாகும். அவற்றுள் தலையானதும் உலக மக்கள் கவனத்தைக் கவர்ந்திருப்பதுமான **பூஜியாமா** (Fujiyama) என்னும் மலை 12,392 அடி உயரமுடையதாகும். அடிப்புறத்தில் இதன் சுற்றளவு 63 மைல்களாகும். ஜப்பான் மலைகள் அனைத்தும் எரிமலைகளே ஆதலின் பூஜியாமாவும் எரிமலையேயாகும். எனினும் பூஜியாமா கொதித்து எரி கக்கும் மறநெறியைக் கைவிட்டு நீண்ட காலமாயிற்று என்னலாம். இன்று உச்சியில் பனி படர்ந்து, உலகோர் உள்ளத்தில் உவப்பூட்டி ஈர்க்கும் வண்ணம் அமைதி மிக்கதொரு வெள்ளிப்பனி மலையாகக் காட்சி அளிக்கின்றது. இதன் உச்சியில் இன்றும் எரி கக்கும் வாய் ஐந்நூறு அடி ஆழமுடையதாகப் பனி படர்ந்து, 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதைக் கற்றறிந்தது போல, அறநெறி காக்கும் அமைதிச் சின்னமாய் அமர்ந்திருப்பதைக் காணலாம். பூஜியாமாவின் கொடுமுடி, எட்டிதழ்கொண்ட தாமரை மலரொன்று இதழ்களை விரித்து மலர்ந்திருப்பது போன்று எழில் மிக்க

தோற்றம் அளிப்பதாகும். தொலேவில் நின்று நோக்கு வார்க்குப் பூஜியாமா ஐந்தாறு கொடுமுடிகளே உடையது என்றே தோன்றும்.

ஜப்பானியர் இதனைப் புனிதம் மிக்கதாகக் கருதி, ஆண்டுதோறும் இம்மலேக்கு யாத்திரை செய்கின்றனர். இந்த மலேயைக் கடவுள் தன்மை வாய்ந்ததென்றே அம் மக்கள் கருதுகின்றனர். இம்மலேமீது ஏற எட்டுமணி நேரம் ஆகிறது. இரவில் யாத்ரிகர்கள் மலேமீது ஏறத் தொடங்கிஞல், கதிரவன் தோன்றும் நேரத்தில் மலேயுச்சி அடைவர். பூஜியாமாவின் உச்சியில் கதிரவன் தோன்றும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கிறது. யாத்ரிகருக் கென்று மலேமீது ஆங்காங்கே சிறு குடில்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. யாத்ரிகர் இக்குடில்களில் தங்கி ஓய் வெடுத்துக்கொள்ளலாம். இம்மலேமீது ஏறிச் செல்வ தற்கு வழி முழுமையும் படிகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

இம்மலேயைப் பார்க்கச் செல்பவர்கள் இதன் அடியில் உள்ள ஐந்து அழகிய ஏரிகளேக் காணுமல் இருக்க முடி யாது. இவ்வைந்திணேயும் சேர்த்தால் 63 சதுர மைல்களா கின்றன. இந்த ஏரிகள் பனிக் காலத்தில் உறைந்துவிடு மாதலின், சறுக்கி விளேயாடுவோர் இவற்றைப் பயன் படுத்திக்கொள்வர்.

இதற்கடுத்தது அசமாயாமா (Asamayama) என்னும் எரிமலேயாகும். இதன் உயரம் 8500 அடியாகும். இந்த மலே அடிக்கடி தீக்குழம்பைக் கக்கிப் பல முறை ஜப்பான் நாட்டில் பெருஞ் சேதத்தை விளேவித்தது. நான்டாய் சான் (Nantai san), ஓயாமா (Oyama), ஷுகுபா சான் (Tsukubasan), ஆன்சன்கடகே (Onsengatake), மிஹாரா (Mihara) என்பவை அந்நாட்டிலுள்ள ஆயிரக் கணக்கான மலேகளுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

## ஆற்று வளம்

ஜப்பான், பெரும்பாலும் மிகச்சிறு தீவுகளாலான நாடே எனினும், ஆறுகள் பலவற்றைக் கொண்டது. அவற்றுள் மிக நீண்டதும் அகன்றதுமான ஆறு ஷினானோ (Shinano) என்பது. இது 229 கல் தொலைவு ஓடிக் கடலில் கலக்கிறது. அதற்கடுத்தது டோனெகவா (Tonegawa) என்னும் ஆருகும். இந்த ஆறு கோட்சுகே (Kodzuke) என்னும் இடத்தில் தோன்றிக் கிழக்குத் திசை நோக்கி 170 கல் தொலைவு பாய்ந்து கடலில் கலக்கிறது. இவை இரண்டும் ஜப்பானில் பாயும் ஆறுகளில் நீண்டவை. பூஜிகாவா (Fugikawa) என்னும் ஆறு மிக விரைந்து பாய்கின்றது. இந்த ஆற்றில் தண்ணீர் ஓடிவரும் விரைவினை உலகில் வேறு எந்த ஆற்றுடனும் ஒப்பிட இயலாதாம். ஜப்பான் ஆறுகள் அனைத்தும் என்றும் வற்ருதனவே. வேனிற்காலத்திற்ருன் அங்குள்ள ஆறுகளில் தண்ணீர் பெருவெள்ளமாக வருகின்றது. அங்குள்ள ஆறுகள் அனைத்தும் மலைகளினின்றே தோன்றுவதால், கோடையில் அம்மலைகளின்மீது படிந்துள்ள பனி உருகி வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது.

## ஏரி வளம்

ஜப்பானில் ஏரிகள் பல இருக்கின்றன. அவற்றுள் பீவா (Biwa) ஏரி என்பதே மாபெரும் ஏரியாகும். இந்த ஏரி ஐம்பது கல் நீளமும் இருபது கல் அகலமும் உடையதாகும். கடல் போன்ற இந்த ஏரி ஓமி (Omi) மாகாணத்தில் இருக்கின்றது. இதன் நீர் மூலம் ஜப்பானியர் மிகப் பெரிய அளவு மின்சார சக்தியை உற்பத்தி செய்கின்றனர்.

## இயற்கைச் செல்வம்

ஜப்பான் நாட்டில் தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, நிலக்கரி, மணிகள் முதலியவை நிறையக் கிடைக்கின்றன.

ஓஷியு (Oshiu), சுருகு (Surugu) மாகாணங்களில் தங்கக் கனிகள் இருக்கின்றன. அவற்றினின்று தங்கம் நிறைய எடுக்கப்படுகிறது.

ஜப்பான் நாட்டில் குதிரை, எருது, பசு, பன்றி, ஆடு, கழுதை, நாய், பூனை முதலியவை வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள் ஆகும். ஜப்பானியக் காடுகளில் காட்டுப் பன்றிகள், மான், நரி, குரங்கு போன்ற விலங்குகள் வாழ் கின்றன.

யாமாகுச்சி மாகாணத்தில் (Yamaguchi) வெள்ளைப் பாம்புகள் இருக்கின்றன. இவை ஆறடி நீளம் உடையவை. அந்நாட்டில் பறவை இனங்கள் பலவகையாக உள்ளன. மக்கள் தங்கள் வீடுகளில் கோழி, வாத்து, புறா முதலிய வற்றை வளர்க்கின்றனர். இருபது அடி நீள வாலுள்ள ஒருவகைச் சேவலும் அந்நாட்டில் இருக்கிறது.

காடுகளில் கற்பூர மரங்கள் அடர்ந்து வளர்கின்றன. ஜப்பானியர் இந்த மரங்கள் மூலம் கற்பூரம் உற்பத்தி செய்து, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். கற்பூர மரங்கள் தொண்ணூற்றேரடி உயரம் வளர்கின்றன. வேறு பல மரங்களும் ஜப்பானில் நிறைய வளர்ந்து, ஜப்பான் செல்வத்தைப் பெருக்குகின்றன.

## கடல் தரும் செல்வம்

கடலிலிருந்து உப்பு, வகைவகையான மீன்கள், முத்து, பவழம் முதலியவை கிடைப்பதாலும், அவை அம் மக்களுக்குப் பெருஞ்செல்வம் ஈட்டித்தரும் பொருள் களாக விளங்குவதாலும், ஜப்பானியர் கடலைத் தங்கட்குக் கிடைத்துள்ள இயற்கையின் பெரும்பேறு என மதிக்கின் றனர். ஜப்பானியர் கடலில் மீன் பண்ணை, முத்துச்சிப்பிப் பண்ணை முதலியவற்றை அமைத்து, அவற்றை வளர்த்துப் பெருவாணிகம் செய்கின்றனர்.

## பழங்குடி மக்கள்

ஜப்பான் நாட்டின் பண்டை மக்கள் பெயர் **அய்னூ** (Ainu) என வழங்கப்படுகிறது. இம்மக்கள் இனம் இன்று அளவில் குறைந்துள்ளது. இவர்கள் இன்று ஹொக்கைடோ (Hokkaido) தீவில் வாழ்கின்றனர். இவர்கள், உடலில் மயிர் அடர்ந்தவராய் அச்சமூட்டும் தோற்றத்துடன் காணப்படுகின்றனர் ; எனினும், நட்புக்கு உகந்தவரா யிருக்கின்றனர் ; பிற மக்களுடன் கலந்து உறவாடுகின் றனர் ; கல்வி பயிலுகின்றனர் ; சிறிது சிறிதாகத் திருந்தி வருகின்றனர்.

## இன்றைய ஜப்பானியர் யாவர் ?

இந்த அய்னூ மக்களே ஜப்பான் நாட்டின் பண்டைக் குடிகள். ஜப்பானில் இன்றுள்ள மக்கள் கி. மு. ஆறு, ஏழாம் நூற்றுண்டுகளில் குடியேறினர். இன்றுள்ள ஜப்பானியர் மஞ்சு, மங்கோலிய, மலேய இனத்தவர்களின் கூட்டுறவால் தோன்றியவர் என்று ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர்.

## முதல் ஜப்பானிய மன்னர்

இங்ஙனம் குடியேறிய மக்களுள் ஜிம்மு டென்னோ (Jimmu Tenno) என்பார் பெருவீரராய்த் திகழ்ந்தவர். இவர் அய்னூக்களைப் போரில் முறியடித்து, மீண்டும் அவர்கள் தொல்லை ஏற்படாவாறு, அவர்களை வட தீவு களுக்கு ஒட்டிவிட்டுக் கி. மு. 660 பிப்ரவரி 11-ஆந் தேதி யன்று இத்தீவுகளின் மன்னரானுர். அதனுற்றுன் இன்றும் ஜப்பானில் இந்த நாள் அரசாங்கப் பொது விடுமுறைக் குரிய நாளாக விளங்குகிறது. ஜிம்மு டென்னோ வெற்றி பெற்ற பிறகு, இன்றுள்ள மக்கள் இத்தீவுகளில் கூட்டம் கூட்டமாகக் குடியேறி வாழலாயினர். துவக்கத்தில் சில அய்னூ மக்களுடன் இம்மக்கள் தொடர்புகொண்ட

மையால், இன்றுள்ள ஜப்பானியர் அய்னூ இரத்தக்கலப்பும் சிறிதளவு உடையவர்கள் என்று கூறலாம்.

## நாற்பெருந் தீவுகள்

எண்ணற்ற ஜப்பான் தீவுகளில் நான்கே சிறப்பிடம் பெற்றுள்ளவை என்று முன்னரே கூறினேம் அல்லவா? இவற்றுள் முதன்மைபெற்றுப் பெரும் நிலப்பரப்பு உடைய தாகவும் நடுத் தீவாகவும் இருப்பது **ஹோன்ஷூ**. இதுவே இன்று ஜப்பானின் தலைமைத் தீவு. ஹொக்கைடோ என்பது வடகோடித் தீவாகும். ஷிக்கோகு என்பது மற்றெரு தீவு. கியுஷூ என்பது நான்காம் தீவு. இவை நான்குமே இன்று ஜப்பான் நாடென விளக்கம் பெற்றுள்ளன.

## ஜப்பான் நாட்டுத் தலைநகர்

ஜப்பானின் தலைநகராக விளங்குவது டோக்கியோ நகரமாகும். இது ஹோன்ஷூ என்னும் நடுத் தீவில் துறை முகப்பட்டினமாக அமைந்திருக்கிறது. இன்று இதன் நிலப்பரப்பு 2,063 சதுரக் கிலோ மீட்டர்களாகும்.* 15-ஆம் நூற்றுண்டு வரை இஃது ஒரு மீன் பிடிக்கும் சிற்றூரா யிருந்தது. அதன் பிறகே இது தலைநகரமாக மாற்றி அமைக்கப்பட்டது. இங்கு 1457-ஆம் ஆண்டில் ஜப்பான் மன்னரது அரண்மனை கட்டப்பட்டது. இன்று இந்நகரம் உலக நாகரிக நகரங்களுள் ஒன்ருக விளங்குகிறது. இது மேல்நகர், கீழ்நகர் என இரு பிரிவுகளாக மிகப் பரந் திருக்கிறது. அறுபது லட்சம் மக்கள் இந்நகரில் வாழ் கின்றனர்.

டோக்கியோவில் பூம்பொழில்கள் பல அமைந்திருக் கின்றன. ‘உேனோ’ பூம்பொழிலில் தேசீயப் பொருட்காட்சி மாளிகையும், ஓவியக் காட்சி நிலையமும் (Nationa lMuseum and Art-Gallery) நிறுவப்பட்டுள்ளன. இதில் வியப்

* ஒரு கிலோ மீட்டர் = 3280·89 அடி.



'மருநேச்சி' என்னும் மாபெரும் கட்டடம்

பூட்டும் பண்டைப் பொருள்கள், ஜப்பானியரின் பண்டைய நாகரிகத்தை விளக்கும் சான்றுகள் முதலிய பலவற்றைக் காணலாம். ஓவியக் காட்சி நிலையத்தில் எழில் மிகுந்த ஓவியங்கள் பல வைக்கப்பட்டிருக்கின்றன. ஜப்பானியர் ஓவியத் திறனைப் பல நூற்றாண்டுகளாக எங்ஙனம் வளர்த்துவருகின்றனர் என்பதை அங்குள்ள ஓவியங் களினின்று நன்குணரலாம்.

டோக்கியோ நகரிலுள்ள விலங்குக் காட்சி நிலையத்தில் (Zoo) பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரூ ஜப்பான் குழந்தை களுக்குப் பரிசாக அனுப்பிவைத்த "இந்திரா" என்னும் யானை இருக்கிறது. அந்நாட்டில் யானை இல்லையாகலின், அவர்கள் இதனை மிகுந்த கண்காணிப்புடன் காத்து வளர்த்துவருகின்றனர்.

புத்தர் கோவில்களும் ஷின்ட்டோ சமயக் கோவில் களும் அந்நகரில் பல இருக்கின்றன. கிரேக்கர் வழிக் கிறித் துவக் கோவில் ஒன்றும் அழகு பெறக் கட்டப்பட்டுள்ளது. மன்னர் குடும்பத்தினர் மட்டும் இறை வணக்கம் செலுத்துவதற்கெனத் தனிக் கோவில் ஒன்று மிக அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது.

டோக்கியோவில் மட்டும் இருநூற்றுக்கு மேற்பட்ட திரைப்படக் காட்சி நிலையங்கள், நாடக சாலைகள், நாட்டிய அரங்குகள் இருக்கின்றன. அங்கு அடுக்கு மாளிகைகள் பல உள்ளன; இக்கால வசதிகளுடன் கூடிய உணவுச் சாலைகள் பலவற்றைக் காணலாம். நீச்சுக் குளங்கள், விளையாட்டிடங்கள் முதலியன ஆங்காங்கே அமைந்திருக் கின்றன.

டோக்கியோவில் உள்ள மருனேச்சி (Marunouchi) என்னும் கட்டடம் ஏழடுக்கு மாளிகையாகும். ஐயாயிரம் மக்கள், அக்கட்டடத்தில் அமைந்துள்ள அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர். நாளொன்றுக்கு நூறுயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பல அலுவல்களை முன்னிட்டு அக் கட்டடத்திற்குச் சென்றவண்ணம் உள்ளனர். அது

போன்ற மாபெருங் கட்டடங்கள் டோக்கியோவில் பல இருப்பதுபோல, ஓஸகா, கோபே, கியோட்டோ, நாரா, ஒட்ஸு முதலிய நகரங்களிலும் பல உண்டு.

பொதுவாக ஜப்பான் நகரங்கள், அமெரிக்க நகரங்கள் போல மிக உயர்ந்த கட்டடங்களுடன் காணப்படுகின்றன. நில நடுக்கத்தால் இன்னல்கள் ஏற்படும் என அஞ்சிச் சிறு மர வீடுகளிலும், அட்டை, மெழுகுக் காகிதம் முதலியவற்ருல் அமைக்கப்பட்ட வீடுகளிலும் வாழ்ந்துவந்த ஜப்பானியர், விஞ்ஞான அறிவைத் துணைக்கொண்டு, பல ஆராய்ச்சிகள் நிகழ்த்தி, நில நடுக்கத்தால் இன்னல் ஏற்படாவாறு புதிய வழிகளைக் கண்டு, மேனுட்டுப் பொறி வல்லுநர்களின் உதவியுடன் வானளாவிய பெருங் கட்டடங்களைக் கட்டியிருக்கின்றனர். ஜப்பான் தீவுகளில் அடிக்கடி இப்போதும் சிறு நில நடுக்கங்கள் உண்டாகின்றன. நான் டோக்கியோவில் இருந்தவமயம் நிலம் கிடுகிடென நடுங்கக் கண்டு வியப்படைந்தேன். இவ்வாறு உண்டாகும் சிறு நில நடுக்கங்களால் இன்னல்கள் உண்டாவதில்லை. ஆயின் எரிமலைகள் குமுறி, அதன் பயனுக நிலம் நடுங்கினுல் பேரிடையூறுகள் உண்டாதல் திண்ணம்.

வானளாவிய கட்டடங்களுள் டோக்கியோவில் உள்ள பாராளுமன்றம் (National Diet), ரேடியோ கட்டடம், மன்னர் அரண்மனை, "அஸாஹி ஷிம்புன்" என்னும் செய்தித்தாள் அலுவலகம், இன்னேரன்ன பிற கட்டடங்கள் காணத் தக்கவையாகும்.

### பாராளுமன்றம்

பாராளு மன்ற மாளிகை 217 அடி உயரமுடையதாக விளங்குகிறது. அஃது 1910-ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கி, 1936-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் தேதி முடிவு பெற்றதாம். கடந்த பதினறு ஆண்டுகளாக அக் கட்டடத்தில்தான் ஆட்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. முன்னர் மன்ற உறுப்பினர் மன்னரால் நிய

மிக்கப்படுவது வழக்கம். ஆனால் இப்போது, மேல் மன்றத்திற்கு (House of Councillors) இருநூற்றைம்பதின்மரும், கீழ் மன்றத்திற்கு (House of Representatives) நானூற்று அறுபத்தறுவரும், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஜப்பானில் முன்னிருந்த பிரபுக்களின் ஆட்சி முறை மாறி, இப்போது இங்கிலாந்தில் இருப்பதைப் போன்ற மக்கட் பிரதிநிதித்துவமுடைய மன்னராட்சி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடத்தும் அரசியல் அமைப்பு இன்று நடைமுறையில் இருந்து வருகிறது.

ஆட்சி மன்ற மாளிகை பதினேழு ஏக்கர் நிலப் பரப்பில், சுற்றிலும் மலர்ப் பொழில்கள் அமைய, நடுவே மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் எழுப்பப்பட்டிருக்கிறது. இம்மாளிகைக்குள் 390 தனி அறைகள் இருக்கின்றன. கீழ் மன்றத்தில் 466 உறுப்பினர் இருக்கவும், மன்ற நிகழ்ச்சிகளைக் காணவரும் பொதுமக்கள் தொள்ளாயிரத்து இருபதின்மர் அமரவும், இருக்கைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. மேல் மன்றத்தில் உறுப்பினர் இருநூற்றைம்பதின்மர் அமரவும், மன்ற நடைமுறைகளைக் காணவரும் பொதுமக்கள் எழுநூற்று எழுபதின்மர் இருக்கவும் இடமுண்டு. இரு மன்றங்களிலும் நூற்றைம்பது செய்தித்தாள் பிரதிநிதிகள் அமர்ந்து குறிப்புக்கள் எழுதிக்கொள்ளவும் இடம் இருக்கிறது. புறத் தோற்றத்திலும் அகத் தோற்றத்திலும் மிக அழகிய வேலைப் பாடுகளுடன் விளங்கும் இம்மாபெரும் மன்றத்தைக் கட்டி முடிக்க இரண்டு கோடியே ஐம்பத்தெட்டு லட்சம் என்கள் * (ஜப்பானிய நாணயம்) செலவாயினவாம்.

---

* ஒரு ஸ்டர்லிங் பவுன் = 1004 என்கள்.

### கின்ஸா கடைத்தெரு

டோக்கியோ நகரில் **கின்ஸா அவென்யூ** (Ginza Avenue) என்பது மிகப் பெரிய கடைத்தெருவாகும். சென்னை நகரிலுள்ள "சைனு பஜார்" என்னும் கடைத் தெரு பல நூறு சேர்ந்திருத்தல் போல இந்தக் கின்ஸா கடைத்தெரு காட்சியளிக்கிறது. உலகில் உள்ள பொருள் கள் அனைத்தும் இந்தக் கடைத்தெருவில் கிடைக்கும். இங்குக் கிடைக்காத பொருள் எதுவுமே இல்லை. இந்தக் கடைகளில் உள்ள பொருள்களின்மீது விலைகள் குறிக்கப் பட்டிருக்கின்றன. உணவுப் பொருள்கள், பழவகைகள், சில்லறைப் பொருள்கள் இவை யாவும் இவ்வாறே விலை களைக் குறித்த சீட்டுக்களுடன் காணப்படுகின்றன. ஆகை யால், தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குபவர்கள் இந்தக் கடைகளில் விலை கேட்டு, நேரத்தை வீணுக்க வேண்டுவதில்லை. "பேரம் பேசுதல்" என்னும் வழக்கமே இங்கு இல்லை.

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒதுக்கி வைத்துள்ள பொருள்களுக்கு ஜப்பானியர் குறைந்த விலை (Export Price) குறிப்பிடுகின்றனர். நாம் அப்பொருள் களை ஜப்பானில் வாங்குவதெனின், விலை இருமடங்காகும். அவர்கள் பிற நாட்டுப் பரிவர்த்தனையில் நிறையப் பணம் பெறுவதற்கே இவ்வாறு செய்கின்றனர்.

### பங்குப் பரிவர்த்தனை நிலையங்களும் பாங்குகளும்

இத்துறையில் ஈடுபட்டுள்ள பங்குப் பரிவர்த்தனை நிலை யங்கள் (Stock Exchange) பத்தொன்பதிற்கு மேலாகச் சிறப்பு நகரங்கள் பலவற்றிலும் உண்டு. இவை யாவற்றி னும் தலைசிறந்து விளங்குவது டோக்கியோ நகரத்தில் உள்ளதாகும். இது நியூயார்க் என்னும் அமெரிக்க நகரத்தி லுள்ள பங்குப் பரிவர்த்தனை நிலையத்துக்கு நிகராகப் பெரியதொரு கட்டடத்தில் அமைந்து திறம்பட வேலை செய்கிறது.



‘ கின்ஸா ’ கடைத் தெரு

பொது மக்களிடம் தேவைக்கு மேற்பட்டுள்ள பணத்தை, பங்குகள் (Shares) மூலமாகப் பெற்றுத் தொழிற் சாலைகளுக்குப் பயன்படுத்துதலும், அரசாங்கப் பொது நலப் பணிகளுக்கு உதவி தரும் கடன் பத்திரங்களுக்குப் பொருள் பெற்றுக் கொடுத்தலும் ஆகிய செயல்கள் பங்குப் பரிவர்த்தனை வணிகர் மூலமே நடைபெறுகின்றன. இவர் கள் நாள்தோறும் கூடிப் பங்கு விலையை உறுதிசெய்வர். இவ்வுறுதியில் விலை வகையில் ஏற்றத் தாழ்வு உண்டு.

ஜப்பானில் எழுபது பாங்குகள் இருக்கின்றன. அவற்றின் கிளைகளாக ஐயாயிரத்து நூற்று எழுபத்தேழு நிலையங்கள் நாடெங்கும் பரவியுள்ளன. இந்திய நாட்டுப் பாங்கு ஒன்றும் (Bank of India) டோக்கியோ, ஓஸகா நகரங்களில் செயலாற்றுகின்றது.

இத்துணைச் சிறப்பு மிக்க டோக்கியோ நகரின் கவர்னரை நான் சந்தித்தபோது, அவர் என்னை அன்புடன் வரவேற்று முகமன் கூறி, அளவளாவிப் பேசி, அந்நாட்டின் சிறப்பியல்புகள் பலவற்றைக் கூறினர். அவருடன் நீண்ட நேரம் உரையாடியதன் மூலம் அந்நாட்டைப் பற்றிய பல உண்மைகளை நான் அறிந்தேன்.

## ஹோன்ஷூ தீவு

91,277 சதுர மைல் நிலப்பரப்புள்ள இத்தீவில், சிறப் பாகக் குறிப்பிடத்தக்க நகரங்கள் 1. நாகோயா (Nagoya), 2. நிக்கோ (Nikko), 3. உஜியாமடா (Uji-yamada), 4. கியோட்டோ (Kyoto), 5. மட்சுவே (Matsue), 6. இஜுமோ (Ijumo), 7. நாரா (Nara), 8. ஓஸகா (Osaka), 9. யோஷினோ (Yoshino), 10. கோபே (Kobe), 11. ஹிரோஷிமா (Hiroshima), 12. மியஜிமா (Miyaji-ma), 13. யோக்கஹாமா (Yokohama) முதலியனவாகும்.

**1. நாகோயா :** டோக்கியோவுக்கு அடுத்தாற்போல் தொழில்கள் பல நடைபெறுவதற்குரிய துறைமுக நகர மாக விளங்குவது **நாகோயா** என்பது. இந்நகரில் ரயில்

இஞ்சின்கள், கடிகாரம், கண்ணுடிப் பொருள்கள், பீங்கான், சிமெண்ட், மருந்துகள் முதலியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்குப் பல பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. இந்நகரம் டோக்கியோவிலிருந்து 225 கல் தொலைவில் இருக்கிறது. இந்நகருக்கு 19 கல் தொலைவில் கிபு (Gifu) என்னும் இடமொன்றுளது. அங்குள்ள மக்கள் மீன் பிடிக்கும் முறை விநோதமானது. இரவில் ஆற்றுக்குச் சென்று, தீப்பந்தங்களைக் கொளுத்திப் படகில் வைத்துக் கொண்டு, பறவைகளை விட்டு மீன்பிடிக்கச் செய்வது அங்குள்ளவர் வழக்கம். இதற்கென அவர்கள் பறவைகளைப் பழக்கி வைத்திருக்கின்றனர். இந்தப் பறவைகளின் கழுத்தில் கயிறு கட்டி இவற்றைத் தூக்கி நீரில் எறிந்தால் இவை மணிக்கு நூற்றைம்பது மீன்கள் அளவில் பிடித்துக் கொடுக்கின்றன.

**2. நிக்கோ :** இந்நகர் மலைகளின் இயற்கைக் காட்சியையும் மக்களின் கைத்திறனையும் ஒரே இடத்தில் காண வாய்ப்பளிக்கும் இடமாகும். இங்குள்ள டோஷோகு (Toshogu) என்னும் கோவில் பெரும்பொருட் செலவில் மிகுந்த சிற்பத் திறனுடன் கட்டப்பட்டுள்ளது. இது மக்கள் கைத்திறனை நன்கெடுத்துக் காட்டுகிறது.

இங்கு சுஸென்ஜி (Chuzenji) என்னும் ஏரி கடல் மட்டத்துக்கு 4194 அடி உயரத்தில் இருபது கல் சுற்றளவுடன் காணப்படுகிறது. இப் பெரிய ஏரியில் மக்கள் விசைப் படகுகளைச் செலுத்தி விளையாட்டாகப் பொழுது போக்குவர். கெகான் (Kegon) என வழங்கும் நீர்வீழ்ச்சி ஒன்று 330 அடி உயரத்திலிருந்து விழுகின்றது. மக்கள் ஓய்வு நாட்களில் கட்டுச் சோற்றுடன் திரளாகச் சென்று மேற் குறிப்பிட்ட காட்சிகளைக் கண்டு மகிழ் வெய்துவர்.

**3. உஜியாமடா :** இந்நகரில் பரிதி இறைவிக்குக் கோவில் ஒன்றும், உழவுக் கடவுளுக்குக் கோவில் ஒன்றும் இருக்கின்றன. இங்கிருந்து கோகாஷோ (Gokasho Bay)

குடாக் கடலில் உள்ள டோபா என்னும் ஊருக்குச் சென்ருல், இயற்கை முத்துக்களைச் செயற்கை முறையில் உண்டாக்கும் முத்துச் சிப்பிப் பண்ணைகளைப் பார்க்கலாம். இங்கே ஏறக்குறைய இருநூற்றுவர் தனித்தனியாக இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

**4. கியோட்டோ :** இந்நகரம் 1868-ஆம் ஆண்டு வரை ஜப்பானின் தலைநகராயிருந்தது. இங்கே பட்டுத் தொழிலும் பல்வேறு சிறிய தொழில்களும், மூங்கிலால் விசிறி, குடை முதலியன செய்தலும், பதுமை, பீங்கான் முதலியவை செய்தலும் நடைபெறுகின்றன.

இந்நகரில் அழகிய பூஞ்சோலைகளும், சிறப்புப் பொருந்திய கோவில்களும் இருக்கின்றன. திங்கள்தோறும் விழாக்கள் பல நடந்தவண்ணம் இருப்பதால், எப் போதும் இந்நகர் ஆரவாரத்துடனே காணப்படுகின்றது. ஒட்சுவில் (Otsu) இருக்கும் நூற்று நாற்பத்தாறு கல் சுற்றளவுள்ள பீவா ஏரிக்கு இங்கிருந்தே போகவேண்டும்.

**5. மட்சுவே :** மட்சுவே நகரில் சில அழகிய மலர்ச் சோலைகளும், முப்பத்திரண்டு கல் சுற்றளவுள்ள ஷின்ஜி (Shinji) ஏரியும் இருக்கின்றன. இந்நகரம் ஜப்பானின் மலர்ச்சோலை என்று அழைக்கப்படுகிறது.

**6. இஜுமோ** (Ijumo) என்னும் ஊரிலுள்ள டய்ஷா (Taisha) கோவில் காணத்தகுந்தது. இக்கோவிலில் பத்தொன்பது சிறு கோவில்கள் தெய்வ உருவங்களின்றி இருக்கின்றன. இங்கே அக்டோபர் திங்களில் ஷின்ட்டோ சமயத் தெய்வங்களின் மாநாடு கூடுவதாகவும், மாநாட்டுக்கு வரும் தெய்வங்கள் தங்குவதற்காகவே மேற் சொல்லப்பட்ட சிறிய கோவில்கள் வறிதே விடப்பட் டுள்ளன என்றும் கருதப்படுகின்றது. இங்குள்ள கடவுள், காதலரைத் தம்பதிகளாக்கிவைக்கும் ஆற்றல் படைத்த ‘ காமி ’ எனும் பெயர் உடையதாம்.

**7. நாரா :** இந்நகர் ஒரு காலத்தில் ஜப்பானின் முதல் தலைநகரமாக மிளிர்ந்தது. இந்நகரை ஜப்பானின்

ஓவியம், சிற்பம் முதலிய கலைகளின் தாயகம் என்று கூறுதல் பொருந்தும். இங்குள்ள மலர்வனம் ஜப்பானிலுள்ள பிற மலர்வனங்கள் அனைத்தினும் அகன்றதாகும். இவ்வனத்தில் ஆயிரம் மான்கள் விடப்பட்டிருக்கின்றன. அவை விருப்பம் போல உலவி, அங்கு வருபவர்களிடம் உணவு வேண்டித் தலைவணங்கி நிற்கும் காட்சி வியப்பூட்டுவதாயுளது.

இங்குள்ள டோடாய்ஜீ (Todaiji) என்னும் கோவிலில் வெண்கலத்தால் செய்யப்பட்ட ஐம்பத்து மூன்று அடி உயரமுள்ள புத்தர்பிரான் உருவச்சிலை இருக்கிறது. இந்நகரில் ஓவியக் கண்காட்சி நிலையமும் வேறு பல மரக்கோவில்களும் உள்ளன.

**8. ஓஸகா :** இந்நகரம் பல கால்வாய்களையும் பாலங்களையும் கொண்டிருப்பதால் இதனை ஜப்பானின் 'வெனிஸ்' என்று கூறலாம். இது டோக்கியோவிலிருந்து 344 கல் தொலைவில் இருக்கிறது. இந்நகரம் ஜப்பானின் பெரிய வணிக நிலையமாகவும் சிறந்த கைத்தொழில் நகரமாகவும் மிளிர்கின்றது. பல இருப்புப்பாதைகளுக்கும் கப்பல் போக்குவரவுகளுக்கும் இது முடிவிடமாகவும் முதலிடமாகவும் விளங்குகிறது.

இங்கு மின்சார வண்டி நகரெங்கும் ஓடுகிறது. உணவு விடுதிகள் பல இருக்கின்றன. மாபெருங் கட்டடங்கள் பல இந் நகரை அழகுபடுத்துகின்றன. ஜப்பானிலே மிகப் பழைமையான புத்தர் கோவிலாகிய டென்னோஜி (Tennoji) என்பது இங்கு இருக்கிறது. இக்கோவில் பழைய கால நாகரிகப்படி ஐந்தடுக்கு வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலில் இருக்கும் 156 டன் நிறையுள்ள வெண்கல மணி உலகத்திலேயே மிகப் பெரியதென்று கூறப்படுகிறது.

கடலில் ஓடித்திரியும் நெய்தல்நில மக்களைக் காக்கும் கடவுளாகிய சுமியோஷி ஜின்ஷா (Sumiyoshi Jinsha) வுக்கு இந்நகரில் கோவில் இருக்கிறது. இக்கோவிலில் ஆயிரம் கைகளைக் கொண்ட அருள்சுரக்கும் இறைவியின்

சிலைகள் ஆயிரம் வைக்கப்பட்டுள்ளன. இந்நகரில் திரைப் படக் காட்சி நிலையம், நாட்டிய அரங்கம், இசையரங்கம், நாடகசாலை முதலியவை பலவாக இருக்கின்றன.

**கோள் ஆராய்ச்சி நிலையம்**

இங்குக் கோள் ஆராய்ச்சி நிலையம் (Planetarium) ஒன்று உண்டு. இஃது ஓஸகா நகரமன்றப் பொருள் உதவி யால் நடைபெறுகிறது. இந்நிலையம் மிக உயர்ந்த கட்டடத் தின் மேற்பகுதியில் அமைந்திருக்கிறது. இக்கட்டடத்தின் கீழ்ப்பகுதிகளில் மின்சார சக்தியின் பலதிறப்பட்ட பயன் களை மக்கள் தாமே சோதனையிட்டு அறிய வழி செய்யப் பட்டுள்ளது. மேற்கட்டடத்திலுள்ள தொலைநோக்கி (Telescope) ஜெர்மனியில் உள்ள தலைசிறந்த தொலை நோக்கிக்கு இணையாகும். வானவெளியில் கோள்கள் இருத்தலையும், அவை இடம் பெயர்தலையும், அவற்றின் உருவ அமைப்பினையும் இத்தொலைநோக்கியால் நன்கறிய லாம். இக் கட்டடத்திற்குட் செல்ல நுழைவுக் கட்டணம் உண்டு.

**9. யோஷினோ :** மலைத் தொடரிடையே அமைந் துள்ள இவ்வூர் இயற்கை எழில் நிறைந்து விளங்குகிறது. ஏப்ரல் மாதத்தில் இவ்வூர் மலர்க்கா எனக் காட்சி நல்கும். இங்குள்ள கோயா சான் (Koya san) என்னும் மலை (2832 அடி உயரம்) உச்சியில் பௌத்த மடாலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நீண்டு ஓங்கி வளர்ந்த மரங் களிடையே முப்பது மடாலயங்கள் அமைந்திருப்பதை இன்றும் பார்க்கலாம். இங்கிருந்து கீயி (Kii) தீபகற்பம் சென்றால், நாச்சி (Nachi) நீர்வீழ்ச்சியைக் காணலாம். ஜப்பானில் உள்ள நீர்வீழ்ச்சிகளுள் இதுதான் பெரிய தாகும். இது நானூற்று முப்பது அடி உயரத்திலிருந்து நிலம் நோக்கிப் பாய்கின்றது.

**10. கோபே :** இந்நகரம் தொழிற்சாலைகளுக்குப் புகழ் பெற்றதாகும். உயர்ந்த பல அடுக்கு மாளிகைக்

கட்டடங்கள் பல இந்நகரில் இருக்கின்றன. கப்பல் கட்டும் தொழில், ரயில் இஞ்சின் ஆக்கும் தொழில் முதலியவை இந்நகரில் நடைபெறுகின்றன ; பஞ்சு ஆலைகள் இருக் கின்றன. ஜப்பான் தொழில்களில் பெரும்பகுதி இங்கு நடைபெறுகின்றது என்று கூறலாம். வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து தங்குவதற்குரிய பெருந் துறைமுகமாக இந்நகரம் விளங்குகிறது. ‘மாயா சான்’ என்னும் மலை ஒன்று இங்கிருக்கிறது. இது 2290 அடி உயரமுடையது. இதன் கொடுமுடியில் ‘மாயா உணவு விடுதி’ என ஒன்றுள் ளது. அங்குப் போக வேண்டுமாயின், கம்பியில் தொங்கும் வண்ணம் வானில் ஓடும் மின்சாரப் பெட்டிவண்டியில் பிரயாணம் செய்யவேண்டும். இந்தப் பகுதியில் பல வெந்நீர் ஊற்றுக்களும் குளிர்ச்சி பொருந்திய நன்னீர் ஊற்றுக்களும் இருக்கின்றன. கோபேயில் அழகிய திரைப் படக் காட்சி நிலையங்களும் நாடகசாலைகளும் உள்ளன. இவற்றுள் ஒன்று ‘தகாராஸுகா’ என்பது. இதில் நான் காயிரம் மக்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து காட்சிகளைக் காணலாம்.

**11. ஹிரோஷிமா :** இது 1594-இல் ஒரு நகர மாயிற்று எனினும், இரண்டாம் உலகப் போரில் அணுக்குண்டுக்கு இரையான முதல் நகரம் இதுவே. இது கோபேக்கு மேற்கே இருந்த மாபெரும் நகரமாகும். இன்று இந்நகரம் அழிவுச் சின்னமாகக் காட்சியளிக்கிறது.

**12. மியாஜிமா :** ஹோன்ஷியுடன் இணைக்கப்பட் டுள்ள இச்சிறு தீவு ஒரு நகராக அமைந்துள்ளது. இது, இயற்கை எழில் மிக்க காட்சிகள் நிறைந்ததாகும். இத் தீவைச் சுற்றிலும் உள்ள கடலில் திடீரெனக் கடல் நீர் தூண் போல உயர எழும் காட்சி வியப்பூட்டுகிறது. இக் கடலில் எழும் நீர்த்தூண் சில சமயங்களில் ஐம்பத்து மூன்றடி உயர்ந்து காணப்படும்.

**13. யோக்கஹாமா :** இது, தலைநகருக்கு அடுத்துச் சிறப்புடையதாகும். இந்நகரில் ‘சான்ஞேர் எண்மர்



கோபே துறைமுகம்

மன்றம்' என்னும் பெயர்கொண்ட கோவில் ஒன்று இருக்கிறது. இதற்குள், கன்பூஷியஸ், கௌதமர், ஏசு நாதர், சாக்ரடிஸ், *கோபோ, நிச்சிரன், ஹின்ரன், ஷோடோகு என்னும் எண்மர் உருவச் சிலைகள் காணப்படுகின்றன. இதற்கு அணித்தே உள்ள காமக் கூராவில் 46½ அடி உயரமுள்ள மகா புத்தர் சிலை ஒன்று உள்ளது. இவ்வூரில் ஐந்து பெரிய கோவில்கள் இருக்கின்றன. முப்பதடி உயரமுடைய அருளிறைவியாம் 'கன்னன்' என்னும் கடவுள் சிலை பதினொரு முகமுடைய தாய்க் காணப்படுகிறது.

### ஹொக்கைடோ

இத்தீவு ஜப்பானின் தலையாய தீவுகள் நான்கனுள் ஒன்றாக வடகோடியில் அமைந்திருக்கின்றது. இத்தீவு மட்டும் 34,084 சதுர மைல் நிலப்பரப்புடையதாகும். இங்கு மழைக்காலமும் குளிர்காலமும் தாங்கமுடியாத அளவுக்குக் குளிர் உண்டுபண்ணக்கூடியவையாகலின், வெளிநாட்டார் வேனிற்காலத்தில் இத்தீவுக்குச் செல்கின்றனர். இங்கு நூற்றுக்கு மேற்பட்ட வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. கோடையில் இங்கு வெப்பம் 70 டிகிரிக்கு மேற்படுவதில்லை.

### நரகப் பள்ளத்தாக்கு

ஹொக்கைடோ தீவின் தலைநகரம் சப்போரோ (Sapporo) என்பது. இந்தத் தீவில் நொபோரி பெட்சு (Nobori Betsu) என்னும் வெந்நீர் ஊற்று உளது. இதிலிருந்து இடைவிடாமல் நீராவி எழுவதுடன், வெந்நீர் கொப்பளித்துக்கொண்டு மேலெழுந்தவாறு உள்ளது. இதனை ஜப்பானியர் "நரகப் பள்ளத்தாக்கு" என அழைக்கின்றனர். ஓயுநுமா (Oyunuma) என்னும்

---

* இவர்கள் பௌத்த, ஷின்ட்டோ சமயப் பெரியார்கள்.

மற்ருேர் ஏரியில் சேறு எப்போதும் தளதளவெனக் கொதித்துக்கொண்டிருக்கிறது. அச் சேற்றினிடையே வெந்நீர் பொங்கி எழுகின்றது.

**ஷிக்கோகு**

ஜப்பானின் நான்கு சிறந்த தீவுகளுள் இது மூன்ருவது. இதன் நிலப்பரப்பு 7280 சதுர மைல்களாகும். இந்தத் தீவில் தகமட்சு (Takamatsu) என்பதுதான் சிறந்த நகரம். இங்குப் புத்தர் கோவில்கள் எண்பத்தெட்டு இருக்கின்றன. கடலில் ஓடித்திரியும் நெய்தல்நில மக்களேக் காக்கவல்ல கடவுள் கோவில் இத்தீவிலுள்ள கொம்பிராசான் (Kompirasan) என்னும் ஊரில் இருக்கிறது. இங்குள்ள டோகோ (Dogo) என்னும் ஊர்ப்பகுதியில் வெந்நீர் ஊற்றுக்கள் பல இருக்கின்றன.

**கியுஷூ**

14,718 சதுரமைல் நிலப்பரப்புள்ள இந்தத் தீவு ஜப்பானின் நான்காவது சிறப்புத் தீவாகும். இது ஜப்பானுக்கு மேற்குக் கோடியில் அமைந்துளது. இந்தத் தீவில் வெந்நீர் ஊற்றுக்களும், நீராடும் பொதுவிடங்களும் பல இருக்கின்றன. மேனுட்டு நாகரிகம் முதன் முதலாக இத்தீவில் நுழைந்துதான் ஜப்பான் முழுவதும் பரவியது. இந்தத் தீவில் ஷிமோனேஸெக்கி (Shimonoseki) என்னும் கடலிணேப்பு ஒன்றுளது. இதன் இரு கரைகளிலுமுள்ள மோஜி (Moji) என்னும் சிறிய நகரத்துக்கும், ஷிமோனேஸெக்கி என்னும் நகரத்துக்கும் இடையில் மேற்குறிப்பிட்ட கடலிணேப்பின் அடியில்—கடலுக்கு அடியில்—இருப்புப் பாதை (Tunnel Railway) அமைக்கப்பட்டு, மின்சார ரயில் வண்டி ஓடுகிறது. மேலே கடலே ஒரு கரையிலிருந்து மற்ெருரு கரைக்குக் கடந்து செல்லப் படகுகள் போகின்றனவெனினும், அவற்றின்மூலம் அதனேக் கடந்து செல்ல

நேரம் மிகுதியாவதனை முன்னிட்டு, மக்கள் அக் கடலைக் கடக்கக் கடல் அடி இருப்புப் பாதையையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். ஹோன்ஷூவிலிருந்து கியுஷூ வரையில் கடலடியில் போகும் இந்தப் பாதைக்கு டன்னல் (Tunnel) இருப்புப்பாதை என்பது பெயர். இது 1942-ஆம் ஆண்டு ஜப்பானியரால் அமைக்கப்பட்டது. மேலே கடலில் கப்பல்கள் ஓட, அதற்கு அடியில் கடலின் கீழே சுரங்கம் அமைத்து, அதற்குள் மின்சார ரயில் வண்டி ஓடவைத்திருக்கும் ஜப்பானியரின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். கியுஷூ தீவில் கிரிஷிமா (Kirishima), அசோ (Aso) முதலிய பூம் பொழில்கள் பார்க்கத்தக்கன. அசோ மலர்வனம், அழகிய மலைகளைத் தன்னகத்தே கொண்டது. அங்கு ஐந்து எரிமலைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று புகைந்துகொண்டிருக்கிறது. மற்றைய நான்கும் தணிந்துவிட்டன.

**நாகசாகி**

அணுக்குண்டால் நாசம் செய்யப்பட்ட இரண்டு துறைமுக நகரங்களுள் நாகசாகி ஒன்றும். மற்றொன்றாகிய ஹிரோஷிமா நகரைப் பற்றி முன்பே கூறப்பட்டது. நாகசாகி நகரம் கியுஷூ தீவின் மேற்குக் கோடியில் அமைந்திருக்கிறது. இந்தத் துறைமுகத்தில்தான் முதன் முதலாகப் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர்கள், ஸ்பானியர் ஆகியவர் வாணிகம் செய்வதற்காகப் பதினாறும் நூற்றாண்டில் வந்திறங்கினராம். இங்கு 6000 பேர் அமர்ந்து தொழுகை நடத்தக் கூடியவாறு பெரியதொரு கத்தோலிக்கக் கிறித்துவக்கோவில் இப்போது கட்டப்பட்டிருக்கிறது.

நாகசாகிக்குத் தெற்கே அமாகுஸத் தீவுகள் (Amakusa) இருக்கின்றன. இவை எழுபது தீவுகள் அருகருகாக நெருங்கியிருந்து அழகிய காட்சி நல்குகின்றன.

## பெப்பு

பெப்பு (Beppu) என்னும் சிறு தீவு, வெந்நீர் ஊற்றுக்களுக்குப் பெயர் பெற்றது. இங்குள்ள வெந்நீர் ஊற்றுக்கள் மிகுந்த பயனுள்ளவையாகும். உப்பு, கந்தகம், இரும்பு முதலியவற்றின் சத்துக் கலந்த வெந்நீர் இங்குள்ள ஊற்றுக்களில் பொங்கி எழுகின்றது. இவைகளில் பொங்கி வெளிப்படும் நீர், சிலவற்றில் குருதி போன்று செந்நிறமாகவும், சிலவற்றில் பச்சையாகவும், சிலவற்றில் கருமையாகவும் இருக்கிறது. கடற்கரையிலும் வெப்ப மணல் குளியலை இங்குள்ளவர் மேற்கொள்கின்றனர். அஃதாவது, மணலில் மக்கள் பாதியளவு தங்களைப் புதைத்துக்கொள்ளுகின்றனர். பாதியளவு தோண்டியதும் வெப்பம் எழுகிறது. எனவே, சூடான மணலில் மக்கள் புதைந்து, பல பிணிகளைப் போக்கிக்கொள்ளுகின்றனர்.

## வெந்நீர் ஊற்றுக்கள்

ஏழு தீவுகள் அடங்கிய இஸு (Izu) என்னும் பகுதி எப்போதும் குமுறிக்கொண்டேயுள்ள எரிமலைகளைக் கொண்டதாகும். இந்த ஏழு தீவுகளுள் காணத்தகுவது ஓஷிமா (Oshima) என்னும் தீவேயாகும். இந்த ஏழு தீவுகளிலும் வெந்நீர் ஊற்றுக்கள் நிரம்ப உள்ளன.

ஜப்பான் நாட்டில் சற்றேறக்குறைய 1200-க்கு மேற்பட்ட வெந்நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. வெளிநாடுகளில் இருந்து ஜப்பானைக் காணச் செல்வோர் மட்டுமன்றி, ஜப்பானியரும் அவ்வூற்றுக்களில் நீராடி மகிழ்கின்றனர். அந்நாட்டுத் தட்பநிலையில், வெந்நீரில் நீராடுவது அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டுவதால், ஆடவரும் பெண்டிரும் வெந்நீர் ஊற்றுக்களுக்குச் சென்று நீராடுகின்றனர்.

## ஆட்சி முறை

ஜப்பானில் மன்னராட்சி நடைபெறுகிறது. ஜப்பானியர் தங்கள் மன்னரை இறைவனைப்போலக் கருதிப்

பணிந்து நடந்துகொள்ளுகின்றனர். மன்னன் கருத்துக்கு மாறுபடுவோர் அங்கு எவரும் இலர். நாடு முழுவதையும் மேல்மன்றம், கீழ்மன்றம் என இரண்டு சட்ட சபைகளின் உதவிகொண்டு, அமைச்சர் சபையின் ஆலோசனையுடன் மன்னர் ஆட்சி புரிகிறார். நகரங்கள் ஒவ்வொன்றிலும் நகரசபைகள் இருக்கின்றன. நகரசபை **மேயர்கள்** நகரங்களை எழில் மிக்கனவாகவும், தூயனவாகவும் வைத்துக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டித் தொண்டாற்றுகின்றனர்.

ஜப்பானில் ஐந்து பெரிய அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று பொதுவுடைமைக் கட்சியாகும். மற்றவை குடியரசுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை.

பெண்களும் அரசியலில் பெரும்பங்கு கொள்கின்றனர். ஜப்பான் மேல்மன்றத்தில் ஒன்பது பெண்களும், கீழ் மன்றத்தில் பன்னிரண்டு பெண்களும் பொதுத் தேர்தலில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜப்பான் அரசாங்கம் பன்னிரண்டு பிரிவுகளை உடையதாக ஆட்சி செய்யப்படுகிறது. இந்தப் பன்னிரண்டு பிரிவுகளில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அமைச்சர் பொறுப்பில் உள்ளது.

ஜப்பான் சிறு தீவுகளுடைய நாடெனினும், 1905-ஆம் ஆண்டில் நடந்த போரில் ரஷ்யாவை வென்றது. இதன் வன்மையை உணர்ந்த மேனாட்டு வல்லரசுகள், முதல் உலகப் பெரும்போரில் இதனை நேசநாடாகக் கொண்டிருந்தன. இது, இரண்டாம் உலகப் பெரும் போரில், அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கூட்டுச் சக்தியை எதிர்த்து நின்று போரிட்டுத் தோல்வியுற்றது; அதனால், ஐந்தாண்டுகள்வரை அமெரிக்க இராணுவ ஆதிக்கத்தின்கீழ் இருக்க நேர்ந்தது. சான்பிரான்ஸிஸ்கோ மாநாட்டு உடன்படிக்கையின் காரணமாக இப்போது ஓரளவு விடுதலை பெற்றுள்ளது; விரைவில் பூரண விடுதலை பெறும்.

ஜப்பானில் 1871-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல், அஞ்சல் முறை (Postal service) நடைமுறையில் இருக்கிறது. மேனாடுகளிலிருப்பதுபோன்று இந்த அஞ்சல் முறை ஜப்பானில் மிக்க திறம்பட நடைபெறுகிறது. ஜப்பானியர் அஞ்சல் முத்திரைகள் பலவற்றைப் பல நிறங்களில் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றில் அவர் தம் மன்னர் படம், இயற்கைக் காட்சிகள் முதலியவை அச்சிடப்பட்டுள்ளன. ஜப்பான் முழுவதிலும் இன்று 13,902 அஞ்சல் நிலையங்கள் இருக்கின்றன. டோக்கியோவில் இருப்பது இவற்றின் தலைமை நிலையமாகும்.

ஜப்பான் முழுவதிலும் நாற்பத்தைந்து வானொலி நிலையங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஹோன்ஷூ தீவில் இருபத்தெட்டு நிலையங்களும், ஹொக்கைடோவில் ஆறு நிலையங்களும், ஷிக்கோகுவில் நான்கு நிலையங்களும், கியுஷூவில் ஏழு நிலையங்களும் இருக்கின்றன. ஜப்பான் மக்கள் 58,60,000 ரேடியோ செட்டுக்களைப் பயன்படுத்துகின்றனர். ஆங்குள்ள ரேடியோத் தொழிற்சாலைகள் திங்கள் ஒன்றுக்கு 65,000 ரேடியோ செட்டுக்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வாணிகம் செய்கின்றன.

ஜப்பானில் வேலைக்கென அலுவலகங்களுக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளைப் பகல் நேரங்களில் வைத்துக் காத்து, மாலையில் வீடு திரும்புகையில் தாய்மாரிடம் ஒப்படைக்கும் விடுதிகள் (Creshe) 1140 இருக்கின்றன.

## நெருப்புக் கக்கும் எரிமலைகள்

ஜப்பான், எரிமலைகள் நிறைந்த நாடு எனினும் இன்று அவற்றுட் சில மட்டுமே நெருப்பைக் கக்கும் இயல்புடையனவாக இருக்கின்றன. ஜப்பான் நடுத்தீவில் அசாமா (Asama) மலையும், கியுஷூ தீவில் அசோ (Aso) மலையும், ஒஷிமா தீவில் மிஹாரா (Mihara) மலையும்,

ஹொக்கைடோ தீவில் டொக்காச்சி (Tokachi) மலையும் இன்றளவும் புகைந்துகொண்டே இருக்கின்றன. இவற்றுள் கியுஷு தீவில் உள்ள அசோ எரிமலை உலகிலேயே மிகப் பெரியதாகும். இந்த மலைத்தொடர் தென்வடக்காகப் பதினைந்து மைல் நீண்டுள்ளது; கிழக்கு மேற்காகப் பதினொரு மைல் அகன்றுள்ளது. மூன்று நகரங்களும் பதினொரு சிற்றூர்களும் அமைந்துள்ள ஒரு பெரும் பகுதியை அசோ மலையின் எரிவாய் அடிவாரமாகக் கொண்டுள்ளது. இம்மலை புகைந்துகொண்டே இருந்தாலும், சற்றேறத்தாழ 50,000 மக்கள் அந்த எரிவாய்க்குக் கீழிருக்கும் அடிவாரத்தில் அமைந்துள்ள நகரங்களிலும் சிற்றூர்களிலும் வாழ்கின்றனர்.

## மிகப்பரந்த மலர்வனங்கள்

ஜப்பான் நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மாபெரும் மலர் வனங்களை அமைத்து, அரசாங்கமே அவற்றைக் கண்காணித்துவருகின்றது. அவ்வனங்களுக்குத் "தேசீய மலர் வனங்கள்" எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. அவை பதினொன்கு இருக்கின்றன. இயற்கை அழகு படைத்த அந்நாட்டில் 'அழகுக்கு அழகு' செய்பவைபோல அவ்வனங்கள் அமைந்துள்ளன.

ஜப்பான் நிலப்பரப்பில் நூற்றுக்கு அறுபத்திரண்டு பங்கு காடுகளேயாம். மலைகளும், காடுகளும் நிறைந்த நிலப்பரப்பே ஜப்பான் நாடாக அமைந்துள்ளது எனல் பொருந்தும்.

## பிற விவரங்கள்

டோக்கியோவில் உள்ள ஊனோ (Ueno) என்னும் விலங்குக் காட்சிச்சாலை ஒன்றே ஜப்பானில் உள்ள விலங்குக் காட்சிச் சாலையாகும். இதில் இதுகாறும் கொண்டுவரப்பட்ட கொடிய விலங்கு புலி ஒன்றேயாம். ஜப்பானில் எட்டுப் பொருட்காட்சி நிலையங்கள் இருக்கின்றன.

அங்கு வான ஆராய்ச்சி நிலையங்கள் மட்டும் 253 உள்ளன. ஜப்பானின் சராசரி வெப்ப நிலை 57° எனக் கூறலாம். வெப்பம் உச்சநிலை அடையும் பொழுது 99° இருக்கிறது. மிகக் குறைந்த நிலையில் 17° இருக்கிறது. மழைமட்டும் ஓராண்டில் 609 அங்குலம் பெய்கிறது.

ஜப்பானில் ஆண்டு தோறும் 93 லட்சம் டன் அரிசியும், 7 லட்சம் டன் கோதுமையும் உற்பத்தியாகின்றன.

அந்நாட்டில் வாழைமரமும் தென்னைமரமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண் பொலீஸ்

ஜப்பானில் 2541 பொலீஸ் நிலையங்கள் உள்ளன. கடல் பொலீஸ் நிலையங்கள் பதினாறு இருக்கின்றன. இவற்றுள் 1,25,000 பேர் பொலீஸ்காரராகப் பணியாற்றுகின்றனர். 1222 பெண்கள் பொலீஸ் உயர் அலுவலராக உளர்.

ஜப்பான் நாட்டுப் போக்குவரவு சாதனங்கள், கல்வி, கைத்தொழில்கள், சமயங்கள், பழக்கவழக்கங்கள் முதலிய பல பொருள்பற்றிய விளக்கங்களை அடுத்துவரும் பிரிவுகளில் காணலாம்.

# 2. போக்குவரவு

மேனுடுகளில் போக்குவரவுக்கெனப் பயன்படும் புகை வண்டி, மோட்டார், மின்சார வண்டி, டிராம் வண்டி, கப்பல், படகுகள், வானவூர்தி முதலிய அனைத்தும் ஜப்பானிலும் போக்குவரவுச் சாதனங்களாகப் பயன்படுகின்றன.

## இருப்புப் பாதைகள்

ஜப்பானில் 1872-ஆம் ஆண்டில், அந்நாட்டுத் தலை நகரமாகிய டோக்கியோவுக்கும் யோக்கஹாமாவுக்கும் இடையே முதன் முதலாகப் பதினெட்டுக்கல் தொலைக்கு இருப்புப் பாதை அமைக்கப்பட்டது. அப்போது ஜப்பானில் பத்துப் புகைவண்டி இஞ்சின்களே வரவழைக்கப் பட்டிருந்தன. ஆனால், இப்போது ஜப்பானில் 28,003 மைல் தொலை இருப்புப்பாதை அமைந்திருக்கின்றது; நீராவியால் இயங்கும் இஞ்சின்கள் 5897 இருக்கின்றன; மின்சாரத்தால் இயங்கும் 350 இஞ்சின்கள் உள்ளன. ஜப்பானில் சிறப்பாகவுள்ள நகரங்கள், துறைமுகங்கள், வாணிகச் சிறப்புடைய இடங்கள் ஆகிய அனைத்தும் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பான் இயற்கை வளம் மல்கிய நாடாகலின், புகைவண்டி வழியே பிரயாணம் செய்கையில் இருமருங்கிலும் தோன்றும் காட்சி காண்பதற்கு இனிமையானது. ஆதலின் ஜப்பானியப் புகைவண்டிகள், பிரயாணிகள் வசதியாக அமர்ந்து, இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து செல்வதற்கேற்றவாறு அமைக்கப் பட்டுள்ளன. வெளிநாட்டார் பகல் நேரங்களில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் செல்வதற்காகப் பார்வை வண்டி (Observation Coach) என்னும் ஒன்றை இணைக்கின்றனர்.

அந்நாட்டில் இருப்புப்பாதை அரசாங்கத்துக்கு உரிய தெனினும், தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் இருப்புப் பாதைகளும் சில இருக்கின்றன. அரசாங்கத்துக்குரிய இருப்புப்பாதையின் நீளம் 20,121 மைல்களாகும். தனிப் பட்டவர்கள் நடத்தும் கிளைப்பாதைகளின் நீளம் 7991 மைல்கள். ஜப்பான் புகைவண்டிகளில் முதல் மூன்று வகுப்புக்கள் இருக்கின்றன. இரவில் பிரயாணம் செய்பவர்க் குப் புகைவண்டியில் செய்து தரப்படும் படுக்கை வசதி மிகச் சிறந்ததாயிருக்கிறது.

ஜப்பானிய இருப்புப்பாதை 3 அடி 6 அங்குல அகல முடைய 'மீட்டர் கேஜ்' அளவினதாகும். எனினும், அங்குள்ள புகைவண்டிகள் மணிக்கு 61 கிலோமீட்டர் வேகத்தில் ஓடுகின்றன. ஜப்பானில் 4124 புகைவண்டி நிலையங்கள் இருக்கின்றன. அங்கு ஆண்டொன்றுக்குச் சற்றேறக் குறைய முந்நூற்றுப்பதினெட்டுக் கோடி மக்கள் புகைவண்டிகளில் பிரயாணம் செய்கின்றனர். டோக்கியோ சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் மட்டும் நாள் ஒன்றுக்கு 1160 முறை புகை வண்டிகள் வருவதும் புறப்படுவதுமா யிருக்கின்றன எனின், அங்கு நடைபெறும் புகைவண்டிப் போக்குவரவு மக்களுக்கு எவ்வளவு வசதியாயிருக்கிறது என்பது நன்கு விளங்கும் அன்றோ?

ஜப்பானிய அரசாங்க ரயில்வேயில் ஆறு லட்சம் ஆண்களும் நாற்பதாயிரம் பெண்களும் வேலை செய் கின்றனர். ஜப்பான் நாட்டின் கனிகளில் கிடைக்கும் 2,27,92,000 டன் நிலக்கரியில் 70 லட்சம் டன்களே ஜப்பா னிய அரசாங்கப் புகைவண்டிகளுக்கு ஓர் ஆண்டில் தேவைப்படுகின்றன.

ஜப்பானியர் முதன் முதலாக வரவழைத்த புகை வண்டி இஞ்சின் இன்று பொருட்காட்சிச்சாலையில் வைக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது ஜப்பானியரே தங்களுக்கு வேண்டும் இஞ்சின்களையும் வண்டிகளையும் செய்துகொள் கின்றனர். முதன் முதலாகக் கோபே நகரில் 1893-ஆம்

ஆண்டில் ரயில் இஞ்சின் ஜப்பானியரால் செய்து முடிக்கப் பட்டது. எனினும், இன்று ஜப்பானியர் இஞ்சின்களைச் செய்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். இன்றைய ஜப்பானியர் அமைக்கும் இஞ்சின்கள் மிக்க வேகத்திற் செல்லத் தக்கனவாகவும், மிகுந்த சுமை இழுக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன. இன்று ஜப்பானியர் நிறுவியுள்ள ஒரே இஞ்சின் 21 ரயில் வண்டித் தொடர்களை இழுத்துச் செல்லும் ஆற்றல் உடையதாகும்.

ஜப்பானில் மின்சார ரயில் வண்டிகளும் இருக்கின்றன. ஆனால் நம் நாட்டில் இருக்கும் மின்சார இருப்புப் பாதையினும் அங்கிருப்பது மிக்க வசதியாகவும் நெடுந் தொலைவு விரைந்து போகக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. ஜப்பானின் இருப்புப்பாதையில் நூற்றுக்கு எட்டுப் பங்கு மின்சாரமயமாக்கப்பட்டிருக்கிறது. 1895-ஆம் ஆண்டில் கியோட்டோ நகரில் துவக்கப்பட்ட மின்சார இருப்புப்பாதை, இன்று பல ஊர்களை இணைத்துக் கொண்டிருக்கிறது.

நிலத்துக்கு அடியில் ஓடும் மின்சார இருப்புப்பாதைகளும் (Sub-way lines) ஜப்பானில் இருக்கின்றன. டோக்கியோ, ஓஸகா, கோபே ஆகிய மூன்று நகரங்களிலும் நிலத்துக்கு அடியில் இருப்புப்பாதை இருக்கிறது. இப்பாதை டோக்கியோவில் 1927-ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது. நிலத்துக்கு அடியில் மின்சார ரயில் நிலையங்களும் இருக்கின்றன. ஓஸகாவில் நகருக்குள்ளேயே வடகோடியிலிருந்து தென்கோடிவரை நிலத்துக்கு அடியிலேயே மின்சார இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. நிலத்துக்கு அடியில் மின்சார ரயில் வண்டிகள் அடிக்கடி போய்க் கொண்டிருப்பதால், பிரயாணம் செய்பவர்களுக்கு இது பெரும் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

நிலத்துக்கு அடியில் ஓடும் மின்சார வண்டியில் ஒரே வகுப்புத்தான் உண்டு. இதற்குரிய கட்டணமும் ஒரே வகையாக இருக்கிறது. அஃதாவது, பத்து 'என்'

கொடுத்து விட்டால் நிலத்துக்கு அடியில் உள்ள எல்லா ரயில் வண்டி நிலையங்களுக்கும் செல்லலாம். பத்துப் பேருக்குரிய சீட்டுக்களை (Ticket) ஒரே சமயத்தில் ஒருவரே வாங்கினுல் ஒரு சீட்டு இலவசமாகத் தரப்படு கிறது. நிலத்துக்கு அடியில் ஓடும் இந்த ரயில் வண்டிகளை டோக்கியோவில் மட்டும் நாள்தோறும் பத்து லட்சம் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

ஜப்பான், மலைகள் நிறைந்த நாடாகையால் அங்குப் பல இடங்களில் மலைகளைக் குடைந்தும் இருப்புப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் மலைகளைக் குடைந்து ஏற்படுத்தியுள்ள பாதைகளில் மிகவும் நீண்ட மலைக்குகை இருப்புப்பாதை ஷிமிஸு (Shimizu) டன்னலேயாகும். இஃது ஆறு மைல் தொலைவு குகைக்குள்ளேயே போகும் பாதையாக அமைந்திருக்கிறது. உலகில் உள்ள பெரிய மலைக்குகை இருப்புப் பாதைகளுள் இஃது ஒன்பதாவ தாகும்.

மின்சார டிராம் வண்டிகள் பல பெரிய நகரங்களில் ஓடுகின்றன. டிராம் வண்டியில் பிரயாணம் செய்ய உள்ள கட்டணம் எட்டு என்களாகும். இது மிகக் குறைந்த கட்டணம். மலைகள்மீதும் மேட்டுப் பாங்கிலும் உள்ள ஊர்களுக்குப் போக, வானில் கம்பியில் தொங்கிக்கொண்டு ஓடும் மின்சார வண்டிகளும் (Suspended Cable Cars) இருக்கின்றன. இந்த வண்டி ஒரே ஒரு பெட்டியாகும். நான்கைந்து மலைகளுக்கு இடையில் உள்ள தொலைவை இதன் மூலம் கடந்து செல்லலாம். மலைகள்மீது கம்பங்கள் நடப்பட்டுள்ளன ; அவற்றில் வலிமை மிக்க மின்சாரக் கம்பிகள் இணைக்கப்பட்டுள; அக்கம்பிகளின் துணையால் ஒரு பெட்டி வானத்தில் மிதந்து செல்வதுபோல ஓடுகிறது. இந்த மின்சார வண்டிப் பிரயாணம் மிகுந்த மகிழ்ச்சி ஊட்டுகின்றது. இவ்வண்டிகள் அடிக்கடி ஒன்றன் பின் ஒன்ருகப் போவதால், பிரயாணிகள் நெருக்கிக்கொண்டு ஏறித் துன்பப்படவேண்டுவதில்லை.

பனிக்காலத்தில் இருப்புப் பாதைகள், ரயில் வண்டிகள் முதலியவற்றின்மீது பனி பெய்து உறைந்துவிடும். ஜப்பானின் வட பகுதியில் பனிக்காலத்தில் இங்ஙனம் நிகழும். அதற்கென ஜப்பானியர் பனி விசிறி ஒன்றைச் செய்துள்ளனர். ரயில் இஞ்சினுக்கு முன்புறம் அதனை இணைத்துவிட்டால், அது பாதைமீது விழுந்து மூடிக் கொண்டிருக்கும் பனியை விலக்கிக்கொண்டே போகும். பொதுவாக, ஜப்பானில் இருப்புப் பாதைகள் மலைகளைக் குடைந்தும், கடலடியிலும், நிலத்துக்கு அடியிலும், மேடு பள்ளங்களிலும், மலைமீதும் செல்பவையாக இருந்தும், அங்கே ரயில் விபத்துக்கள் ஏற்படுவதில்லை என்பதி லிருந்து, அந்நாட்டினரின் திறமையை நன்கறியலாம். 'மீட்டர் கேஜ்' இருப்புப் பாதையில், மிகுந்த வேகமாக ரயில் வண்டிகளை ஓட்டியும், விபத்துக்கள் ஏற்படாவாறும், பிரயாணிகள் உள்ளக் கிளர்ச்சி கொள்ளுமாறும் ரயில் பிரயாணம் நடைபெறுவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

**மோட்டார் முதலியன**

ரயில் வண்டிகள் தவிர, மோட்டார் பஸ் வண்டிகள் ஜப்பானில் மிகப் பலவாக இருக்கின்றன. நகரங்களில் எங்குப் போகவேண்டுமெனினும், இவை பயன்படுகின்றன. ஜப்பானில் பிரயாணிகள் போக்குவரவு வேலையில் 20,000 பஸ் வண்டிகள் ஈடுபட்டிருக்கின்றன. இவை தவிர, மோட்டார் வாடகை வண்டிகள் (Taxi cabs) பல்லாயிரக் கணக்கில் இருக்கின்றன. ஜப்பானில் பத்தாயிரம் பேருக்கு 26 மோட்டார் வண்டிகள் விகிதம் இருக்கின்றன என்று அந் நாட்டவர் கணக்கிட்டிருக்கின்றனர். அங்கு இன்று பிரயாணிகள் போக்குவரவுக்கென ஒன்றரை லட்சம் மோட்டார் வண்டிகள் (பஸ் வண்டிகளுட்பட) இருக் கின்றன.

இவையன்றி, சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஆட்டோ ரிக்ஷா, மோட்டார் ஸ்கூட்டர், மனிதர் இழுத்துச்

செல்லும் ஜின் ரிக்ஷா, குதிரை வண்டி முதலியனவும் போக்குவரவுக்கு உதவுவனவாக இருக்கின்றன. ஜப்பானியர் சைக்கிள்களில் மிகுந்த சுமை ஏற்றிச் செல்லுகின்றனர். ஆண்களும் பெண்களும் அங்கு சைக்கிள் வண்டிகளை மிகுதியாகப் பயன்படுத்திவருகின்றனர்.

## படகு முதலியன

ஜப்பான், குறுக்கும் நெடுக்குமாக ஆறுகளும் ஏரிகளும் நிறைந்த நாடாக இருப்பதால், படகுப் போக்குவரவு அங்கு மிகுந்திருக்கிறது. படகுகள், 'லாஞ்ச்' எனப்படும் மோட்டார்ப் படகுகள், சிறு கப்பல்கள் முதலியவை பிரயாணிகள் போகவரப் பயன்படுகின்றன. ஜப்பானியர் நிலத்திலே லாரிகள் மூலம் மிகுந்த சுமைகளைக் கொண்டுசெல்வது போலவே, படகுகள் மூலம் மிக்க சுமையுள்ள பொருள்களை ஏற்றிச் செல்கின்றனர். மாடுகள், லாரிகள் முதலியவற்றையும் படகுகள் மூலம் அனுப்பலாம்.

இவை தவிர, கடலிற் செல்லும் பெரிய கப்பல்களும் விமானங்களும் நெடுந்தொலைச் செலவிற்குப் பயன்படுகின்றன. நாள்தோறும் கப்பல்களும் விமானங்களும் புறப்படுவனவும் வந்து சேர்வனவுமாக இருக்கின்றன. சுற்றுப்புற நாடுகள் பலவற்றிற்கு நாள்தோறும் பன்முறை புறப்படும் கப்பல்களும் இருக்கின்றன. ஜப்பான் வாணிகத்திற் சிறந்த நாடாகலின் சுற்றுப்புற நாடுகளுடன் போக்குவரவுத் தொடர்பு மிகுந்துள்ளது.

## போக்குவரவு வசதிகள்

ஜப்பானியர் போக்குவரவுக்கான வசதிகளை மிகச் செம்மையாக வைத்துக்கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து ஜப்பானைக் காண வருபவர்களுக்கு எத்தகைய துன்பமும் இல்லாமல் ஜப்பானிலுள்ள சிறப்பு மிக்க இடங்களையும், காணத்தகும் காட்சிகளையும் எளிதில் கண்டு வர

வாய்ப்பளிக்கும் பிரயாண அலுவலகங்கள் பெரிய நகரங்கள் யாவிலும் இருக்கின்றன.

பொதுவாக, வெளிநாட்டிலிருந்து செல்வோர் ஜப்பான் நகரங்களின் தெருக்களில் வழி தெரியாமல் திகைத்து, ஜப்பானியர் எவரையேனும் வழி கேட்டால், அவர் வாய் திறவாமல் ஒரு துண்டுத்தாளை எடுத்து, அதில் திசைகளைச் சுட்டிக் கோடுகள் இழுத்து, போய்ச் சேரவேண்டும் இடத்தைத் தெளிவாக வரைந்து கொடுத்துவிடுவர்.

இரண்டாம் உலகப் போரினுல் உண்டான இடுக்கண்களின் பலனுக இன்று ஜப்பானியர் பல இடர்களுக்கு ஆளாகிக் கிடப்பினும், நலன்கள் பல குறைந்து காணப்படினும், தம் நாட்டைச் செம்மைப்படுத்தும் வேலையில் மிக்க சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருப்பதால், சில ஆண்டுகளில் ஜப்பான் மேம்பட்டு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# 3. கல்வி

## அனைவரும் கற்றவர்

“ கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் ”

என்னும் தமிழ் மறை மொழியை நன்குணர்ந்தவர் போன்று, ஜப்பானியர் அனைவரும் கல்வியில் பெருங்கவலை காட்டிக் கல்வியறிவைப் பெற்றுவருகின்றனர். ஜப்பானில் கல்லா தவரைக் காணுதல் அரிது. ஜின் ரிக்ஷா இழுத்தோடும் எளியவனும் கற்றவனே என்பதை, அவன் ஓய்ந்து அமரும் நேரத்தில் சட்டைப் பையிலிருந்து செய்தித்தாளை எடுத்துப் பிரித்துப் படிக்கும் காட்சியிலிருந்து நன்கு உணரலாம்.

ஜப்பானியர் கல்வி கற்பதைத் தங்கள் இன்றியமை யாக் கடமைகளுள் ஒன்றாகக் கருதுகின்றனர். படியாத வரை இழிந்தவராகக் கருதும் மனப்பான்மை அங்கு வளர்ந்துவருகிறது. எனவே, ஒவ்வொருவரும், ஆண்டில் முதிர்ந்திருந்தாலும் எங்ஙனமேனும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்தினரும் தவறாமல் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பு கின்றனர்.

## கல்வியின் பாகுபாடுகள்

ஜப்பானில் பழங்காலக் கல்வி முறை 1947-ஆம் ஆண்டில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அதனால் கல்வி பரவவும், விஞ்ஞானக் கலை பெருகவும், பொது அறிவியல் வளரவும் இடம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறலாம்.

ஜப்பானியச் சிறுவர் சிறுமியர் கல்வி கற்கவேண்டும் காலம் பதினாறு ஆண்டுகள் என வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதினாறு ஆண்டுக் கல்விப் பருவம் நான்கு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

முதல் பிரிவு ஆறு ஆண்டுகளுக்குரியது. அதாவது முதற் பிரிவுப்படி, குழந்தைகள் ஆறு ஆண்டுகள் படித்தாக

வேண்டும். இந்த முதற் பிரிவுக் கல்விக்குத் **தொடக்கக் கல்வி** என்பது பெயர். இத்தொடக்கநிலைக் கல்வியை ஆறு ஆண்டுகளில் படித்து முடித்த பிறகு, இரண்டாம் பிரிவாகக் கீழ்நிலைக் கல்வி பயில வேண்டும். இதற்கு உரிய காலம் மூன்று ஆண்டுகளாகும். இக்கல்வி பெற்ற பிறகு, மேல்நிலைக் கல்வி பெறுவது மூன்றும் பிரிவாகும். மேல் நிலைக் கல்விக்கென ஒதுக்கப்பட்டிருப்பது மூன்று ஆண்டு களாகும். அம் மூன்றுண்டுகளில் மேல்நிலைக் கல்வியை முடித்துவிட்ட பின்னர், நான்காவதாக இருப்பது கல்வி இறுதி நிலையாகிய பல்கலைக் கழகக் கல்வியாகும். இக்கல்வி பெறுவதற்குரிய காலம் நான்கு ஆண்டுகள். இந்தப் பதினுறுண்டுக் கல்வியை ஒரு மாணவன் முடித்துவிட்டால், அவன் கல்வி அறிஞன் என மக்களால் மதிக்கப்பெறுவான். அவனுக்கு ஜப்பான் பல்கலைக் கழகம் பட்டம் வழங்கு கின்றது.

## தொடக்கக் கல்வி

முதற் பிரிவாகிய தொடக்கக் கல்வி நிலையங்கள் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் 99·59 சத விகிதம் ஜப்பானியப் பிள்ளைகள் கல்வி கற்றுவருகின்றனர். இந்தத் தொடக்கக் கல்வி வகுப்புக்களில் வகுப்பொன்றுக்கு முப்பத்தெட்டுக் குழந்தைகள் வீதம் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இந்தத் துவக்கப் பள்ளிகள் ஜப்பானில் இருபதாயிரம் இருக்கின்றன. இவற்றில் வந்து படிக்கும் குழந்தைகளின் தொகை ஒரு கோடி. இக்குழந்தைகளுக்கு மூன்று லட்சம் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

தொடக்கப் பள்ளிகளில், தாய்மொழி (ஜப்பானிய மொழி), சமூக அறிவியல், கணக்கு, விஞ்ஞானம், இசை, ஓவியம், சிறு கை வேலைகள், கைத்தொழில், உடற் பயிற்சி ஆகியவை கட்டாயமாகக் கற்பிக்கப்படுகின்றன. இவற்றுடன் குழந்தைகளின் திறமை எதில் மிகுந்திருக்

கின்றதோ, அதனை விருப்ப பாடமாக வைத்து ஆசிரியர் கற்பிக்கின்றனர்.

## கீழ்நிலைக் கல்வி

இங்ஙனம் ஆறு ஆண்டுகள் படித்து முடித்த பிறகு, இரண்டாம் பிரிவாகிய கீழ்நிலைக் கல்வி பயிலுதல்வேண்டும். இக்கல்வியும் ஜப்பானில் கட்டாயக் கல்வியாகவே மதிக்கப் படுகிறது. இக்கல்விக்குரிய மூன்று ஆண்டுகளில், தொடக்கக் கல்வி பயின்று வந்திருக்கும் குழந்தை களின் உள்ள நிலை வளர்ச்சிக்கு ஏற்றவாறு கல்வி கற்பிக்கப்படுகிறது. இங்குத் தரப்படும் பொதுக் கல்வி, அக்குழந்தைகளின் திறமையை வளர்க்கக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, குழந்தைகளின் திறமை எந்தெந்தத் துறையில் மிகுந்துள்ளதோ, அவ்வத் துறைக் கல்வி விரிவாகக் கற்பிக்கப்படுகிறது. கீழ்நிலைக் கல்வி கற்பிப்பதற்கென்று பள்ளிக்கூடங்கள் தனியே அமைந்திருக்கின்றன. ஜப்பானில் இத்தகைய கல்வி நிலையங்கள் இன்று பதினையாயிரம் இருக்கின்றன. இவற்றில் நாற்பத்தெட்டு லட்சம் மாணவர்கள் கல்வி பெறுகின்றனர்; இரண்டேகால் லட்சம் ஆசிரியர்கள் இவர் கட்குக் கற்பிக்கின்றனர்.

பொதுவாகக் கீழ்நிலைப் பள்ளிக்கூடங்களில் கல்வி இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கட்டாயக் கல்வி; மற்றொன்று விருப்பக் கல்வி. ஜப்பானிய மொழி பயில்வது, சமூக அறிவியல், கணக்கு, இசை, ஓவியம், சிறு கைவேலைகள், உடற் பயிற்சி, கைத்தொழிற் பயிற்சி முதலியவை கட்டாயக் கல்வியில் அடங்கும். வெளிநாட்டு மொழிகளை-சிறப்பாக ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளுதல், எழுத்தாளராதல், கைத் தொழில்களில் வல்லுநராதல் முதலிய பிற துறைக் கல்விகள் யாவும் விருப்ப பாடத்தில் அடங்கும்.

## மேல்நிலைக் கல்வி

இவ்வண்ணம் தொடக்கக் கல்வியை ஆறு ஆண்டுகளிலும், கீழ்நிலைக் கல்வியை மூன்றுண்டுகளிலும் படித்து முடிக்கும் மாணவர்கள், பின்பு மேலும் மூன்றுண்டுகள் மேல்நிலைக் கல்வி பயிலுதல் வேண்டும். கீழ்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவரே, மேல்நிலைக் கல்வி நிலையங்களில் சேர்க்கப்படுவர். அங்குப் பல்கலைக் கழகக் கல்வி பெற விருப்பமுடைய மாணவர்களுக்கு உயர்தரப் பொதுக் கல்வி கற்பிக்கப்படுகிறது. அங்குப் படித்து முடித்தவுடன் வேலைக்குச் செல்ல நாடுபவர்களுக்கு, அதற்கேற்றவாறு அலுவலகங்களில் பணியாற்றுதற்குரிய முறையில் உயர் தரப் பண்பாடுகள் நிறைந்த பொதுக் கல்வி கற்பிக்கப் படுகிறது.

இவ்வாறு உயர்நிலைக் கல்வி கற்பிக்கப்படும் பள்ளிக் கூடங்கள் ஜப்பானில் 3210 இருக்கின்றன. இப்பள்ளிக் கூடங்களில் பன்னிரண்டு லட்சம் மாணவர்கள் உயர்நிலைக் கல்வி பெறுகின்றனர்.

## பலவகைப் பள்ளிகள்

இந்த வகையில் கல்வியைப் பெறுவதற்காகப் பள்ளிக்கு வர முடியாத நிலைமையில் உள்ளவர்களுக்கென்று ஓய்ந்த நேரத்தில் கற்பிக்கத் தனிப் பள்ளிக்கூடங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கின்றன. இரவு நேரத்தில் மட்டும் படிக்க வசதி உடையவர்களுக்கென்று இரவுப் பள்ளிக்கூடங்களும் அமைந்துள்ளன. எந்த வகையிலும் வீட்டை விட்டு வெளிப்பட முடியாத நிலையில் உள்ளவர்கள் வீட்டிலிருந்த வண்ணமே படித்து அரசாங்கத் தேர்வுக்கு வரக் கூடிய வாறு அஞ்சல் வாயிலாகக் கற்பிக்கும் பள்ளிகளும் ஜப் பானில் பல உண்டு.

ஜப்பானியர் அனைவருக்கும், அவர்களுக்கு எவ்வெந் நிலையில் எவ்வெவ்வாறு கல்வி பயில வசதியிருக்கிறதோ அவ்வந் நிலைக்கேற்றவாறு கல்வி கற்பித்து, அனைவரை

யும் கற்றறிந்தவராக்க வேண்டும் என்னும் ஒரே பெரு நோக்குடன் ஜப்பான் அரசாங்கம் கல்வித் தொண்டாற்றி வருகிறது என்பது மேற் கூறியவற்றிலிருந்து மிகத் தெளிவாக விளங்குகிறது அன்ருே? நம் நாட்டில் இருப்பது போன்று வயது வரையறையோ, கல்லூரியில் படித்தே ஆகவேண்டு மென்னும் வற்புறுத்துதலோ அங்கில்லே. அரசாங்கக் கல்வித் திட்டத்தை ஏற்று, அதன்படி உள்ளவற்றை எங்ஙனமேனும் கற்று அரசாங்கத் தேர்வில் வெற்றி பெறுபவர் அந்தக் கல்விக்குரிய பட்ட தாரிகளாகின்றனர். சுரங்கத்தில் வேலே செய்யும் தொழிலாளரும், இராப்பகலாக உழைத்துப் பெருங் குடும்பங் களேக் காக்கும் பொறுப்பினே ஏற்றுக்கொண்டுள்ள ஆண் களும் பெண்களும், எளிதில் படித்துத் தேர்ந்து பட்டங்கள் பெறுகின்றனர்; புகழ் பெறவேண்டும் என்னும் அவாவினுல் மேற்கொண்டு படிக்கின்றனர். இவ்வகையில் நாட்டு மக்கள் அனேவருமே கற்றவராதற்கு ஜப்பான் நாட்டில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## கல்லூரிக் கல்வி

இங்ஙனம் ஒன்பதாண்டுகள் கற்று உயர் நிலேக்கல்வி பெற்ற மாணவரே பல்கலேக் கழகக் கல்வி பெறுவதற் குரிய தகுதி வாய்ந்தவராகின்றனர். அங்கே, உயர்ந்த இலக்கியங்கள், சட்டம், மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல் (இஞ்சினியரிங்), மருந்துகள் செய்தல், இரசாயன அறிவு, காட்டுக்கலே (Forestry), உழவுத் தொழிற்கலே, விலங்கு மருத்துவம், பொருளாதாரம், வாணி கக்கலே, அரசியல் முதலிய உயர்தரக் கலேகள் அனேத்தும் கற்பிக்கப்படுகின்றன. மாணவர் தமக்கு விருப்பமான கலேயை மேற்கொண்டு, அதனே நான்காண்டுகளில் படித் துப் பட்டம் பெறலாம். இவற்றுள் மிகுந்த திறமையுடை யவர்க்குப் பேரறிஞர் (**டாக்டர்**) என்னும் பட்டம் வழங்கப் படுகிறது. ஒருவர் சட்டக் கலேயில் அறிஞரானுல் சட்டப்

பேரறிஞர் (Doctor of laws) எனவும், விஞ்ஞானத்தில் பேரறிஞராயின் விஞ்ஞானப் பேரறிஞர் (Doctor of science) எனவும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

பல்கலைக் கழகக் கல்வி பயிற்றுவதற்காக ஜப்பான் முழுவதிலும் 676 கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் நான்கரை லட்சம் மாணவர்கள் பயில்கின்றனர். டோக்கியோவிலுள்ள டோக்கியோ பல்கலைக் கழகமும், வாசீதாப் பல்கலைக் கழகமும் சிறப்பானவை. வாசீதாப் பல்கலைக் கழகத்தில் மட்டும் 20,000 மாணவர் உளர். இப் பல்கலைக்கழகக் கலையரங்கில் நடராஜப் பெருமானின் திருவுருவப் படம் வைக்கப்பட்டிருக்கிறது.

டோக்கியோவில் பல்கலைக் கழகக் கல்வி பயிலப் பெண்களுக்கென்று தனிக் கல்லூரி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. டோக்கியோ பல்கலைக் கழகம் உலகப் புகழ் வாய்ந்தது. இந்தப் பல்கலைக் கழகத்தில் முப்பதாண்டுகள்வரை ஆங்கிலப் பேராசிரியராயிருந்த ஏ. டபிள்யூ. மெட்ஸே என்பவர் இன்றளவும் ஜப்பானியரால் பெரிதும் புகழப்பட்டு வருகிறார். நம்நாட்டில் ஒரு கல்லூரித் தலைமைப் பேராசிரியராயிருந்த டாக்டர் ஜேம்ஸ் எச். கஸின்ஸ் என்பாரும் டோக்கியோப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியராயிருந்துள்ளார். இதனால் ஜப்பானியர் தங்கள் மக்களுடைய கல்வியைப் பெருக்குவதற்காக வெளிநாடுகளிலிருந்தும் பேரறிஞர்களை வரவழைத்துக் கல்வி கற்பிக்க முயன்றுவருகின்றனர் என்பது தெளிவாகிறதன்றோ?

## தொழிற் கல்வி நிலையங்கள்

ஜப்பானியருடைய கைத்தொழில்கள் மிகுந்த முன்னேற்றம் அடைந்திருப்பதற்கும், அந்நாட்டு மக்கள் முற்போக்குடையராக இருப்பதற்கும் அனைவரும் கல்வி கற்றவராயிருப்பதே ஏற்ற காரணமாகும். ஜப்பான் அரசாங்கம், ஒன்பதாண்டுகள்வரை தங்கள் குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி அளித்துவருதலால்,

ஜப்பானில் அறியாமை அகற்றப்பட்டு, அனைவரும் கற்றறிந்தவராக விளங்குகின்றனர். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் கற்றுக் கொடுப்பதுடன் நில்லாது, சிறுவயது முதற்கொண்டே தொழிற் கல்வியையும் சேர்த்துக் கற்பிக்கின்றனர். ஜப்பானில் கல்வியளிக்கும் நிலையங்கள் பல இருப்பது போல் தொழிற்கல்வி பயிற்றுவிக்கும் நிலையங்களும் பல இருக்கின்றன. உயர்தரக் கைத்தொழில்களில் பயிற்சியளிக்கும் நிலையங்களும் ஆங்காங்கே இருந்து, ஒன்பதாண்டுவரை கல்வி பயின்ற மாணவர்களுக்குத் தொழில் துறையில் உயர்தரப் பயிற்சி அளித்துவருகின்றன. ஜப்பான் அரசாங்கம் கல்வியையும் கைத்தொழிலையும் சேர்த்துக் கற்பிப்பதன் பயனுகவே, இன்று ஜப்பான் மாணவர்கள் கல்வி அறிவுடையவராகவும் தொழிற் பயிற்சி பெற்றவராகவும் விளங்குகின்றனர். எனவே, ஜப்பானியர் தொழில் துறையில் பிற நாட்டினரைவிட முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர் எனின், அதற்குக் காரணம் அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி முறையேயாகும்.

**ஆய்வுக் கூடங்கள்**

ஜப்பானில் பல இரசாயன ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன. அவற்றுட் பல அரசாங்கத்துடன் நேராகத் தொடர்பு கொண்டவையாகவும், சில அரசாங்க ஆதரவு பெற்றவையாகவும் இருக்கின்றன. அவற்றில் மாணவர் பலர் ஆய்வுகள் நடத்தித் தங்கள் நாட்டுத் தொழிலையும் வாணிகத்தையும் செல்வத்தையும் பெருக்கும் துறைகளில் தொண்டாற்றிவருகின்றனர்.

**செய்தித் தாள்கள்**

ஜப்பானில் நாட்டுமொழியில் வெளிவரும் செய்தித் தாள்கள் ஒவ்வொன்றும் லட்சக்கணக்கில் வெளிவருவனவாகவே இருக்கின்றன. " **அஸாஹி ஷிம்புன்** " என்னும்



திரு. நாயடு அவர்கள் 'ஓஸகா ஷிம்புன்' ஆசிரியருடன்

தாள் அரைநூற்றாண்டுக் காலமாக வெளிவருவது; செல்வாக்கு மிக்கது. இஃது, அரசியல் கட்சிச் சார்பு ஏதுமின்றி, உலக நல்லுறவை உண்டாக்கும் நோக்கத்துடன் தொண்டாற்றிவருகிறது. கண்ணோட்டமின்றிக் கருத்துக்கள் வெளியிடுவதால் இதனை அனைவரும் ஆதரிக்கத் தொடங்கினர். இது டோக்கியோவில் ஒன்றும் ஒஸகாவில் ஒன்றும், செய்புவில் ஒன்றுமாக மூன்று நகரங்களில் மூன்று தனித்தனித் தாள்களாக வெளிவந்த போதினும், 'டெலிபோன்' மூலம் ஒன்றுக்கொன்று தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதனால் ஒரே செய்தித்தாள் போன்று காணப்படுகிறது. டோக்கியோவில் இது நாள்தோறும் மாலைப் பதிப்பு உட்பட 60 லட்சம் படிகள் வெளியிடப்படுகின்றன. சிறிய தீவுகளில் வாழும் எட்டுக்கோடி மக்களிடை இத்துணைப் படிகள் செலவழிகின்றன என்பது வியப்புக்குரிய செய்தியாகும் அன்றோ? 'அஸாஹி ஷிம்புன்' ஆசிரியர் என்னைச் சந்தித்து அளவளாவியபோது, அச்செய்தித்தாள் பற்றிய விளக்கங் கூறக்கேட்டு நான் வியப்புற்றேன்.

ஜப்பானில் இவ்வாறு செய்தித்தாள்கள் நாள்தோறும் மிகுதியாகச் செலவாவதற்குக் காரணம், அங்குள்ள மக்கள் அனைவரும் கல்வியறிவு உடையவராயிருப்பதேயாகும். இங்ஙனம் மக்களின் பேராதரவு இருப்பதால், இச்செய்தித்தாள் நிலையம் தன் செய்தித் தாள்களை உடனுக்குடன் மக்களிடை வழங்குவதற்காக ஒன்பது வானவூர்திகளை இரண்டாம் உலகப் போருக்குமுன் வைத்திருந்தது குறிப்பிடத் தக்கது. வானவூர்திகளைச் சொந்தத்தில் வைத்துக்கொண்டு செய்தித்தாள்களை வழங்கும் நிலையம் உலகிலேயே வேறொன்றும் இருக்க முடியாதென்று கூறலாம். இந்நிலையம் தந்தியில் செய்திகளை அனுப்புவதற்காகத் தன் சொந்தச் செலவில் ஒஸகாவுக்கும் டோக்கியோவுக்கும் இடையில் தந்திக் கம்பிகளை இணைத்திருக்கிறது. 'அஸாஹி ஷிம்புன்' மட்டுமல்லாமல், ஒஸகா

ஷிம்புன் (Osaka shimbun) என்னும் ஜப்பான் மொழிச் செய்தித்தாளும், ஜப்பான் கமர்ஷியல் கெஸட், மைனிச்சி (Mainichi), ஜப்பான் இண்டஸ்ட்ரியல் பிரஸ், ஸ்டார் அண்டு ஸ்ட்ரைப்ஸ், ஜப்பான் டைம்ஸ், ஜப்பான் நியூஸ், பயர்ஸ் டெய்லி நியூஸ் என்னும் ஆங்கிலச் செய்தித் தாள்களும் உள்பட நாள்தோறும் 124 செய்தித்தாள்கள் வெளிவருகின்றன. இவற்றுள் பதினேழு டோக்கியோ வில் நடைபெறுகின்றன. இவை தவிர வாரம், திங் களுக்கு இருமுறை, திங்களுக்கு ஒருமுறை என வெளி யிடப்படும் செய்தித் தாள்கள் 1709 இருக்கின்றன. ஜப்பான் மக்கள் அனைவரும் செய்தித்தாள்களைப் படிப் பவராயிருப்பதால், உலகச் செய்திகளையும் அரசியல் நுணுக் கங்களையும் வணிக நிலைகளையும் நன்கறிந்து, தங்களையும் தங்கள் நாட்டையும் முன்னேறச் செய்கின்றனர்.

ஜப்பானியர் இலக்கியம், வரலாறு, கதைகள், நிலம் முதலியவை பற்றிய நூல்களை மிகுதியாக வெளியிட்டிருக் கின்றனர். கதைகள் பல அவ்வப்பொழுது வெளியிடப் படுகின்றன. ஜப்பானில் அனைவரும் படித்தவராதலால் ஆண்களும் பெண்களுமாக நூலாசிரியர் பலர் இருக் கின்றனர்.

# 4. கைத்தொழில்கள்

ஜப்பான் என்னும் பெயருக்கு அந்நாட்டு மக்கள் எவ்வகைப் பொருள் கூறினும், புற உலக மக்கள் அனைவரும் 'தொழில் திறன்' என்றே பொருள் கொள்ளுகின்றனர். உலகில் எவ்வெப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அவ்வளவும் ஜப்பான் நாட்டில் செய்யப்படுகின்றன. சிறிய குண்டூசி முதல் மிகப் பெரிய போர்க்கப்பல்கள் ஈருக அனைத்தும் ஜப்பானில் செய்யப்படுகின்றன எனின், ஜப்பானியர் தொழில்திறமை மிக்கவர் என்பது தெளிவாகிறதன்றோ ?

## பட்டுத் தொழில்

ஜப்பானில் மிகச் சிறந்ததும் தலையாயதுமாகிய தொழில் பட்டு உற்பத்தியேயாகும். அந்நாட்டில் எந்தப் பகுதியிலும் பட்டுத்தொழில் நடைபெறுவதைக் காணலாம். ஜப்பான் கடைகளில் பூப்போட்டவை, கோடிட்டவை, பல நிறமுள்ளவை, மெல்லியவை, தடித்தவை எனப் பலவகையான பட்டாடைகள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

பட்டுத்தொழில் ஜப்பான் நாட்டின் மிகப் பழமையான தொழிலாகும். கி. மு. 2-ஆம் நூற்றுண்டுக்கு முன்னிருந்தே அந்நாட்டில் பட்டுத்தொழில் நடைபெற்றுவருகிறது என்பதற்குரிய சான்றுகள் இருக்கின்றன.

பட்டுப் புழுக்களை வளர்ப்பதில் ஜப்பானியர் மிகுந்த ஊக்கம் காட்டுகின்றனர்; விஞ்ஞான அறிவைக்கொண்டு புதிய முறைகளில் பட்டுப்பூச்சி முட்டைகளை உண்டாக்கி, ஒரே சமயத்தில் மிகப் பலவான புழுக்களை உற்பத்தி செய்கின்றனர். கட்டெறும்பு அளவில் பிறக்கும் இப் புழுக்கள் முசுக்கட்டை இலைகளை உணவாகக் கொண்டு

ஒன்றரையங்குல நீளத்திற்கு வளர்ந்து, ஆறு வாரங்களில் பட்டுநூற்கும் வேலையைத் தொடங்கிவிடுகின்றன. பிறகு மூன்று வாரங்களில் இப்புழுக்கள் நூற்கூடு கட்டிப் பூச்சி களாகிவிடுகின்றன. ஜப்பானியர் இப்பூச்சிகளை முட்டை யிடும்வரை காக்கின்றனர்; பிறகு, அக்கூடுகளை வெந் நீரில் இட்டுப் பட்டுநூல் எடுக்கும் வேலையைத் தொடங்கி விடுகின்றனர். ஒரு கூட்டில் எழுநூறு முதல் ஆயிரம் கெஜ நீளப் பட்டுநூல் கிடைக்கிறதாம். ஜப்பானில் அரச குடும்பத்துக்கென்று மிகச் சிறப்பான முறையில் பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. ‘நிஷிஜின்’ என்னும் ஊரில் உற்பத்தியாகும் பட்டு முழுவதும் அரச குடும்பத் துக்கே உரியவையாகும்.

இந்தப் பட்டுத் தொழில் ஜப்பானியருக்கு மிக்க வருவாய் அளிக்கும் தொழிலாக நடைபெற்றுவருகிறது. கியோட்டோ மாவட்டம் முழுவதிலும் இத்தொழில் முதன்மை பெற்று விளங்குகிறது. ஜப்பானில் செய்யப் படும் பட்டுக்கு உலக நாடுகளில் மிக்க மதிப்புண்டு. வேற்று நாட்டவர், ஜப்பான் பட்டைப் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். எனவே, ஜப்பானில் சற்றேறக்குறைய 6,677 சதுரமைல் நிலப்பகுதியில் முசுக்கட்டைச் செடி பயிராக்கப்பட்டு, பட்டுப்பூச்சிகள் வளர்க்கப்படுகின்றன. பட்டுநூல் எடுக்கும் தொழிலில் ஒன்பது லட்சம் ஜப்பானி யக் குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன எனின், இத் தொழி லின் பெருக்கத்துக்கு வேறு சான்றுகள் தேவையில்லை அல்லவா? இவ்வகையில் ஆண்டுதோறும் ஜப்பானியர் நூற்றிருபத்தொரு கோடிச் சதுர கெஜம் பட்டுத்துணி உற்பத்தி செய்து விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

இந்திய அரசாங்கத்தார், மைசூர், சென்னை, கல்கத்தா முதலிய இடங்களிலுள்ள பட்டுத் தொழில் நிபுணர்களைச் சென்ற ஆண்டு ஜப்பானுக்கனுப்பி அங்குள்ள பட்டுத் தொழிற்சாலைகள் முழுவதையும் அவ்வரசாங்கத்தின் உதவி யுடன் பார்த்துப் பல நுணுக்கங்களை அறிந்து வருமாறு

செய்தார்கள் எனின், ஜப்பானியருடைய பட்டுத் தொழிலின் மேம்பாடு நன்கு தெளிவாகிறதன்றோ !

## முத்து

முத்துக் குளித்தலைச் சிறப்புற நடத்தி, உலகிற்கு முத்துக்களை வாணிகம் செய்தவர்கள் பண்டைத் தமிழ் மக்கள் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுபட எடுத்துக்காட்டுகின்றன. பாண்டிய நாடு முத்து வாணிகத்தைச் சிறப்பாக நடத்தியது. இன்றும் பாண்டிய நாட்டு மக்கள் முத்தெடுக்கும் தொழிலைக் கைவிட்டிலர்.

ஆனால், தமிழகத்தாரும், முத்தெடுக்கும் தொழிலில் ஈடுபட்ட பிறரும், இயற்கையாகக் கடலில் சிப்பிகளின் வயிற்றில் பிறந்த முத்துக்களையே எடுப்பர். இவர்கள் கடலில் மூழ்கி, முத்துச்சிப்பிகளை வெளிக்கொணர்ந்து, அவற்றினைப் பிளந்து, உள்ளிருக்கும் முத்துக்களை எடுத்துக்கொள்வர். இவ்வாறு செய்வதால், முத்திருப்பவை, இல்லாதவை எனப் பல முத்துச்சிப்பிகள் பாழாகிப் போகின்றன; முத்தும் தேவையான அளவு கிடைப்பதில்லை. அதனால் முத்துக்களின் விலை அளவுகடந்ததாகிறது.

ஆனால், ஜப்பானிய அறிஞர்கள் சிப்பிகளுக்குச் சேதமின்றி, முத்து நிறையக் கிடைக்குமாறு முத்தெடுக்கும் தொழிலை வளர்த்திருக்கின்றனர்.

முத்தை விரும்பாத மக்கள் உண்டா? நம் நாட்டில் இது நவ மணிகளுள் ஒன்றாகப் பெருமை பெற்றுள்ளது. விலை உயர்வினால் செல்வர் மட்டும் இதனைப் பெற முடிகிறது. செல்வ மகளிர் முத்தைப் பொன்னுடனும் பிற மணிகளுடனும் சேர்த்து, மாலையாகவும் பிற அணிகளாகவும் செய்து அணிதலைத் தமிழகத்தில் இன்றும் காணலாம். மேலும் தமிழ் மருத்துவர் முத்தை நீறாக்கிப் பெரும் பிணிகள் பலவற்றைப் போக்குதற்குரிய மருந்தாகப் பயன் படுத்துதல் தொன்றுதொட்டு நம் நாட்டில் வழக்கமாகும்.

முத்துத் தமிழகத்துச் செல்வ மகளிரது அழகு மிக்க அணி யாகத் திகழ்வது மட்டுமின்றித் தமிழ் இலக்கியங்களில் இடம் பெறும் பெருமையையும் அடைந்திருக்கிறது.

முத்துப் பெண்ணுலகம் பெரிதும் உவக்கும் சிறப் புடைய பொருள் என்பதை அறிந்த ஜப்பானியர், இயற்கை யாகக் கடல் தரும் அளவுடன் மனம் நிறைவுருமல், வேண் டும் அளவு முத்தை உற்பத்தி செய்ய, விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி, இன்று முத்து உற்பத்தி செய்தலே மிகப் பெருந்தொழிலாக ஆக்கிவைத்திருக்கின்றனர். அவர்கள் கண்ணுடி, மெழுகு முதலியவற்றைக்கொண்டு செயற்கை முத்துக்கள் உற்பத்தி செய்வதில் முதலில் ஈடுபட்டிருந் தனர்; எனினும், கடலில் உறையும் சிப்பிகளிடம் வேலை வாங்குவதன் மூலம் இயற்கை முத்துக்களையே செயற்கை முறைகொண்டு மிகுதியாக உற்பத்தி செய்யும் வழியினைக் கண்டனர். அஃது இன்று ஜப்பானியருக்குப் பெருஞ் செல்வம் ஈட்டித் தரும் தொழிலாக வளர்ந்திருக்கிறது.

'மீ' தீவில் 'டோபா' பிரதேசத்துக்கு அருகில்தான் முத்துத் தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. வேனிற் காலத்தில் அங்குக் கடற்கரையில் உலவச் செல்பவர், கடலிலிருந்து ஒருவகைப் பெருமூச்சொலி தொடர்ந்து கேட்டுக்கொண்டிருப்பதை உணரலாம். அது முத்துக் குளிக்கும் பெண்கள், கடல் மட்டத்துக்கு வந்து மூச்சு வாங்குவதால் ஏற்படும் ஒலியே யாகும்.

உலகின் மற்றைப் பகுதிகளில் கடலில் மூழ்கும் தொழில்களை ஆண்கள் மேற்கொண்டிருக்க, ஜப்பானில் இதனைப் பெண்களே செய்கின்றனர். ஆண்களுக்கு இருக்கும் ஈரல்களினும் பெண்களின் ஈரல்கள் குளிரை மிகுதியாகத் தாங்கும் வன்மையுடையவை ஆதலின், ஜப்பான் நாட்டினர் கடலில் மூழ்கும் வேலையைப் பெண்களுக்கென்றே ஒதுக்கிவிட்டனர்.

ஜப்பானியர் செயற்கை முறையில் இயற்கை முத்துக்களை மிகுதியாக உற்பத்தி செய்யும் முறையைப்

பார்ப்போம். பாய்போன்று தட்டையாகச் செய்யப்பட்ட படகுகளையே ஜப்பானியர் மீன் பிடிக்கவும் முத்தெடுக்கவும் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு தட்டைப்படகின் நடுவிலும் குடிசை ஒன்று இருக்கும். படகு கடலில் குறிப்பிட்ட இடம்வரை சென்ற பிறகு, முத்தெடுக்கும் பெண்கள், கடலில் குதித்து மூழ்குவர். இப் பெண்கள் மூழ்கும்போது வெள்ளைப் பருத்தியாலான அரையாடை உடுத்திக்கொள்கின்றனர். அஃதாவது, இடுப்பில் ஒரு சல்லடம், மணிக்கட்டுவரை கையுள்ள ஒரு சட்டை, தலையில் காதுகளை மூடும் வண்ணம் ஒரு குல்லாய், கடலடியில் நன்கு பார்க்கும்படி, கண்களைத் தண்ணீரி னின்று காக்கும் வகையில் அமைந்துள்ள ஒரு பெரிய கண்ணுடி ஆகிய இவையே கடலில் மூழ்கும் பெண்களின் அணிவகை. அவர்கள் வெள்ளைப்பருத்தி உடுப்பு அணிவது, சுருக்களின் தாக்குதலினின்று தப்புவதற் காகும். சுருக்கள் வெள்ளை நிறங்கண்டு அஞ்சுமாம்.

இவ்வாறு கடலுள் மூழ்கும் பெண்ணை ஜப்பானியர் **அமா** (Ama) என்று அழைக்கின்றனர். அமாப் பெண்களே கடலில் மூழ்கி முத்துச்சிப்பிகளைத் திரட்டு கின்றனர். அப்பெண்கள் பெரும்பாலும் இருபது ஆண்டினராகவே காணப்படுகின்றனர். அவர்களுள் மிகச் சிலரே இருபதுக்கும் குறைந்தவராகவும், சிலர் நாற்பதாண்டுகளுக்கு மேற்பட்டவராகவும் இருக்கின்றனர்.

கடலில் மூழ்கும் பெண்கள் தங்களுடன் ஒரு மரத் தொட்டியையும் எடுத்துச் செல்கின்றனர். இத்தொட்டி கயிற்றுல் கட்டப்பட்டுக் கடல் மட்டத்தில் உள்ள படகுடன் பிணிக்கப்பட்டிருக்கும். இத் தொட்டியுடன் மூழ்கிக் கடலடிக்குச் செல்லும் பெண்கள், ஐந்து நிமிடங்கள் வரை கடல் அடியில் கிடக்கும் முத்துச்சிப்பிகளைப் பொறுக்கி எடுத்து மரத்தொட்டியிற் சேர்ப்பர். இவர்கள் முத்தில்லாத சிப்பிகளையே பொறுக்கி எடுப்பர். பழக்கத்திஞல் பெண்கள் சிலர் பத்து நிமிட நேரம் கடலடியில் இருப்பர் ;

பிறகு கடல்மட்டத்துக்கு மேலே வந்து மூச்சுவிடுவர். இவ்வாறு பல முறை கடலுள் மூழ்குவதும் மேலே வந்து மூச்சு வாங்குவதுமாக இப்பெண்கள் முத்துச்சிப்பிகளை மிகுதியாகத் திரட்டிவருவர்.

முத்துச்சிப்பிகள் பொதுவாகப் பத்தாண்டுகள் உயிருடன் இருக்கும். மூன்று நான்காண்டு வளர்ந்துள்ள சிப்பிகளையே முத்துக் குளிக்கும் பெண்கள் பொறுக்கிக் கொண்டுவருவர். முத்துத்தொழில் அலுவலகத்தார், அம்மகளிரால் கொண்டுவரப்பட்ட முத்துச்சிப்பிகளைப் பழுதுபடாமல் மெல்லத் திறந்து, முத்துச்சிப்பி ஓட்டினால் செய்யப்பட்ட சிறிய மணிகளை, ஒரு சிப்பிக்கு ஒன்று வீதம், சிப்பியின் சதை நடுவே வைப்பர்; இத்தொழிலில் இதுதான் மிகக் கடினமான வேலையாகும்; சிறிது தவறினாலும் அச்சிற்றுயிர் மாண்டுபோகும். எனவே, மிகுந்த திறமையும் பழக்கமும் உடையவர்களே இவ்வேலையைச் செய்கின்றனர்; இவ்வாறு சிறு மணி புகுத்தப்பட்ட சிப்பிகள், மீண்டும் கடலுக்கே அனுப்பப்படுகின்றன. அஃதாவது, இரும்புக் கம்பி வலையால் செய்யப்பட்ட கூடு ஒன்றில் இச்சிப்பிகளை இட்டு, ஒரு மூங்கிற் கழியில் அந்த இரும்புக்கம்பி வலைக் கூட்டைப் பிணைத்துக் கடலில் சில அடிகள் ஆழத்தில் கிடக்குமாறு தொங்கவிடுவர். இதுபோன்று ஒரே மூங்கிற் கழியில் பல கம்பிவலைக் கூடுகள் கட்டித் தொங்கவிடப்படும். இங்ஙனம் அப் பகுதிக் கடலோரத்தில் வரிசையாக நீள மூங்கிற் கழிகள் மிதந்துகொண்டிருக்கக் காணலாம்.

இவ்வண்ணம் கடலாழத்தில் விடப்படும் முத்துச் சிப்பிகள் இரண்டு முதல் நான்காண்டுகள்வரை கடல் நீரிலே இருக்கும். இந்நான்காண்டுக் காலத்தில் சிப்பிக்குள் வைக்கப்பட்ட சிறுமணி நல்ல முத்தாக மாறியிருக்கும். சிப்பிக்குள் சதையில் இந்தச் சிறுமணி வைக்கப்பட்ட பிறகு, அதன் சதையிலிருந்து ஒருவகையான பால் கசிந்து, அந்த மணியில் ஒட்டிக்கொள்ளும். இதுபோன்று

நான்காண்டுகள்வரை கசியும் பால் அந்த மணிமீது ஒட்டிக்கொள்வதன் மூலம், அம்மணி நல்ல ஒளி பொருந்திய முத்தாக மாறிவிடும். இரண்டாண்டுகளில் சிப்பியைத் திறந்தால் முன்பு வைக்கப்பட்ட மணி சிறு முத்தாக மாறியிருப்பதைக் காணலாம். நான்காண்டு களில் முதிர்ந்த முத்துக்கள் கிடைக்கும். முத்துக்கள் எடுக்கப்பட்ட பிறகு அச்சிப்பிகள் குறித்த காலம்வரை கடல் நீரிலிட்டு வளர்க்கப்படும்.

சிப்பிகளிலிருந்து முத்துக்களைப் பெயர்த்தெடுப்பது மிக நுண்ணிய வேலையாகும். சிறிது தவறினாலும் சிப்பி உயிரிழக்கும். எனவே, அந்த வேலையையும் பழக்கப் பட்டவர்களே செய்வர். பிறகு முத்துக்களை வகை பிரிக்கும் வேலை நடைபெறும். நல்ல ஒளியும் நிறமும் முதலிற் கவனிக்கப்படும்; உருவம் இரண்டாவதாகக் கவனிக்கப் படும். நல்ல உருண்டை உருவமுடையவையே சிறப் புடையனவாக மதிக்கப்பெறும். பெரியவை, சிறியவை என்னும் உருவ வேறுபாடு ஈற்றில் கவனிக்கப்படுவதாகும். நிறத்தில் சிறிது செம்மை கலந்த வெண்மை முதலாவ தாகவும், வெள்ளிபோன்ற நிறம் இரண்டாவதாகவும், வெண்மை நிறம் மூன்றுவதாகவும், பழுப்பு நிறம் இறுதியானதாகவும் கருதப்படும்.

முத்துச்சிப்பிகள் மிகவும் மென்மை வாய்ந்தவை. கடல் நீரினின்று வெளியே எடுக்கப்படும் முத்துச் சிப்பிகள் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் மீண்டும் கடல் நீருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்; இல்லையெனின், அவை அனைத்தும் மாண்டுவிடக் கூடும். அந்த இருபத்துநான்கு மணி நேரத்திலும் அவற்றுள் நூற்றுக்கு இருபது வீதம் மாண்டு போகுமாம். இதனை உணர்ந்த ஜப்பானியர் முத்துச் சிப்பிகளைத் திரட்டி வந்து, உடனே அவற்றின் சதையில் சிப்பி மணியைச் செருகி வைப்பர். இவ்வாறு செருகிவைத்தல் முத்துச் சிப்பிக்குப் பெரிய துன்பம் தருவதன்று; எனினும் மிகுதியாக முத்துச்

சிப்பிகளைத் திரட்டிவந்து, அவற்றின் தசையில் சிறு மணிகளைச் செருகும் வேலை விரைந்து நடைபெறுவிடின், அவற்றுள் பல மாண்டுவிடும்.

முத்துச் சிப்பிகள் கடல் நீரில் இருக்கும்போதும் நீரின் தட்பநிலை '44 டிகிரி' அளவுக்குக் குறைந்துவிடு மாயின், அவை மாண்டு போகும். இவ்வாறு கடல் நீர் பெரும்பாலும் டிசம்பர் முதல் பிப்ரவரித் திங்கள் வரை குளிர்ந்துவிடுதல் இயற்கை. இந்தக் காலத்தில், முத்துத் தயாரிக்கும் அலுவலர் வெப்ப நீரோட்டம் இருக்கும் இடமாகத் தேடிப் பார்த்து, அவ்விடங்களுக்கு இவற்றை இழுத்துச் செல்வர். சில ஆண்டுகளில் மிகுவெப்ப நீரோட்டம் ஏற்படுதலும் உண்டு. இந்த நீரோட்டம் கடலில் எங்கேனும் ஓரிடத்தில் நிலைத்து நிற்குமாயின், அங்குக் கடலடியில் உள்ள முத்துச் சிப்பிகள் உட்பட, கடல் வாழ் உயிரினங்கள் அனைத்தும் மாண்டுபோகும். இந்த வெப்ப நீரோட்டம் ஏற்பட்டால் கம்பிவலைக் கூடுகள் இந் நீரோட்டம் இல்லாத இடத்திற்கு இழுத்துச் செல்லப்படும். எனவே, இந்தக் கம்பிவலைக் கூடுகளைப் பயன்படுத்துவ தால் குளிர் காலத்தில் வெம்மைப் பகுதிக்கும், வேனிற் காலத்தில் குளிருள்ள பகுதிக்குமாக இவற்றை இழுத்துச் செல்வதன் மூலம் முத்துச் சிப்பிகள் மாண்டுபோகாமல் காக்கப்படுகின்றன. இவை தவிர, நல்ல நீரும் முத்துச் சிப்பிகளின் உயிருக்கு இறுதி உண்டாக்குவதாகும். மழைக் காலத்தில் பெருமழை பெய்து, கடலில் முத்துச் சிப்பிகள் உள்ள பகுதிகளில் நன்னீர் வெள்ளம் போய்ச் சேர்ந்தால், முத்துச் சிப்பிகளின் உயிருக்கு இன்னல் விளையுமாகலின், உடனே, கம்பிவலைக் கூடுகள் கடலில் அதிக ஆழத்தில் இறக்கி விடப்படும். இம் முறையாலும் பயனின்றி முத்துச் சிப்பிகள் சோர்ந்து காணப்படுமாயின், அவை யுள்ள கம்பிவலைக் கூடுகளை மூங்கிற் கழிகளிலிருந்து வெட்டிக் கடலடி போய்ச்சேருமாறு செய்யப்படும். கடலடியிலும், பெரிய மீன்கள், நண்டுகள் போன்றவை

5994

முத்துச்சிப்பிகளை உண்ணுமாயினும் கம்பிவலைக் கூடு களில் உள்ளவற்றை அவை நெருங்க முடியாதன்றோ? கம்பிவலைக் கூடுகள் திங்களுக்கு இருமுறை கவனித்துச் செப்பம் செய்யப்படுகின்றன எனினும், இவற்றிலும் சில சமயங்களில் முத்துச் சிப்பிகளுக்கு இடையூறு நேரிடுவ துண்டு.

இவ்வாறு பலவகை இடுக்கண்களுக்கிடையே இத் தொழில் நடைபெறுவதாலும், சில சமயங்களில் பல முத்துச் சிப்பிகள் மாண்டுபோவதாலுமே செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் இந்த இயற்கை முத்துக்களும் உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடியவாறு இந்த முத்துக் கள் கிடைக்கவில்லை.

ஆண்டுதோறும் ஜூன் முதல் ஆகஸ்ட் திங்கள்வரை முத்துச் சிப்பிகள் திரட்டிச் சிறுமணி புகுத்தும் வேலை செய்யப்படுகிறது. இவ்வாறு முத்துச் சிப்பியைப் பிடித்து, அதன் தசையில் மணி செறுகி முத்தாகும் கலையைச் சீனரே முதலிற் கண்டறிந்தனர். பழங்காலத்தில் ஒரு சீனர் முத்துச் சிப்பி ஒன்றைப் பிடித்து வந்து, அதன் தசையில் புத்தரின் சிறிய உருவம் ஒன்றை வைத்து வளர்த்தனராம். சிறிது காலம் கழிந்த பிறகு, அந்தப் புத்தர் உருவம் முத்தாக மாறியிருந்தது. அதனை அறிந்த **மிக்கிமோட்டோ** என்னும் பெயருடைய ஜப்பானியர் இருபத்து மூன்று ஆண்டுகள்வரை இடைவிடாமல் முத்துச் சிப்பிகளின் வாழ்க்கைபற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து, 1894-இல் செயற்கை முறையில் இயற்கை முத்துக்களை உற்பத்தி செய்வதைக் கண்டறிந்தார். ஆனால் சரியான உருண்டை வடிவத்தில் உற்பத்தி செய்ய அவரால் முடியவில்லை. அதன் பிறகு, மிக்கிமோட்டோவின் முறையைப் பின்பற்றி முத்து உற்பத்தி செய்யும் தொழிலை ஜப்பானியர் மிகுதியாக வளர்த்தனர் ; 1916-ஆம் ஆண்டில் உருண்டை வடிவத்தில் முத்துக்களை உற்பத்தி செய்வதை

யும் அறிந்தனர். 1932-33-இல் நானூற்றுவர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் இந்தத் தொகை அரையடங்காகக் குறைந்துவிட்டது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முத்துக்கள் பலவகை உருவங்களுடனும், நல்ல ஒளி பொருந்தியனவாகவும் இருக்கின்றன. சிப்பி எடுத்தல் முதல் முத்துத் தொடர்பான மென்மை வாய்ந்த எல்லா வேலைகளையும் பெரும்பாலும் ஜப்பானிய மெல்லியலாரே செய்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

**அரக்குச் சாயம்**

அரக்கில் (Lac) சாயம் உற்பத்தி செய்வதையும் மிகப் பெரிய தொழிலாக ஜப்பானியர் செய்கின்றனர். இந்தச் சாய உற்பத்தி பதினேராம் நூற்றுண்டு முதலே ஜப்பானியரால் செய்யப்பட்டுவருகிறது. இப்போது இத் தொழில் நன்கு வளர்ச்சி பெற்று மிக்க முன்னேற்றம் பெற்றிருக்கிறது. கறுப்பு, சிவப்பு ஆகிய இருநிறங்களில் இச் சாயம் மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தச் சாயம் மட்பாண்டங்கள்மீது பளபளப்பு உண்டாக்கப் பூசப்படு கிறது; மற்றும் பலவகையான சாயம் பூசும் வேலை களுக்கும் பயன்படுகிறது. இந்தச் சாயத்துடன் பொன், வெள்ளி நிறம் தரக்கூடிய பொருள்களையும் சேர்த்துப் புதியவகைச் சாயங்களும் உண்டாக்கப்படுகின்றன.

**வேட்கோவர் தொழில்**

ஜப்பானியர் மட்பாண்டங்கள் செய்யும் தொழிலை மிகுதியாக வளர்த்துள்ளனர். ஜப்பானியரின் மட்பாண்டங் கள் உலகப் புகழ் வாய்ந்தவை. மண்ணைக் கொண்டு பீங்கான் சாமான்கள் செய்வது, அவற்றில் ஓவியம் தீட்டுவது போன்றவைகளை முதன் முதலாகச் செய்தவர் சீனரே எனினும், அந்த வேலையை ஜப்பானியர் சீனரிட

மிருந்து நன்கு பயின்றுகொண்டனர். ஜப்பானியர் ஒருவர் சீனம் சென்று அங்கு நீண்ட காலமிருந்து, இதைப் பயின்று, மீண்டும் கொரியா சென்று, அங்கும் சில முறைகளைக் கற்று, பின்னர் ஜப்பான் மீண்டு, மட்பாண்டத் தொழிற்சாலை அமைத்து வேலையைத் தொடங்கினர். பதின்மூன்ரும் நூற்ருண்டில் இங்ஙனம் தொடங்கப்பட்ட தொழிற்சாலை, இன்று ஜப்பானில் பல இடங்களில் பல தொழிற்சாலைகளாகப் பெருகிவிட்டது; இத் தொழிலும் மாபெருந் தொழிலாக இன்று வளர்ந்துள்ளது.

அழகிய மட்பாண்டங்களுக்கு ஜப்பானிலேயே பெருந் தேவை இருப்பதாலும், ஜப்பானியர் எதனையும் அழகாக வைத்துக்கொள்வதில் விருப்பமுடையவராதலாலும், இத் தொழில் அங்கு நன்கு வளர்ச்சிபெற்றுள்ளது. உற்பத்தியாளர்கள் போட்டியிட்டுப் பல அழகிய பீங்கான் ஏனங்களைச் செய்யத் தொடங்கி, இத்தொழிலில் இன்று சீனரையும் மிஞ்சிவிட்டனர். ஜப்பான் பீங்கான் பாத்திரங்கள் அழகிற்கும் உறுதிக்கும் பெயர் பெற்று விளங்குகின்றன.

**தேயிலை**

ஜப்பானியர் தேநீர் பருகுவதில் பெருவிருப்பம் உடையவராதலின், மிக உயர்ந்த தேயிலையை உற்பத்தி செய்கின்றனர். இந்தியாவிலும் சீனத்திலும் விளையும் தேயிலையினும் ஜப்பான் தேயிலை மிக உயர்ந்ததாகும். ஜப்பானில் விளையும் தேயிலையில் ‘ஸி’ உயிர்ச்சத்து (Vitamin C.) மிகுதியாக இருப்பதாகவும், மற்றை நாடுகளில் விளையும் தேயிலையில் இச்சத்துச் சிறிதளவும் இருப்பதில்லை என்றும் அறிஞர் கூறுகின்றனர். ஜப்பானில் தேயிலைச் செடிகள் நெடுங்காலத்துக்குப் பட்டுப்போகாமல் இருக்கின்றன. இருநூறு ஆண்டுகளாகியும் பட்டுப் போகாமல் பலன் கொடுத்துக்கொண்டிருக்கும் செடிகளும்

அங்கு இருக்கின்றன. அங்குத் தேயிலைச் செடிகள் மூன்று முதல் ஆறடி உயரம் வளர்கின்றன. ஜப்பானியத் துறவி ஒருவர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் சீனம் சென்று, அங்கிருந்து தேயிலை வித்துக்களைக் கொணர்ந்து முதன் முதலாக ஜப்பானில் பயிரிட்டார். உஜி என்னும் இடத்தில் முதலில் தேயிலைச் செடி வளர்க்கப்பட்டது எனினும், இன்று ஜப்பானில் பல இடங்களில் தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. தேயிலை பறித்துப் பதம் செய்து விற்பனைக்கு அனுப்பும் தொழில் இன்று ஜப்பானில் பெருந் தொழிலாக நடைபெற்றுவருகிறது. ஆண்டுதோறும் அந் நாட்டில் நாலரைக்கோடி இராத்தல் தேயிலை உற்பத்தி யாகிறது.

உலகில் எங்கும் கேட்டிராத விந்தை ஒன்று ஜப்பானில் இருக்கிறது. தேயிலைச்செடி மரமாக வளர்ந்து பருத்துப் போயிருப்பதுவே இந்த விந்தைச் செய்தியாகும். ‘சாகா’ தீவிலுள்ள உரிஷினே என்னும் ஊரில் தேயிலைச் செடி ஒரு பெரிய மரமாக வளர்ந்திருக்கிறது. இதன் அடிமரச் சுற்றளவு மட்டும் எட்டரை அடி இருக்கிறது.

ஜப்பானியர் இளந் தேயிலைகளைப் பறித்து, அவற்றின் பசுமைநிறம் மாருமலே பதப்படுத்தி விற்பனைக்கு அனுப்பு கின்றனர். இது மிக உயர்ந்த முதல் வகைத் தேயிலையாகக் கருதப்படுகிறது. இதுதான் தேநீர் விருந்து விழாக்களில் பயன்படுவது. இது தவிர, பிற மட்ட வகைத் தேயிலைகளும் உற்பத்தி செய்யப்பட்டுப் பெரிய அளவில் வாணிகம் நடை பெறுகிறது.

## மூங்கிற் பொருள்கள்

ஜப்பானியருக்கு மூங்கில் உயிர்நாடியாக விளங்கு கிறது. அங்கு மூங்கிலைக் கொண்டு செய்யப்படும் பொருள் கள் கணக்கற்றவை. கூடைகள், வீட்டுக்குரிய அலங்காரப் பொருள்கள், பேனுக்கட்டைகள், விளக்குக் கம்பங்கள், சிற்றுருவங்களாகச் செதுக்கப்பட்ட பலவகை அணிகள்,

விளையாட்டுப் பொருள்கள், கைத்தடிகள், மீன் பிடிக்கும் கழிகள், சிகரெட் குழாய்கள், வெயிலை மறைக்கும் தொப்பிகள், குடைகள், விசிறிகள் என இன்னோரன்ன பலதிறப்பட்ட பொருள்களைச் செய்கின்றனர். மூங்கிலாற் செய்யப்படுபவை எனினும், இவற்றைக் காண்போர் மனக்கவர்ச்சி கொண்டு இவற்றை வாங்கியே செல்வர். மூங்கிலைக் கொண்டு கண்கவர் வனப்புடைப் பொருள்கள் பலவற்றை உற்பத்தி செய்து, சீனம், கொரியா, பிலிப்பைன்ஸ் தீவுகள், மலேயா, இந்தோசீனம், தாய்லந்து, பர்மா போன்ற நாடுகளில் இவற்றைப் பெரிய அளவில் விற்பனை செய்து ஜப்பானியர் பொருள் பெறுகின்றனர். இவற்றுள் சில இந்தியாவிலும் விலையாகின்றன.

**காகித விளக்குகள்**

காகிதத்தைக்கொண்டு அழகு மிகுந்த விளக்குக் கூடுகள் செய்வதில் ஜப்பானியர் கைதேர்ந்தவர்; இந்தக் காகிதக்கூடு விளக்குகளை முன்காலத்தில் வீடுதோறும் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். காகிதத்தில் பலூன் போன்று செய்து அடிப்புறத்தில் மெழுகுவர்த்தி நிற்க இடம் வைக்கப்பட்டுள்ளதே இவ்விளக்காகும். இக்காகிதங்கள் மீது அழகிய ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும். மின்சார விளக்குகள் பெருகிவிட்ட இக்காலத்தில் அக்காகித மெழுகுவர்த்தி விளக்குகளின் தேவை அருகிவிடவேண்டும் அல்லவா? ஆனால், மெழுகுவர்த்தி மறைந்து, மின்சார விளக்கு அதனுட் புகுந்துகொண்டு, இன்றளவும் அக்காகித விளக்கு ஜப்பானில் பெருமைக்குரியதாகவே இருந்து வருகிறது. விழா நாட்களில் இந்தக் காகித விளக்குகள் அலங்கார விளக்குகளாகப் பல நிறங்களில் பலவகை ஓவியங்களுடன் காட்சி தருகின்றன. இவை மடக்கி வைத்துக்கொள்ளக் கூடியவாறு செய்யப்படுவதால், கீழை நாடுகளில் இவற்றுக்குப் பெருந்தேவை ஏற்பட்டு, காகித விளக்குச் செய்தல் இன்று ஒரு பெரிய வாணிகமாக

நடைபெற்றுவருகிறது. இந்த விளக்குகள் மூங்கிற் குச்சிகளைவைத்து, அவற்றின்மீது காகிதம் அல்லது பட்டுத் துணி முதலியவற்றை ஒட்டவைப்பதன் மூலம் செய்யப் படுகின்றன.

ஜப்பானியர் செய்யும் மூங்கிற் குடைகள் எழில் மிக்கவை ; ஓவிய வேலைப்பாடு அமைந்தவை ; மழைக்கும் வெயிலுக்கும் ஏற்றவை ; பிற குடைகளைப்போலவே மூடித் திறக்கக்கூடியவை. இவற்றை மூங்கிலையும், மெழுகு பூசப்பட்ட காகிதத்தையும் கொண்டே செய்கின்றனர் ; காகிதத்திற்கு ஈடாக, பட்டுத்துணி பயன்படுவதும் உண்டு. ஆனால், வேறு குடைகளை இரும்புக் கம்பிகளும், துணியும் கொண்டு செய்கின்றனர். இவ்வாறு ஜப்பானியர் செய்யும் குடைகளை இலங்கையர், பர்மியர் போன்றாரும் விரும்பிப் பெறுவதால், குடைத்தொழில் ஜப்பானியருக்குப் பெருஞ் செல்வம் குவித்துக்கொடுக்கிறது.

## தகரப் பதுமைகள்

இந்தியாவில் நாம் கழிவுப் பொருள்களாகக் கருதுபவை ஜப்பானில் செல்வம் கொழிக்கும் சிறப்புடைப் பொருள் களாகக் கருதப்படுகின்றன. நம் நாட்டில் தகரத் தகடுகள் கொண்டு பெட்டிகள், சிறிய தகரக்குப்பிகள், குவளைகள், விளக்குத் தண்டுகள் முதலியவற்றைச் செய்பவர், கத்தரிக்கப்பட்ட சிறுதுண்டுகளைக் குப்பையில் சேர்த்து விடுதல் வழக்கம். இந்தியாவில் இருந்த ஜப்பானியர், இதனைக் கண்டு இக்கழிவுத் தகரத்துண்டுகளைத் திரட்டி ஜப்பானுக்கு அனுப்பிவைத்தனர். ஜப்பானியர் இத்தகரத் துண்டுகளைக்கொண்டு, அழகு மிகுந்த பதுமைகளையும், பிள்ளைகள் விளையாடுதற்கேற்ற மோட்டார் வண்டிகள், பீரங்கிவண்டிகள், விமானங்கள், கப்பல்கள், ரயில் வண்டி கள், மற்றும் பலவகையான பொருள்களையும் செய்து, அழகிய வண்ணங்களைத் தீட்டி மீண்டும் நம் நாட்டுக்கே அனுப்பிவைத்துப் பெரும்பொருள் திரட்டினர் ; இன்றும்

இத்தொழில் ஜப்பானில் நடைபெற்றுவருகிறது என்பது நம்மவருக்கு வியப்பூட்டும் செய்தியாக இருக்கலாம். நாம் கழிவுப்பொருள்களாகக் கருதி வீசி எறிந்தவை, மீண்டும் நம்மிடை எழில் மிகுந்த தோற்றங்களுடைய பல விளையாட்டுப் பொருள்களாக உலாவி, நம்மிடமிருந்து செல்வத்தை ஜப்பானுக்கு அனுப்ப உதவுகின்றன என்பது வியக்கத்தக்கது அன்றோ!

ஜப்பானியரே பதுமைகள் வாங்குவதில் விருப்பமுடையவர். ஆகலின், பதுமைகள் விற்பனை அந்நாட்டிலே மிகுந்துள்ளது. பிற நாடுகட்கும் பதுமைகள் ஏற்றுமதியாவதால், அங்குப் பதுமை உற்பத்தித் தொழில் பெரிய அளவில் நடைபெறுகிறது.

**நூல் - ஆடை உற்பத்தி**

பட்டு உற்பத்தியைப் போலவே பருத்திநூல், பருத்தித் துணி, கம்பளம், ரேயன்*, நைலான்* முதலியவற்றை உற்பத்தி செய்வதிலும் ஜப்பான் முன்னணியில் நிற்கின்றது. ஆண்டுதோறும் சற்றேறக்குறைய 158 கோடி இராத்தல் பருத்திநூலும், 482 கோடி சதுரகெஜம் பருத்தித் துணிகளும் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கம்பளமும், ரேயனும் இதேபோன்று நூலாகவும் நெய்யப்பட்டனவாகவும் மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. பருத்தித்துணி உலகெங்கும் விற்பனையாகும் பொருளாதலின் ஜப்பானில் துணி நெய்யும் ஆலைகள் பல ஏற்பட்டுள்ளன. பருத்தித்துணிகளில் ஜப்பானியரிடும் போட்டி, மேனாட்டு ஆலை முதலாளிகளாலும் ஈடு கொடுக்கமுடியாமல் இருக்கிறது. கீழை நாட்டு மக்களுக்கு, மேனாடுகளிலிருந்து வருபவற்றைவிடச் சிறந்த பருத்தித் துணிகளைக் குறைந்தவிலையில் ஜப்பானியர் அனுப்பிவைத்து, மேலைநாடுகளின் துணி வாணிகத்தை

* இரண்டும் செயற்கைப் பட்டுத்துணி வகை.

முடக்கிவைத்ததை நாம் அறிவோம் அல்லவா? உலகப் பெரும் போருக்குமுன், நம்நாட்டில் ஆங்கில ஆட்சி நடந்த போது, ஜப்பானிலிருந்து இந்தியா வந்திறங்கிய பருத்திப் பொருள்களுக்கு 100-க்கு 75 விகிதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. இதனையும் கொடுத்துப் பின், இங்கு ஒரு கெஜம் ' மல் ' துணி மூன்றரையணுவிற்கு விற்கப்பட்டது எனின், ஜப்பானியரின் வணிகத்திறமையை இது நன்கு விளக்குவதாகும்.

முஸ்லிம்கள் அணியும் லுங்கிகள், வேட்டிபோன்று ஒரே வெள்ளையாயிராமல் கோடுகள் போட்டும், கட்டங்கள் அமைந்தும் இருக்கும். இவற்றை நம்நாட்டுக் கைத்தறி நெசவாளரே பெரிய அளவில் நெய்து, லுங்கிகட்டும் வழக்க முடைய முஸ்லிம்கள் உறையும் நாடுகளுக்கெல்லாம் ஏற்று மதி செய்துவந்தனர். இந்த வாணிகத்துக்கு மேலைநாடு களின் ஆலை முதலாளிகள் போட்டிக்கு வரமுடியவில்லை. ஆனல், ஜப்பானியர் இடையிடையே கோடுகளும் கட்டங் களும், அடியிலும் மேலும் பட்டைக் கறைகளுமுடைய துணியை நெய்து, நம்நாட்டின் லுங்கிநெசவுத் தொழி லுக்குப் போட்டியாய் நின்றனர். ஜப்பானியரின் போட்டிக்கு இணைநிற்க முடியாமல் நம்நாட்டு லுங்கி நெசவுத் தொழில் வீழ்ச்சி அடைந்தது.

ஜப்பானியர் ஆடைகளைப் பெரிய அளவில் நெய்து அனுப்பி ஆடை வாணிகத்தில் போட்டியிடுவதுடன் நிற்க வில்லை; நெசவாலை இயந்திரங்களை நல்ல முறையில் செய்து, அவற்றையும் பெருவாரியாக விற்பனை செய்தனர். அஃதாவது, மேலைநாட்டு நெசவு ஆலைப்பொறி ஒன்று குறித்த நேரத்தில் ஆறு ஆட்களின் வேலையைச் செய்யு மெனின், ஜப்பான் நெசவாலை அதே காலத்தில் பத்தாட் களின் வேலையைச் செய்யக்கூடியதாக இருந்தது. எனவே, ஜப்பான் நெசவாலைப்பொறிகளின் தேவை மிகுந்தது. நம் நாட்டில் உள்ள பெரிய நெசவாலைகள் பல, ஜப்பானிலிருந்து நெசவுப்பொறிகளை வரவழைத்தன. இவற்றுடன் நெசவுப்

பொறிகளுக்கு வேண்டிய தறிகள், கதிர்கள், சிறு மின்சார மோட்டார்கள் முதலியவற்றையும் ஜப்பானியர் உற்பத்தி செய்கின்றனர். இவை, மேலைநாட்டுப் பொருள்களைவிடச் சிறந்து காணப்படுகின்றன.

**காகிதம்**

ஜப்பானில் எல்லாவகையான காகிதங்களும் உண்டாக்கப்படுகின்றன. காகித உற்பத்திக்கான மூலப்பொருள்களை ஜப்பானியர் தங்கள் நாட்டிலேயே விளையச் செய்கின்றனர். கோஸோ (Kozo), மிட்சுமாட்டா (Mitsu-mata) என்னும் இருவகைச் செடிகளின் பட்டைகளைக் கொண்டு காகிதக்கூழ் செய்யப்படுகின்றது. 'கம்ப்பி' (Gampi) என்னும் செடியும் பயன்படுகிறது; எனினும், முன்னவை இரண்டினைப் போன்று இச்செடி செழித்து வளராமையாலும், நாளுக்குநாள் இச்செடியின் உற்பத்தி அருகிக்கொண்டே வருவதாலும், பயிரிட முயன்றும் விளையாமல் உலர்ந்து நசித்துப்போவதாலும், ஜப்பானியர் 'கம்ப்பி' செடியைக் கைவிட்டு, முன்னவை இரண்டினையும் பயன்படுத்திவருகின்றனர்.

மேனுடுகளிலிருந்து வருகின்ற பலவகைத் தாள்களைப் போன்றவையே ஜப்பானில் செய்யப்படுகின்றன. நல்ல அட்டைகளும் தயாராகின்றன. மெல்லிய பலநிறத் தாள்களும் அங்குச் செய்யப்படுகின்றன. ஜப்பானியக் காகித ஆலைகளில் ஆண்டுதோறும் நாற்பதுகோடி இராத்தல் காகிதம் செய்யப்படுகிறது. இது தவிர, கையால் காகிதம் செய்வதையும் ஜப்பானியர் கைவிடவில்லை. ஆண்டுதோறும் கையால் செய்யப்படும் காகிதம் ஏழுகோடி இராத்தல் என்று கூறலாம். ஜப்பானியர் பெரிய கட்டடங்களின் உட்சுவர்களில் வண்ணந்தீட்டுவதனைவிட்டு பல வண்ணங்களில் பூப்பொறித்த தாள்களைச்செய்து அவற்றை ஒட்டிவிடுகின்றனர். இவ்வாறு ஒட்டியிருத்தல் அழகிய தோற்றத்தை அளிக்கின்றது.

## கடிகாரங்கள்—காமிராக்கள்

ஜப்பானியர் கடிகாரங்கள், காமிராக்கள் (Camera) போன்றவற்றைச் செய்வதில் வல்லுநர். ஜப்பான் கடிகாரங்கள் உலகநாடுகளில் எல்லாம் விற்பனையாகின்றன. தமிழகத்தில் சுவரில் மாட்டும் பெரிய ஜப்பான் கடிகாரங்கள் பலருடைய இல்லங்களையும் அலுவலகங்களையும் அணி செய்தலை இன்றும் காணலாம். ஜப்பானியர் உற்பத்திசெய்யும் கடிகாரங்களில் சிட்டிஸன் (Citizen), ஷெய்கோ (Sheiko) முதலியவை மிக உயர்ந்தவையாகும்.

ஜப்பானியர் செய்யும் காமிராக்களில் நிக்கான் (Nickon), கானன் (Canon) முதலியவை மிகச் சிறந்தவை. இவற்றைச் சிறப்பாக அமெரிக்கர் மிகவும் போற்றி வாங்குகின்றனர். எனவே, பிறருக்கு இவை கிடைப்பது அரிதாயுள்ளது. கொரியாப் போர்க்களத்தில் அமெரிக்கர் பயன்படுத்திவருபவை இந்தக் காமிராக்களேயாகும். இவ்வளவு உயர்ந்த கடிகாரங்களையும் காமிராக்களையும் உற்பத்தி செய்யும் இடங்களைக் காணவேண்டும் என்னும் அவாக் கொண்டு நான் போய்க் கண்டபோது எனக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. ஏனெனில், இவற்றை உண்டாக்கிவிடுகின்ற இடங்கள் எளிய குடில்களேயாகும். இங்ஙனம் ஆடம்பரமற்ற குடில்களில் இருந்தவண்ணம், உலகம் போற்றும் உயரிய வேலைப்பாடு மிகுந்த பொருள்களை உற்பத்தி செய்யும் அந்நாட்டு மக்களின் திறமையும் உழைப்பும் பெரிதும் பாராட்டப்பட வேண்டுவனவாகும்.

## பவுன்ட்டன் பேனா

ஜப்பானியர் 'பவுன்ட்டன் பேனா' செய்வதிலும் திறமை மிக்கவர்; இரண்டாம் உலகப் போருக்குமுன் நம் நாட்டினர் விரும்பியவாறெல்லாம் பெயர்களைச் சூட்டிப் பலவகையான விலை மலிவான பவுன்ட்டன் பேனாக்களை நம் நாட்டிற்கு அனுப்பிவைத்தனர். அக்காலத்தில் இங்கு

இரண்டணு, நான்கணுக்களுக்கும் ஜப்பான் பவுன்ட்டன் பேனுக்கள் கிடைத்தன. அதே சமயத்தில் பைலட் (Pilot), பிளாட்டினம் (Platinum) போன்ற விலே உயர்ந்த பேனுக் களேயும் அவர்கள் செய்தனுப்பினர். இந்த உயர்ந்த வகைப் பேனுக்கள் செய்யும் இடங்களும் மண்சுவர்க் குடில் களாக இருக்கின்றன. ஆனுல், இந்த ஆடம்பரமற்ற எளிய குடில்கள்தாம் திங்கள் தோறும் இரண்டரை லட்சம் பேனுக்களே உண்டாக்கி, உலக நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன.

## நிலக்கரியும் இரும்பும்

ஜப்பானில் நிலக்கரி, இரும்பு முதலியவை நிறையக் கிடைக்கின்றன. இந்த இயற்கைச் செல்வங்களேச் சுரங்கம் வெட்டி வெளியில் எடுத்துப் பெருந்தொழில்களே இயக்கப் பயன்படுத்துவதில் வேறு எந்நாட்டவருக்கும் ஜப்பானியர் பின்வாங்கியவரல்லர். ஜப்பானில் மாதந் தோறும் 18 லட்சம் டன் நிலக்கரியும் இருபத்தொன்பதா யிரம் டன் இரும்பும் நிலத்தினின்று கிடைக்கின்றன. இரும் பினுல் ஜப்பானில் 55 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யப் படுகிறது. இவற்றைக்கொண்டு ஜப்பானியர் கப்பல்கள், ரயில் இஞ்சின்கள், மோட்டார் இஞ்சின்கள், வேறு பலவகைப் பெரிய இயந்திரங்கள் முதலியவற்றைச் செய் கின்றனர்.

## கப்பல் கட்டும் தொழில்

கோபேயில் கப்பல் கட்டும் துறையில் பல பெரிய கப்பல்கள் கட்டி முடிக்கப்பெற்றுள்ளன. ஜப்பானியர் கட்டிய கப்பல்களுக்கு மேலே நாடுகளில் நல்ல பாராட்டுதல் இருக்கின்றது. ஜப்பானில் கப்பல்கட்டும் தொழிற்சாலே கள் பல உண்டு. அவற்றில் மீன்பிடிக்கும் கப்பல் முதல் பெரிய போர்க்கப்பல்கள் ஈருக பல வகைக்கப்பல்கள் கட்டப்படுகின்றன. ஜப்பானியர் கட்டும் கப்பல்கள்

முதற்றரமானவை என்று உலகக் கப்பல் தொழில் அறிஞர் பலர் கூறுகின்றனர். கோபே, அயியாய் முதலிய இடங்களில் வெளிநாட்டுக் கப்பல்களை உடனுக்குடன் பழுது பார்த்துக் கொடுக்கும் தளங்களும் (Dry Docks) இருக்கின்றன.

கோபேயிலுள்ள கவாசாகி கப்பல்கட்டும் தொழிற்சாலை ஒன்று நார்வே நாட்டுக்காக 18,000 டன் நிறையுள்ள பெரிய கப்பல் ஒன்றைச் செய்து அனுப்பியிருக்கிறது. இங்ஙனம் உலக நாடுகளுக்கு வேண்டும் கப்பல்களையும் கட்டிக்கொடுக்க ஜப்பான் திறமை படைத்திருப்பது பாராட்டத்தக்கது அன்றோ?

## ரயில் இஞ்சின்கள்

ரயில் இஞ்சின்கள் கட்டுவதிலும் ஜப்பானியர் புகழ் அடைந்திருக்கின்றனர். ஜப்பானியர் கட்டிய ரயில் இஞ்சின்கள் கீழ்நாடுகளில் பல இடங்களில் வேலை செய்கின்றன. இவை அதிகமாகச் சீனு, கொரியா, ரஷ்யா, பாகிஸ்தான், தாய்லந்து முதலிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நீராவியால் ஓடும் ரயில் இஞ்சின்கள், மின்சார ரயில் இஞ்சின்கள், மக்கள் அமர்ந்து பிரயாணம் செய்வதற்குரிய ரயில் வண்டிகள், டிராம் வண்டிகள், 'காஸ்' (Gas) கொண்டு ஓட்டப்படும் வண்டிகள், கம்பி மூலம் வானத்தில் ஓடும் வண்டிகள், டிரக்குகள், டிராலிகள், தெருவில் சரளைக் கற்களைச் சமப்படுத்தும் கனத்த வண்டிகள், பாய்லர்கள், மின்சார இயந்திரங்கள், தொழிற்சாலை இயந்திரங்கள், உழவுக்குரிய இயந்திரங்கள் முதலியவற்றைச் செய்யும் நிலையங்கள் ஜப்பானில் பல இருக்கின்றன. அங்கு ஒரு மாதத்தில் 1312 மோட்டார் டிரக்குகள் வீதம் செய்யப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு 213 ரயில் இஞ்சின்கள், 24 மின்சார ரயில் இஞ்சின்கள், 248 ரயில் வாகன்கள் முதலியவற்றை ஒரே தொழிற்சாலையில் மட்டும் செய்து முடிக்கின்றனர் எனின், மற்றவற்றையும் கணக்

கிடின் எவ்வளவாகும்? ஜப்பானியர் இவற்றுள் தங்கள் நாட்டுக்கு வேண்டியவை தவிர மற்றவற்றை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்து பொருள் பெறுகின்றனர்.

## கண்ணுடிப் பாளங்கள்

கண்ணுடித் தொழிலிலும் ஜப்பான் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. பெரிய பெரிய பாளங்களாகக் கண்ணுடியை உற்பத்தி செய்வதில் ஜப்பான் தொழிற்சாலை கள் திறமைபெற்று விளங்குகின்றன. சாளரங்களுக்குரிய பலவகையான பன்னிறக் கண்ணுடிகள், ஓரங்கள் நன்கு வழவழப்பாக்கப்பட்ட வெறுங்கண்ணுடிகள், ரசம் பூசப் பெற்ற கண்ணுடிகள், கல்லாலடித்தாலும் உடையாத கண்ணுடிகள் முதலியவை, ஜப்பானின் முக்கிய நகரங்கள் பலவற்றிலும் செய்யப்படுகின்றன. இவை தவிர, மின்சார 'பல்பு' கள், கண்ணுடிச் சாமான்கள், முகம் பார்க்கும் கண்ணுடி, மூக்குக் கண்ணுடி, தொலைநோக்கிக் கண்ணுடி, பூதக்கண்ணுடி, 'லென்ஸ்' எனப்படும் கண்ணுடிகள் முதலிய அனைத்தையும் ஜப்பானியர் சிறு குடில்களில் இருந்தவண்ணமே செய்து முடித்துவிடுகின்றனர்.

## நீர் இழுக்கும் பொறிகள் முதலியன

தண்ணீர் இறைக்கப் பயன்படும் நீர் இழுக்கும் (டீசல்) பொறிகள் ஜப்பானில் பலவகையில் செய்யப்படுகின்றன. நம் நாட்டில் விற்பனையாகும் 'யன்மார்' இஞ்சின்கள் ஜப்பானில் செய்யப்பட்டுவனவேயாகும். மூன்று குதிரைச் சக்தியுடைய பொறிகளிலிருந்து நூற்றுமுப்பது குதிரைச் சக்தியுடைய பொறிகள்வரை ஜப்பானில் செய்யப்படு கின்றன. இந்த நீர் இழுக்கும் பொறிகள் நம் நாட்டில் உழவர்களுக்குப் பெரிதும் வேண்டுபவையாகும். ஆனல் நம் நாட்டில் செய்யப்படும் இயந்திரங்களினும் ஜப்பானியர் செய்யும் இயந்திரங்கள் சிறப்புடையவையாக இருக் கின்றன.

இரும்பு, செம்பு, பித்தளை, துத்தநாகம், உலோகக் கலவை முதலியவற்றின் தகடுகள், பலவகைக் கம்பிகள், சங்கிலிகள், வளையங்கள் முதலியவற்றைச் செய்யும் நிலையங்கள் ஜப்பானில் பல இருக்கின்றன.

பல அளவுடைய எஃகுக் குழாய்கள், இரும்புச் சட்டங்கள், திரணைக் கம்பிகள், குழைவுத் தகடுகள் முதலியனவும் ஜப்பானில் செய்யப்படுகின்றன. சிறு கம்பி ஆணி முதல் திருகு ஆணிகள், பெரிய கொக்கிகள், கதவின் கைப்பிடிகள், கீல்கள், சட்டங்கள் ஆகிய எல்லாப் பொருள்களும் ஜப்பானில் தயாராகின்றன.

மோட்டார் வண்டி, சைக்கிள் மோட்டார், ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழில் ஜப்பானியரால் மிக எளிதில் நடத்தப்படுகின்றது. ஜப்பானில் ஆண்டுதோறும் செய்யப்படும் இவற்றின் தொகை மேனாடுகளின் கணக்கை விஞ்சுகின்றது.

**மின்சாரம்**

1890-ஆம் ஆண்டில் முதன் முதலாக 'பீவா' ஏரியின் நீர் வீழ்ச்சியில் மின்சார உற்பத்தி இயந்திரம் நிறுவப்பட்டது. ஆனால், இப்போது ஜப்பானில் மின்சாரம் பயன்படாத இடம் ஒன்றேனும் இல்லை என்னலாம். மிகக்குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுவதால், களிமண் குடில்கள், கூரை வீடுகள் ஆகியவற்றிலும் மின்சாரம் பயன்படுவதைக் காணலாம். அந்நாட்டில் சிறு குடிசைத் தொழில்களும் மின்சார சக்தியைப் பயன்படுத்தியே செய்யப்படுகின்றன. ஹாங்காங், இந்தியா, தென் கொரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லந்து ஆகிய ஆறு நாடுகளிலும் பயன்படும் மின்சார சக்தியைவிட ஆறுமடங்கு அதிகமான மின்சார சக்தி ஜப்பானில் பயன்படுகிறது. மின்சார சக்தி உற்பத்தி செய்வதில் இந்தியாவைவிட ஜப்பான் 28 மடங்கு முன்னேறியுள்ளது. ஜப்பானில் பயன்படும் மின்சார

சக்தியில் 100-க்கு 87 பங்கு நீரின் மூலம் பெறுவதே யாகும்.

இவ்வண்ணம் நீர் ஊற்றுக்கள் பல இருப்பதனைக் கொண்டு நீரின் மூலம் மின்சார சக்தியை மிகுந்த அளவில் உற்பத்தி செய்துகொண்ட ஜப்பான் நாட்டில், குடிசைத் தொழிலிலிருந்து மிகப்பெரிய இயந்திரத் தொழில்கள்வரை மின்சார சக்தியின் மூலமே இயங்குகின்றன. ஆதலின், மின்சாரம் பற்றிய இயந்திரங்களையும் ஜப்பானியரே செய்யத் தொடங்கிவிட்டனர். மின்சார உற்பத்தியைப் பெருக்கும் ஜெனரேட்டர், கன்டென்ஸர், கன்வர்ட்டர், மோட்டார், கண்ட்ரோல், ஸ்விட்ச்போர்டு, டிரான்ஸ்பார்மர் முதலியவைகளையும், பல்புகள், கம்பிகள், மின்சார விசிறிகள், லிப்ட்டுகள் மின்சார ரயில் இஞ்சின்கள், சுரங்க ரயில் இஞ்சின்கள், மற்றும் உள்ள சிறிய பொருள்களையும் இன்று ஜப்பானியரே செய்கின்றனர்.

## வானொலிப் பொறிகள்

அருமையான வானொலிப் பொறிகள், ரேடியோ ரிசீவர், டிரான்ஸ்மிட்டர், ஒலிபரப்புவதற்கான பொறிகள், வாக்குவம் டியூப்கள் என்பவற்றையும், இவை தொடர்பான மற்றெல்லாப் பொருள்களையும் ஜப்பானியர் செய்கின்றனர்; பலவகைப் பாட்டரிகளைச் (Battery) செய்கின்றனர். பாட்டரிகளைப் புதுப்பித்துச் சக்தியூட்டித்தருவது மிகச் சிறிய தொழிலாகப் பல்லோரால் அங்கு நடத்தப்படுகிறது.

## பிற பொறிகள்

விஞ்ஞானிகளுக்குத் தேவைப்படும் அணு நோக்கி (Microscope), பரிசோதனைப் பொறி (Testing Machine), மின்சாரச் சூளை அடுப்பு, ஆய்வுத்துலை (Analytical Balance), எக்ஸ்ரே பொறி, ' அல்ட்ரா வயலெட் ' (ஊதா) ஒளிக் கதிர்கள் வீசும் பொறி, வெப்ப ஒளிக்கதிர் வீசும்

பொறி (Heat-ray), கண்ணாடி உருக்கும் பொறி, குளிரச் செய்யும் பொறி (Refrigerator), மற்றைய வீட்டியல் சிறு பொருள்கள், தண்ணீரை வெந்நீராக்கும் மின்சாரக் கருவி, மின்சார வீட்டடுப்பு, பல்புகள், பாதரச பல்புகள் முதலிய எல்லாப் பொருள்களும் ஜப்பானில் உற்பத்தியாகின்றன.

கால்மிதியுடையவை, கையால் சுற்றப்படுபவை, மின் சாரத்தால் ஓட்டுபவை எனப் பலவகைத் தையல் இயந்திரங்கள் பல அளவில் செய்யப்படுகின்றன.

## ரப்பர் பொருள்கள்

ஜப்பானில் கோபே நகரில்மட்டும் 170 ரப்பர் தொழிற்சாலைகள் இருக்கின்றன என்றால், ஜப்பான் முழுவதும் இத்தொழில் எவ்வளவு பரவியுள்ளது என்பது விளங்கும். டயர், டியூப், ரப்பர், செருப்பு, இடுப்புக்கச்சை, பெண்களுக்கு மார்க்கச்சு, காலுறை, கையுறை, பலவகைப் பந்துகள், ரப்பர் மெத்தை, தலையணை, பதுமை, சட்டை, தொப்பி, விளையாட்டுப் பொருள்கள், மருத்துவப் பொருள் கள், ரப்பர் விரிப்புகள் போன்ற கணக்கிட்டுரைக்க முடியாத பொருள்கள் ரப்பரைக்கொண்டு செய்யப்படு கின்றன. இவற்றுள் பெரும்பாலானவை உலகின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதியாகின்றன.

## தீக்குச்சி

தீக்குச்சிகள் செய்தலும் பெரிய தொழிலாகவே ஜப்பானில் நடைபெறுகிறது. பட்டாசுகள், வகைவகை யான வாணங்கள், அதிர்வெடிகள் முதலியனவும் அங்குச் செய்யப்படுகின்றன. கோபே நகரில்மட்டும் 150 தீக்குச்சித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஜப்பான் தீக்குச்சி உற்பத்தியில் அறுபது சதவிகிதம் இந்நகரத்திற்குரியது. ஜப்பான் ஆண்டுதோறும் ஒன்றேகால் லட்சம் டன் தீப்

பெட்டிகளை ஏற்றுமதி செய்கிறது. ஒரு டன் என்பது 7200 தீப்பெட்டிகள் கொண்டதாகும்.

**கற்பூரம்**

கலப்பற்ற இயற்கைக் கற்பூரம் ஜப்பானில் உற்பத்தி செய்யப்படுகிறது. கற்பூர மரங்களின் இலைகள், வேர், அடிமரம் ஆகியவற்றை வேக வைத்துக் கற்பூரத் தைலம் எடுக்கப்படுகிறது. அதன் அடிவண்டலே கற்பூரமாக மாறுகிறது. இவ்வாறுள்ள வண்டலைத் தூய்மைப்படுத்திஞல் நல்ல வெள்ளை நிறக் கற்பூரம் கிடைக்கிறது. மேலும் இதிலிருந்து வேறு பல பொருள்களும் செய்யப்படுகின்றன. கற்பூரம், இரசாயனம், விஞ்ஞானம், மருத்துவம் முதலிய பல இனங்களுக்குப் பயன்படுவதால், ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா, ஆப்ரிக்கா முதலிய இடங்களுக்கு மிகுந்த அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவும் கற்பூரத்தை மிக்க அளவில் ஜப்பானிலிருந்து பெறுகின்றது.

**சிமெண்ட் முதலியன**

ஜப்பானியர் முதற்றரமான சிமெண்ட் (Cement) உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். ஜப்பானிய சிமெண்டுக்கு மேலைநாடுகளிலும் பெருந் தேவை இருக்கிறது. ஜப்பானில் ஆண்டு ஒன்றுக்கு 59 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுகின்றது.

மருத்துவத்துறையில் வேண்டப்படும் பலவகை இரசாயனங்கள், அமிலங்கள் (Acids), தீநீர்கள் (Tinctures), மருந்துச் சரக்குகள் முதலியவற்றையும் ஜப்பானியர் தயாரிக்கின்றனர். எந்தப் பொருளாவது உலக மக்களின் தேவைக்கு மிகவும் வேண்டப்படுவது என அறிந்தால், உடனே அந்தப் பொருளை உற்பத்திசெய்யும் வேலையில் ஜப்பானியர் ஈடுபடுவர். ஏதேனும் ஒரு புதிய இயந்திரமோ, பொருளோ, உலகில் எவரேனும் செய்தனர் என்ருல்,

உடனே அவற்றை வரவழைத்துப் பார்த்து அவற்றினும் செம்மையாக அப்பொருள்களைச் செய்துவிடும் திறமை ஜப்பானியருக்கு உண்டு.

பொதுவாக, ஜப்பானியர் என்னென்ன தொழில்கள் செய்கின்றனர் என்று விவரித்துக்கொண்டு போவதினும், அவர்கள் செய்யாதவை இவை என்று கூறிவிடுவது எளிது. குண்டூசி, தையல் ஊசி, பொத்தான்கள், தைக்கும் நூல், பற்பசை, முகத்திற்பூசும் நறுமணப்பொடி, நெற்றிக் கிடும் சாந்து, ஊறுகாய்கள், பென்சில், பலகை, பலகை யின் எழுதுகோல் ஆகிய மிகச்சிறிய பொருள்களையும் அவர்கள் விடாமற் செய்கின்றனர் ; ஒட்டுப்பலகைகள் செய்து அவற்றைப் பெருவாரியாக ஏற்றுமதி செய்கின்ற னர் ; மதுவாணிகத்திலும் நறுமணப் பொருள்களிலும் பிரான்சுக்கு அடுத்தாற்போல் ஜப்பானையே குறிப்பிடல் வேண்டும். அரிசியிலிருந்து 'சாக்கே' என்னும் உயர்ந்த மதுவினை ஜப்பானியர் இறக்குகின்றனர். மதுவகை, மேலைநாடுகளுக்கு மிகுந்த அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே, ஜப்பானியர் செய்யாதது இறந்தவரைப் பிழைக்கவைக்கும் தொழில் ஒன்றுதான் எனல் பொருந்தும்.

ஜப்பானியர் செய்யும் பொருள்களின் அடக்க விலை மிகக்குறைந்து இருப்பதற்கும், உலக நாடுகள் போட்டியிட இயலாவாறு ஜப்பானியர் விரைந்து பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் காரணம் என்ன ?

ஜப்பானில், உலகின் பிற நாடுகளைப் போன்று, எந்தத் தொழிலும் பெரிய தொழிற்சாலை வாயிலாக நடத்தப்படுவதில்லை. மோட்டார் வண்டி செய்வதென்றால், அதன் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வோரிடத்தில் செய்யப் பட்டு, இறுதியில் ஓரிடத்தில் அனைத்தும் திரட்டப்பட்டு வண்டியாகப் பூட்டப்படும். கடிகாரம் செய்வதென்றால், அதன்மேல் கூடு ஓரிடம், மணிகாட்டும் முள் ஓரிடம், நிமிஷம் காட்டும் முள் ஓரிடம் என ஒவ்வொரு பகுதியும்

தனித்தனி இடத்தில் செய்யப்படுகிறது. அஃதாவது, ஓர் ஊரார் மணிகாட்டும் முட்களேயே செய்வர் ; மற்ருேர் ஊரார் 'பெண்டுலம்' மட்டும் செய்வர் ; பிறிதோர் ஊரினர் வெளிக்கூடு மட்டும் செய்வர். இங்ஙனம், ஜப்பானில் பல தொழில்கள் நடைபெறுவதால் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு தொழிற்சாலேயாகவே காணப்படுகிறது. எல்லா வீடுகளிலும் மின்சார வசதி இருப்பதால், மிகச்சிறு தொழிலேயும் மின்சார உதவியால் சிறிய இயந்திரங்கள் வாயிலாக அம்மக்கள் விரைந்து செய்கின்றனர். பெரிய முதலாளிகள் இவ்வாறு செய்யவேண்டும் பொருள்களேப் பிரித்து ஆங்காங்கே காலேயில் அனுப்பிவைத்து, மாலே யில், செய்து வைத்துள்ளவற்றை வாங்கிக் கொண்டுவந்து விடுதலால், மக்கள் வெளியிற்சென்று அலேய வேண்டும் வேலேயுமின்றி ஆண்களும் பெண்களும் வீட்டில் இருந்த வாறே வேலே செய்ய வசதி இருக்கிறது. இவற்ருல் பொருளின் உற்பத்திச் செலவு குறைகிறது ; பொருளும் விரைவில் உருவாகிறது. மேலும், வீட்டு வேலேகளேக் கவனித்துவிட்டு இவ்வேலேகளேச் செய்ய வசதி இருத் தலின், பெண்களும் வேலே செய்கின்றனர். எவ்வளவு பெரிய தொழிலாயினும் குடிசைத்தொழிலாக ஆக்கப்படுவ தஞல், ஜப்பான் நாட்டில் வேலேயில்லாத் திண்டாட்டத் திற்கு வழியில்லாமல், அனேவருக்கும் வேலேகிடைக்கிறது. அதனுல் அந்நாட்டில் வறுமைக்கு இடமில்லே.*

**விளேபொருள்கள் : அரிசி**

இயற்கை வளம் செறிந்த ஜப்பான் நாட்டில் விளே பொருள்களும் மிகுதியாக உண்டு. ஜப்பானின் தலேயாய உணவு அரிசிச் சோறேயாகும். எனவே, ஆங்கு நெல்

* A cottage industry is one which is carried on wholly or primarily with the help of the members of the family, either as a whole or a part time occupation.

விளைவு மிகுந்து காணப்படுகிறது. ஹொக்கைடோ தீவு முழுவதும் நெல் வயல்களே மிகுதியாயிருக்கின்றன. ஜப்பானில் விளையும் அரிசி, கோதுமை முதலியவற்றை ஜப்பானியர் ஏற்றுமதி செய்வதில்லை ; தங்கள் உணவுக்கென வைத்துக்கொண்டு, மிகுதியாகும் அரிசியை மதுவைக் காய்ச்சப் பயன்படுத்திக்கொள்ளுகின்றனர். இந்த மது வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பணமாக்கப் படுகின்றது.

## புகையிலை

ஜப்பானியர் புகையிலையை மிகுதியாகப் பயிரிட்டுச் சிகரெட் செய்யும் தொழிலுக்குப் பயன்படுத்துகின்றனர். ஜப்பானில் 1530 சதுர மைல் நிலப் பகுதியில் புகையிலை பயிராகின்றது. புகையிலை உற்பத்தி செய்வதில் மட்டும் 4½ லட்சம் குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. இந்தப் புகையிலையைக் கொண்டு ஆண்டுதோறும் 5450 கோடிச் சிகரெட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு செய்யப்படும் சிகரெட்டுகள் வெளியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## கடலில் கிடைப்பவை

ஜப்பானில் 'தங்கமீன்' என ஒருவகை மீன் கிடைக்கிறது. நாரா பகுதியில் இந்த மீன் வளர்க்கப்படுகிறது என்றே கூறுதல் வேண்டும். இவை நாளுக்கு நாள் பெருகுமாறு கடலில் 570 ஏக்கர் அளவுக்கு எல்லை கோலி, அப்பரந்த நீர்ப்பரப்பில் ஜப்பானியர் கவனம் செலுத்தி, இந்த மீன்களைப் பெருக்கி வருகின்றனர். தக்கவாறு பாதுகாத்தால், ஒவ்வொரு தங்கமீனும் இருபது ஆண்டுகள் உயிர்வாழுமாம். ஒருவர் வளர்த்த பெண் தங்கமீன் ஒன்று இருபத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்து உயிர் நீத்ததாம். இந்த மீன் முதுமை எய்துகையில், இதன் தங்க மேனி, குன்றி, மேல் தோல் சுருங்கி, நீந்தும் ஆற்றல்

குறைந்து கிடக்குமாம். மூன்ரும் ஆண்டு முதல் பத்தாம் ஆண்டுவரை இந்த மீனுக்கு இளமைப் பருவமாம்.

தங்கமீன் தவிர, நன்னீரில் உறையும் மீனினங்கள் 35 வகையானவை என்றும், கடல் நீரில் உறைபவை 115 வகையானவை என்றும் ஜப்பானியர் கூறுகின்றனர். இந்த 150 வகை மீன்களும் ஜப்பானியரால் பிடிக்கப்பட்டு உண்ணப்படுகின்றன. ஜப்பானியர் தங்கமீன்களை உயிருடன் பிடித்துக் காட்சிப் பொருளாக வேற்று நாட்டாருக்கு விற்றுப் பணம் பெறுகின்றனர். ஆனல், அவர்கள் டாய் (Tai) என்னும் ஒருவகை மீனை மிக்க விருப்பத்துடன் உண்பார்கள்.

விருந்துகளில் அம்மீன் சிறப்புணவாகும். அதன் தலைப்பகுதி படைத்தலே விருந்தினரைச் சிறப்பிக்கும் முறையாகக் கருதப்படுகிறது. நான் ஒரு நண்பருடன் ஜப்பானியர் ஒருவர் இல்லத்தில் விருந்துண்ணச் சென்றேன் ; விருந்தளித்தவர் பெரியதொரு டாய்மீனைக் கொணர்ந்து, அதன் தலையை உண்ணும்படி என் நண்பரை வேண்டினர் ; சிறப்புக்குரிய விருந்தினருக்கு அம்மீன் தலையை உண்ணக் கொடுத்தலே விருந்தினரைப் பெருமைப்படுத்துவதாகும் என்று கூறினர் ; அம்மீன் தலை சுவை மிக்கதென்று கூறி, வேண்டினர். ஆயின், நண்பர் அத்தலையை உண்ண அருவருப்புக் கொண்டு, அம்மீனின் நடுப்பாகத்தில் சிறிது உண்டார். அவர்கள் கூறியது போன்று அம்மீன் மிகுந்த சுவையுடையதா யிருந்ததைக் கண்ட நண்பர் அம்மீன் முழுவதையும் உண்டு களித்தார்.

சகாமி கடலின் தென் பகுதியில் 1200 அடி ஆழத்தில் ஒருவகை அரக்க நண்டுகள் இருக்கின்றன. அவற்றின் கால்கள் ஒவ்வொன்றும் 5 அடிக்கு மேல் நீள முடையதாம். அவை மனிதர்களையும் பிடித்துத் தின்று விடுமாம். அவை நண்டினத்தில் மிகப் பெரியவை.

'இஜு' தீபகற்பத்தில் இருக்கும் அட்சோய்க்கி என்னும்

சிறிய ஏரியில் உள்ள ஒருவகைத் தவளைகள் குறிப்பிடத் தக்கன. அவை முட்டையிடும் காலத்தில் நீரைவிட்டு வெளியே வந்து மரத்தின்மீது ஏறி, இலைகளைக் கொண்டு கூடு கட்டி, அக்கூட்டில் முட்டைகள் இடும். அக்கூடு, காகிதப் பை தொங்குவது போலக் காணப்படும். இந்தத் தவளை நம் நாட்டு ஓந்தியைப் போன்று அடிக்கடி நிறத்தை மாற்றிக்கொள்ளும் இயல்புடையதாம்.

பொதுவாக ஜப்பானியர் கைத்தொழில்கள் அனைத்தையும் செய்து பொருளீட்டுவதுபோல, விளைபொருள்களிலும் தங்களுக்குச் செல்வம் குவியும் வழிகளைக் கண்டுள்ளனர். நீர்வாழ் உயிரினங்கள் மூலமும் ஜப்பானியர் நிறையப் பொருள் திரட்டுகின்றனர். தங்கமீன் ஜப்பானியருக்கு அருமையான வாணிகப் பொருளாகப் பயன்படுகிறது. மற்றை மீன்களையும், அரக்க நண்டு, நிறமாறும் தவளை போன்ற உயிரினங்களையும் ஜப்பானியர் காட்சிப் பொருள்களாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

**வாணிகம்**

ஜப்பானியர் இங்ஙனம் உற்பத்தி செய்யும் பொருள், விளைபொருள் ஆகியவற்றின் மூலம் வெளிநாடுகளுடன் பெரிய அளவில் வாணிகம் செய்வதால்தான், ஜப்பான் ஒரு பெரிய வல்லரசாக உலக நாடுகளால் மதிக்கப்படும் உயர்நிலையை அடைந்துள்ளது என்னலாம். ஜப்பானுடைய வெளிநாட்டு வாணிகத்தை விளக்கக் குறிப்பிட்ட சில ஏற்றுமதிப் பொருள்களைமட்டும் எடுத்துக்காட்டாக இங்குக் குறிக்கலாம் :

ஒவ்வோர் ஆண்டிலும் முத்து, மீன்கள், மற்றைக் கடல்வாழ் உயிரினங்கள் 211 கோடியே 20 லட்சம் என் விலைமதிப்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறே, 201 கோடியே 20 லட்சம் என்கள் மதிப்புக்குத் தேயிலையும், 481 கோடியே 10 லட்சம் என் பருத்தி நூல், தையல் நூல், கட்டுக் கயிறு முதலியனவும், 4759 கோடியே




ஒரு என் : ஜப்பானிய நாணயம்

20 லட்சம் என் பருத்தித் துணிகளும் 649 கோடியே 10 லட்சம் என் செப்பஞ் செய்யப்படாத பட்டும், 560½ கோடி என் பட்டுத் துணிகளும், 529 கோடியே 20 லட்சம் என் ரேயன் நூலும், 356 கோடியே 60 லட்சம் என் ரேயன் துணிகளும், 151 கோடியே 40 லட்சம் என் கம்பளங்களும் 316 கோடியே 60 லட்சம் என் உடைகளும் அணிகலன்களும், 649 கோடியே 60 லட்சம் என் பீங்கான் பாண்டங்களும், 229 கோடியே 90 லட்சம் என் கண்ணுடிப் பாளங்களும், கண்ணுடிப் பொருள்களும், 248 கோடியே 30 லட்சம் என் சிமெண்டும், 269 கோடியே 30 லட்சம் என் நிலக்கரியும், 558 கோடியே 80 லட்சம் என் ரயில் இஞ்சின்கள், கப்பல்கள், அவற்றின் சில்லறைப் பாகங்கள் முதலியனவும், 447 கோடியே 10 லட்சம் என் இயந்திரங்களும் அவற்றின் பகுதிகளும், 361 கோடியே 30 லட்சம் என் பொம்மைகளும், விளையாட்டுச் சாமான்களும், 3904 கோடியே 10 லட்சம் என் மரம், மருந்துகள், ரசாயனங்கள் முதலிய வேறு பல பொருள்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அஃதாவது எல்லாம் சேர்ந்து 16,884½ கோடி என்கள் மதிப்புள்ள பொருள்களை ஜப்பான் ஆண்டு தோறும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வாணிகத்தைப் பெருக்குகிறது. இதனுல் அந்நாட்டின் கைத்தொழில்களும் வளர்ச்சி அடைந்து, மக்கள் வறுமையில் வாடாமல் வளம்பெற்றுத் திகழ்கின்றனர்.

# 5. சமயங்களும் கடவுளரும்

## ஷின்ட்டோ மதம்

ஜப்பானில் இடம்பெற்றுள்ள ஷின்ட்டோ மதம், பௌத்த சமயம், கிறித்துவம், இஸ்லாமியம் என்னும் நான்கு சமயங்களில் ஷின்ட்டோ மதம் ஜப்பானியருக்கே உரிய பழைய சமயமாகும். 'ஷின்ட்டோ' என்பதற்குக் 'கடவுள் நெறி' என்பது பொருள். இச்சமயம் இயற்கை வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். சூரியன், தென்புலத்தார், மலைகள் முதலியவை இச்சமயத்தார் வழிபடும் தெய்வங்கள். உருவவழிபாடு, விழாக்கள் செய்தல், பல்லக்கில் கடவுள் உருவத்தை வைத்து ஊர்வலம் கொணர்தல், மலைகளை வழிபடுதல், பூஜியாமாவுக்கு யாத்திரை போதல் முதலியவை இச்சமயத்தார் செய்வன வாகும். புத்த சமயம் ஜப்பானில் பரவிய பிறகும், ஷின்ட்டோ சமயம் ஜப்பானியரிடம் முன்போலவே தன் செல்வாக்குடன் இருந்துவருகின்றது. 105,806 ஷின்ட்டோ சமயக் கோயில்கள் ஜப்பானில் உள்ளன.

## பௌத்த சமயம்

ஜப்பானில் முதன் முதலாகப் புத்த மதம் கி. பி. 552-இல் பரவியது என்றும், கொரியாவின் மன்னர் ஒருவர், புத்தரது வெண்கலச் சிலை ஒன்றையும், புத்தசமய தத்துவங் களையும் அவ்வாண்டில் ஜப்பானுக்கு அனுப்பிவைத்தார் என்றும் ஜப்பானிய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. அதன் பிறகு புத்தசமயம் ஜப்பானில் விரைந்து பரவியது. 1947-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் எடுக்கப்பட்ட கணக்கின்படி, ஜப்பானில் 71,744 பௌத்த சமயக் கோவில்கள் இருந்தன. இவற்றுள், இறைவணக்கச் சடங்குகளை நிகழ்த்திவைக்கவும், பௌத்த சமயப் பிரசாரம் செய்யவும் இன்றைய ஜப்பானில் 1,83,000 புத்த பிட்சுக்

கள் இருக்கின்றனர் என்று ஜப்பானியர் புள்ளிவிவரம் தருகின்றனர். இன்று $3\frac{1}{2}$ கோடி மக்கள் புத்த சமயத்தைத் தழுவியவர்களாக இருக்கின்றனர் என்பது அரசாங்கக் கணக்கிலிருந்து அறியக்கிடக்கிறது.

## கிறித்துவ சமயம்

ஜப்பானில் கிறித்துவ சமயமும் பெருகிப் பரவியிருக்கிறது என்றே கூறவேண்டும். மார்ட்டின் லூதர் மறைந்த மூன்ருண்டுகளுக்குப் பிறகு, பிரான்சிஸ் சேவியர் என்னும் பெயருடைய கிறித்துவ சமயப் பெரியார் ஜப்பானுக்கு வந்ததுமுதல், அங்குக் கிறித்துவ சமயம் பரவத் தொடங்கியதாம்.

இன்று ஜப்பானில் $3\frac{1}{4}$ லட்சம் மக்கள் கிறித்துவ சமயத்தைத் தழுவியவராக இருக்கின்றனர். இவர்களுக்கென 2340 கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கிறித்துவ சமயத் தத்துவங்களில் தேர்ந்த அறிவுபடைத்த ஜப்பானியர் பலர், அச்சமயப் பெரியார்களாக விளங்கிச் சமயப் பிரசாரம் செய்துவருகின்றனர்.

## இஸ்லாம்

ஜப்பானில் இஸ்லாமியமும் ஓரளவு பரவியுள்ளது. இஸ்லாமியத்தைத் தழுவியவர்கள் தங்களுக்கெனத் தொழுகைத் தலங்களை அமைத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறுன 'பள்ளிவாயில்கள்' எனப்படும் தொழுகைத் தலங்கள், இஸ்லாமியர் மிகுந்துவாழும் இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமியரின் புனித நகரமாகிய மதீனுவில் உள்ளது போன்ற பள்ளிவாயிலை ஒட்டி ஜப்பானில் இஸ்லாமியத் தொழுகைத் தலங்கள் சில கட்டப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம், கிறித்துவம், இஸ்லாம் எனச் சமயங்கள் சில அங்குப் பரவியுள்ளன எனினும், மக்கள் பல்லோருடைய மனத்தை இன்றளவும் கவர்ந்து நிற்பது புத்த

சமயமேயாகும். ஜப்பான் நாட்டை ஒரு முறை சுற்றி வந்தால், காணும் இடமெல்லாம் புத்தரின் உருவச்சிலை மயமாகவே இருப்பதை அறியலாம்.

## மிகப்பெரிய புத்தர் சிலைகள்

நாரா (Nara) என்னும் நகரத்தில் இருக்கும் புத்தர் உருவச்சிலையே ஜப்பானில் உள்ள புத்தர் உருவச் சிலைகளுள் மிகப் பெரியதாகும். உச்சியிலிருந்து அடிப் பீடம் வரை இது 71 அடி 6 அங்குலம் இருக்கிறது. அடிப் பீடமின்றி வெறும் உருவம் மட்டும் 53 அடி 6 அங்குல உயரம் உள்ளது. இச்சிலையின் முகம் 16 அடி நீளமும், 9 அடி 5 அங்குல அகலமும், கண் 3 அடி 10 அங்குல நீளமும், மூக்கு 1 அடி 7 அங்குல உயரமும், வாய் 3 அடி 8 அங்குல நீளமும், கையின் கடைவிரல் 4 அடி 4 அங்குல நீளமும், மொத்தத்தில் 500 டன் கனமும் இருக் கின்றன. இந்த மாபெரும் சிலை 437 டன் வெண்கலம், 165 இராத்தல் பாதரசம், 288 இராத்தல் தங்கம் முதலிய வற்றைக்கொண்டு செய்யப்பட்டிருப்பதாக ஜப்பானியர் கூறுகின்றனர். இதைத் துடைத்துப் பளபளப்பாக்கு வதற்கு 240 மணி நேரம் பிடிக்கிறதாம். இம்மாபெரும் சிலை, 1915, 1933, 1939, 1948-என்னும் இவ்வாண்டுகளில் நான்கு முறை மாசகற்றிப் பளபளப்பாக்கப்பட்டது. இச் சிலை கி. பி. 749-ஆம் ஆண்டில் செய்யப்பட்டது.

இதற்கடுத்த பெரிய சிலை காமகூரா (Kamakura) என்னும் இடத்தில் இருப்பதாகும். இந்தச் சிலை பீடத் துடன் 42 அடி 6 அங்குல உயரமும், பீடமின்றி முப்பத்து மூன்றடி உயரமும் 92 டன் கனமும் உடையதாயிருக்கிறது. இந்தச் சிலை கி. பி. 1252-ஆம் ஆண்டில் செய்து முடிக்கப் பட்டது.

‘ நாராவிலுள்ள புத்தர் சிலையே உலகிற் பெரியதென்று கூறப்பட்டபோதிலும், எழில் மிகுந்த தோற்றத்துடன் கலையழகு மிக்கதாகச் செய்யப்பட்டிருப்பது காமகூராவி

லுள்ள சிலேயேயாகும். கலேயழகு வாய்ந்த சிலேகளுள் இதற்கு இணை கூறத்தக்கது உலகில் வேறெங்கும் இல்லே,' என்று ஜப்பானியர் கூறுகின்றனர்.

ஜப்பானில் கியோட்டோ என்னும் நகரத்தை நம் நாட்டில் உள்ள காஞ்சீபுரத்துக்கு ஒப்பிடலாம். காஞ்சீபுரம் கோவில்கள் நிறைந்ததாக அமைந்திருத்தல் போலவே ஜப்பான் நகரங்களுள் கியோட்டோ ஒன்றுதான் கோவில்கள் நிறைந்ததாகும். இந்நகரில் மட்டும் 1429 பௌத்தர் கோவில்களும் 405 ஷின்ட்டோ கோவில்களும் இருக்கின்றன.

## கல்லாய்ச் சமைந்த மர இறைவி

இயமாகுச்சி (Yamaguchi) மாகாணத்தில் உள்ள குவாஞ (Kuwana) என்னும் சிற்றூரில் சுண்ணக்கல் மலேக் குகை ஒன்று இருக்கிறது. இக்குகை வாயிலில் மரத்தாலான "அருள் இறைவி"யின் சிலே ஒன்று கோயில் கொண்டுள்ளது. இந்த இறைவியே மக்கள் உள்ளத்தில் அருள் உள்ளம் உண்டாகுமாறு செய்பவள் என்று ஜப்பானியர் நம்புகின்றனர்; இவ்விறைவியைக் கன்ஞன் (Kannon) என்னும் பெயரால் வழங்குகின்றனர்.

குகைவாயிற் கோவிலில் உள்ள மரத்தில் செதுக்கப் பட்ட இந்த அருள் இறைவியின் சிலேமீது, அம்மலேக் குகையின் உச்சியிலிருந்து சுண்ணங்கலந்த நீர் கசிந் தொழுகியவண்ணம் இருந்தது. அந்நீரொழுக்கைத் தடை செய்யப் பலவகையில் முயன்றும் பலனின்றிப் பன்னூற் ருண்டுகளாக இந்தச்சிலே இடையருமல் சுண்ணச்சாந்துத் திருமுழுக்கு உடையதாகவே இருந்துவந்தது. இதன் பயஞக, இம்மரச்சிலேமீது சுண்ணம் படிந்து நாளுக்கு நாள் இறுகி, இன்று சுண்ணும்புப் பாறைகொண்டு செய்யப்பட்ட கற்சிலே போலக் காட்சியளிக்கிறது. இற்றை நாளில் குவாஞ சென்று இச்சிலேயைக் காண்பவர், இது

மரச்சிலே என்பதை ஏற்கார். அந்த அளவுக்கு அது கற்சிலேயாக மாற்றம் அடைந்துவிட்டது.

இந்த அருள் இறைவிக்கு, நகாஞே (Nagano) மாகாணத்தில் யுடானகா (Yutanaka) என்னும் வெந்நீர் ஊற்றுத் தலத்தில் 108 அடி உயரமுடைய சிலே ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. இந்தச் சிலேயின் முகம் மட்டும் பதினெட்டு அடி உயரமுடையதாம். இந்தச் சிலே முழுவதும் வெண்கலத்திஞல் ஆக்கப்பட்டிருக்கிறது. இதனுடன், டோக்கியோவுக்கு அறுபத்து மூன்று கல் தொலேவுக்கப்பால் டகசாகி (Takasaki) ரயில்வே நிலேயத்திற்கு மூன்று கல் தொலேவில், ஒரு குன்றின்மீது 130 அடி உயரமுடைய அருள் இறைவிச் சிலே ஒன்று இருக்கிறது. இஃது இரும்பு, சுண்ணம் முதலியவை கொண்டு செய்யப்பட்டது. இச்சிலேமீது ஏற உட்புறமாக வளேந்துவளேந்து செல்லத்தக்கவாறு படிகள் வைக்கப்பட்டுள்ளன. ஆதலால் உட்புறமாக இச்சிலேயில் தோள்வரை ஏறிச் சென்று, சூழவுள்ள இயற்கை வளஞ் செறிந்த இன்பக்காட்சிகளேக் கண்டு களிக்கலாம். கியோட்டோவில் உள்ள ஒரே கோவிலில் மட்டும் இவ்விறைவிக்கு 1001 சிலேகள் இருக்கின்றன. காமகூராவில் (Kamakura) இந்த அருள் இறைவிக்கு 30 அடி 3 அங்குல உயரத்தில் சிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆஞல், வேறு சிலேகளினும் இச்சிலே பெரிதும் வேறுபாடு உடையதாகும். இச்சிலே பதின்மூன்று முகமுடைய இறைவியாகச் செய்யப்பட்டிருக்கிறது.

### செந்தேவன்—பசுந்தேவன்

அரக்கர் போன்ற பெருஞ்சிலேகள், இரண்டு கடுகடுத்த முகத்தோற்றத்துடன் ஜப்பானிய புத்தர் கோவில்களின் வெளி வாயில்களில் இடப்புறமும் வலப்புறமுமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இவை, நம்மூர்க் கோவில்களில் வாயிற்காவலர் (துவார பாலகர்) என்னும் பெயருடன் காணப்படும் சிலேகள் போன்றவையாகும். இந்தச் சிலேகள்

மரத்தில் செதுக்கப்பட்டவையாகவே இருக்கின்றன. இவற்றை ஜப்பானியர் நியோ (Nio) தேவதைகள் என்று வழங்குகின்றனர். இவை தேவலோக அரசர்கள் என்னும் நம்பிக்கை அவர்களிடம் காணப்படுகிறது. இவை கோவில் களின் வாயில்களில் காவல் தெய்வங்களாக நிறுத்திவைக்கப் பட்டிருக்கின்றன என்றும், இவை எந்தத் தீக்கோளும் இறைவனேயோ அல்லது இறைவியையோ நெருங்காதவாறு தடுத்து ஓட்டும் ஆற்றலுடையவை என்றும் ஜப்பானியர் கருதுகின்றனர். இந்தச் சிலைகள் புத்தர் கோவில் ஒவ் வொன்றிலும் இரண்டிரண்டாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஒன்றைச் செந்தேவன் என்றும், மற்றென்றைப் பசுந்தேவன் என்றும் ஜப்பானியர் பெயரிட்டு அழைக் கின்றனர். செந்தேவன் வாயைத் திறந்துகொண்டிருப் பது போலவும், பசுந்தேவன் உதடுகளை இறுக்கி மூடிக் கொண்டிருப்பது போலவும் செதுக்கப்பட்டுள்ளன.

## தேவதைகள் மாநாடு

நம் நாட்டில் சந்திப்புத் திருவிழாக்கள் என்னும் பெயரில், சில கோவில்களின் தெய்வத் திருவுருவங்கள் எங்கேனும் ஓரிடத்தில், குறிப்பிட்ட விழாநாள் ஒன்றில், ஒன்று கூடுவது போலக் கொண்டாட்டங்கள் நிகழ்த்தப் படுவது வழக்கம் அல்லவா? ஆனல், ஜப்பானியர் ஆண்டுக்கு ஒரு முறை எல்லாத் தெய்வங்களும் ஒன்று கூடி மாநாடு கூட்டுவது போன்றதொரு திருவிழாவைச் செய்கின்றனர். இஜுமோ கோவிலில் அக்டோபர் மாதம் இந்தத் தெய்வங்களின் மாநாட்டுத் திருவிழா நடை பெறுகிறது.

## ‘ஓ – எம்மா சாமா’ – தெய்வம்

நம் நாட்டில், இறந்தவர் உயிர்களைக் கொண்டுசென்று, விசாரணைகள் நடத்தி, நற்கதி அளிப்பது அல்லது தண்டிப்பது என்னும் பொறுப்பை ஏற்றுள்ள தெய்வம்

எமன் என்பது போல, தாம் இறந்த பிறகு, உயிர்களைக் கொண்டு செல்லும் கூற்றுவனை **ஓ—எம்மா சாமா** என்னும் பெயரால் ஜப்பானியர் வழங்குகின்றனர்.

## ஏழு தெய்வங்கள்

மீன் பிடிப்பவர்கள், கடலில் படகேறிச் சென்று வாணிகம் செய்பவர்கள் ஆகியோரின் குலக்கடவுள் பெயரை **எபிஸு** (Ebisu) என ஜப்பானியர் அழைக்கின்றனர். உழவர் தங்கள் குலதெய்வமாக டாய்கோகு (Daikoku) என்னும் பெயருடைய இறைவனை வணங்குகின்றனர். பென்டென் (Benten) என்னும் இறைவி, கலை, இசை, திறமை முதலியவற்றுக்குப் பொறுப்புடைய தேவதையாக ஜப்பானியரால் மதிக்கப்படுகிறாள். போர் வீரர்களுக்கும், சமயப்பிரசாரகர்களுக்கும் வழிபடு கடவுளாக விளங்குவதன் பெயர் **பிஷாமன்** (Bishamon) என்பதாகும். ஆரூடம் கூறுவோர், பின்னால் வரப்போவதை முன்னறிந்து கூறும் திறமையாளர் ஆகியோரின் குலதெய்வம் பூக்குரோகுஜின் (Fukurokujin) என்னும் பெயரால் கூறப்படுகிறது. நீண்ட காலம் உயிருடன் வாழவேண்டும் என்று விரும்புபவர் வணங்கும் இறைவன் பெயர் ஜுரோஜின் (Jurojin) என்பதாகும். பெருஞ்செல்வம், அன்புள்ளம் முதலியவற்றை உண்டாக்கவல்ல ஆற்றல் பெற்ற தெய்வத்தின் பெயர் ஹோட்டெய் (Hotei) எனப்படுகிறது.

இந்த ஏழு தெய்வங்களும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவை ; கூட்டாக இயங்குபவை. இவை ஏழும் படகு ஒன்றில் ஏறிவந்து நல்வினையாளர்களுக்குப் பெருஞ் செல்வமும் சிறப்பும் புகழும் ஏற்படச் செய்பவை என்பது ஜப்பானிய மக்களது நம்பிக்கையாகும். இவற்றுள் பென்டென் என்னும் பெயருடைய தெய்வம் மட்டுமே பெண்ணாகும். மற்றை ஆறும் ஆண் தெய்வங்களே யாகும். இங்ஙனம் ஆறு தெய்வங்களும் ஒரு தேவதையும் சேர்ந்துவந்து எவருக்கேனும் அருள் பாலித்தால், அவர்

கள் உலக வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் எவ்வகை முயற்சியும் இன்றி முன்னேற்றம் அடைந்துவிடுவர் என்பது அந்நாட்டு மக்களது நம்பிக்கையாகும்.

## காற்றுத் தெய்வம்

நம்மவர் வாயுபகவான் என்னும் பெயருடன் காற்றைத் தெய்வமாகக் கொண்டிருப்பதுபோல, ஜப்பானியரும் காற்றுத் தெய்வ வணக்கம் உடையவராக இருக்கின்றனர். ஜப்பானியரின் காற்றுத்தெய்வத்துக்குக் கையில் இருக்கும் விரல்கள் நான்கே. இந்நான்கு விரல்களும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் நான்கு திசைகளைக் குறிப்பிடுவன என்றும், இத்தெய்வம் தன் வல்லமையை நான்கு திசைகளிலும் காட்டக் கூடியது என்பதை விளக்கவே, கையில் விரல்கள் நான்கே இருப்பதாகக் கற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஜப்பானியர் சொல்லுகின்றனர். இந்தக் காற்றுத் தெய்வத்தின் உருவச்சிலை, கழுத்தில் ஒரு பெரிய தோல் துருத்தியை மாலையாகப் போட்டிருப்பது போலச் செய்யப்பெற்றிருக்கிறது. இந்தத் தோல் துருத்தியைக் காற்றுத்தெய்வம் மெல்லச் சிறிது திறந்துவிட்டால் தென்றல் காற்று வீசி மக்கள் மனத்தை மகிழ வைக்கும் என்றும், சற்றுப் பெரிதாகத் திறந்துவிட்டால் பெருங் காற்று வீசிப் புயல் எழுப்பும் என்றும் ஜப்பானியர் நம்புகின்றனர்.

## மருத்துவத் தெய்வம்

நம் நூல்களிற் கூறப்படும் அஸ்வினி தேவர்கள் போன்றதொரு தெய்வம் ஜப்பானியருக்கும் இருக்கிறது. இந்தத் தெய்வத்தை மருத்துவப் புத்தர் என்னும் பொருள் தரும் யாகூஷி (Yakushi) என்று அம்மக்கள் அழைக்கின்றனர். இதை வணங்குவதால் தாங்கள் நோயற்ற வாழ்வு வாழமுடியும் என்பது அவர்தம் நம்பிக்கை.

## அழுகின்ற நாகம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள யாகூஷி கோயில் கூரையின் உட்புறத்தில் பறக்கும் வல்லமை படைத்ததெனக் கூறப்படும் நாகப்பாம்பின் உருவம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. நாம் அப்பாம்புத் தலைக்கு நேரே கீழே நின்று கைகளைத் தட்டினால், மேலே எழுதப்பட்டிருக்கும் அப்பாம்பு ஓவியம் அழுகின்றதாம். அப்பாம்பு அழும் ஒலி கீழே இருப்பவர்களுக்கு நன்கு கேட்கிறதாம்.

## ஆயிரங்கைப் புத்தர்

சான்பட்சூடோ (Sanbutswdo) கோவிலில் புத்தரின் உருவச்சிலைகள் மூன்று இருக்கின்றன. நடுவில் உள்ள உருவச்சிலை, புத்தர் தியானத்தில் ஆழ்ந்திருப்பதுபோல அமைந்துள்ளது. அதன் வலப் புறத்திலே ஆயிரங் கைகளைக்கொண்ட புத்தர் உருவம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதன் இடப்புறத்தில் குதிரைத்தலையுடைய புத்தர் உருவம் உள்ளது. இந்தக் கோவிலை ஜப்பானியர் பெரிதும் மதிக்கின்றனர்.

## வீரர் வணக்கம்

தங்களிடையே பெரும் வீரர்களாகத் திகழ்ந்து மறைந்தவர், பெரும்புகழ் படைத்தவர் ஆகியோரின் சாம்பலைப் புதைத்து, புதைத்த விடத்தில் கோவில் எழுப்பி வழிபடும் வழக்கமும் ஜப்பானியரிடையே காணப்படுகிறது. புத்தசமயத்தை முதன் முதலாக ஜப்பானில் பரவச்செய்த முதல் சமயத்தலைவரான ஷாகா (Shaka) என்பார் இறந்தபின், அவர் உடலை எரித்துச் சாம்பராக்கி அச்சாம்பரைப் புதைத்து அதன்மீது கட்டப்பட்ட கோவில் ஐமெட்சு கோவில் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கோவிலில் உள்ள சமாதி பன்னிரண்டு அடி உயரமுடையதாக வெண்கலத்தால் சமைக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானின் படைத்தலைவர் ஷோகுன் என்பவருடைய சவச்

சாம்பல் புதைக்கப்பட்ட இடமும் சமாதிக் கோவிலாக விளங்குகிறது.

## பிசாசுக் கோவில்

மனித இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து, மனித இறைச்சியை மகிழ்ச்சியுடன் உண்பதில் விருப்பங்கொண்ட யாஷா (Yasha) என்னும் பெயருடைய பிசாசுக்கும் ஜப்பானியர் கோவில் கட்டியிருக்கின்றனர். இந்தப் பிசாசை வணங்குவதால், இது சினந்தணிந்து மனிதர்களை உண்ண நெருங்காது அமைதியாக இருக்கும் என்று அந்நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

## இனரிக் கோவில்கள்

இனரிக் கோவில் இல்லாத சிற்றூரையோ பேரூரையோ ஜப்பானில் எங்கும் காணமுடியாது. எல்லா ஊர்களிலும் நகரங்களிலும் இந்தக் கோவில் இருக்கின்றது. ஓர் ஊரில் ஒன்றுக்கு மேற்பட்டவையாகவும் இருக்கின்றன. விளைவுப்பொருள்களின் தெய்வத்திற்கு ‘இனரி’ என்பது பெயராகும். எனவே, இனரி உழவரது பெருந்தெய்வமாகக் கருதப்படுகிறது. இந்தக் கோவில்கள் செந்நிறம் தீட்டப் பட்டுள்ளன. இஃது உழவரின் தெய்வமே எனினும், நகரங்களில் உறைபவர்களும் மிகுந்த பக்தியுடன் இத் தெய்வத்தை வணங்குகின்றனர்; இத் தெய்வத்தின் பெயரை அடைமொழியின்றிக் கூறமாட்டார்கள்; அஃதாவது, மிகுந்த மரியாதையுடன் ‘ஓ-இனரி சான்’ (O-Inari san) என்றே கூறுகின்றனர்.

இக்கோவில்களுக்கு வெளிப்புறத்தே இருபுறமும் ஒவ்வொன்றாக இரண்டு நரி உருவச்சிலைகள் இருக்கின்றன. உட்கார்ந்திருப்பவைபோலச் செய்யப்பட்டுள்ள இந்நரிச் சிலைகள் இல்லாத இனரிக்கோவிலை ஜப்பானில் காண்பது அரிது. இந்த நரிகள் இனரித் தெய்வத்தின் தூதர் என்றும், இனரித் தெய்வத்தின் ஏவல்களை நிறைவேற்றிவைக்கும்

வேலை அனைத்தையும் தேவதூதராகிய இந்த நரிகளே பழுதற நிறைவேற்றி முடிக்கின்றன என்றும் ஜப்பானில் உள்ள பழைமை விரும்பிகள் இன்றும் நம்புகின்றனர்.

## கடற்கன்னிகள்

கடற்கன்னிகள் இருப்பதாகவும், அவர்கள் வணக்கத் திற்குரியவர் என்றும் ஜப்பானியக் கடற்கரையோரச் சிற்றூர்களில் உறையும் மக்கள் கருதி, வழிபடுதலையும் விழாக் கொண்டாடுதலையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்; இக்கடற்கன்னிகளின் அருள் இருந்தால்தான் கடலில் மீன் பிடித்தல் இன்னலின்றி நடைபெறும் என்றும், மீன்கள், முத்துக்கள் போன்றவை நிறையக் கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். ஆனால் மேனாட்டு நாகரிகம் பரவியுள்ள இக்காலத்தில், நகரங்களில் உறையும் மேனாட்டுக் கல்வியும் விஞ்ஞானமும் பயின்ற மக்கள் இதற்குப் பின்வருமாறு காரணங் கூறுகின்றனர்: “பன்னெடுங்காலமாக முத்துக் குளிக்கும் தொழிலில் ஜப்பானியப்பெண்களே பெரிதும் ஈடுபட்டிருந்தனர். இப் பெண்கள் கடலின் ஆழத்தில் மூழ்கி முத்துச்சிப்பிகளைக் கூடைகளில் வாரிக்கொண்டு, நீந்தி வந்து தங்கள் படகுகளில் ஏறுவர். இவ்வண்ணம் பசிபிக் மாகடலில் நெடுந்தொலை சென்று முத்துச் சிப்பி திரட்டும் வேலையில் ஜப்பானியப் பெண்கள் ஈடுபடுவதுண்டு. பழங்காலத்தில் இவ்வாறு முத்துக் குளிக்கும் பெண்களைக் கண்ட பழைமையில் நம்பிக்கையுடையோர் அவர்களைக் கடற் கன்னிகள் என்று தவறுதலாக எண்ணிக் கதைகள் கற்பனை செய்து விட்டிருக்கவேண்டும். அக்கதைகளே தலைமுறை தலைமுறையாக வழங்கி வருகின்றன”.

## திருமணத் தெய்வம்—காதற் கடவுள்

திருமணங்களைக் கூட்டிவைக்கும் ஆற்றல் ‘**காமி**’ (Kami) என்னும் பெயருடைய கடவுளுக்கு உண்டென்றும், அக்கடவுள் அருள் இல்லையாயின், திருமணங்களே

நிகழமாட்டா என்றும் ஜப்பானியர் நம்புகின்றனர்.* ஜப்பானியர் பஞ்சாங்கப்படி அக்டோபர் மாதம், 'காமி' கடவுள் இல்லாத மாதம் என்று நம்பப்படுவதால், பழைமையில் பற்றுடையவர் அக்டோபர் மாதத்தில் திருமணம் நடத்தமாட்டார். இந்த மாதத்தில் 'காமி' தன் கோயிலில் தெய்வங்கள் மாநாடு கூட்டுவது வழக்கம் என்றும், எல்லாத் தெய்வங்களும் அம்மாநாட்டுக்குப் போய்விடுமாகலின், எல்லாக் கோயில்களும் தெய்வங்களின்றி வறிதே காணப்படும் என்றும் ஜப்பானியர் நம்புகின்றனர். இஸுமோ (Izumo) மண்டலத்திலுள்ள காமி கோயிலுக்கு ஜப்பான் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் யாத்ரிகர் சென்றவண்ணமே இருக்கின்றனர்.

திருமணமானவர் காமிகோயிலுக்குச் செல்வதில்லை. தவறிச் சென்றால், அத்தெய்வம் பொறாமை கொண்டு, திருமணமான கணவன்-மனைவியரிடை மனவேறுபாடு உண்டாக்கிவைக்கும் என அம்மக்கள் அஞ்சுகின்றனர். எனவே, அக்கோவிலுக்குச் செல்பவர் அனைவரும் திருமணமாகாதவராகவே இருக்கின்றனர். இவ்வாறு பல இடங்களிலிருந்து தன் கோவிலுக்கு வந்து, திருமணம் கூட்டிவைக்குமாறு வேண்டிக்கொள்ளும் மக்களுக்கு விரைவில் திருமணம் முடித்து வைப்பதில் 'காமி' என்னும் தெய்வம் மிகுந்த விருப்பம் உடையதாம்.† ஆதலால் இக்கோவிலுக்குச் செல்லும் மணமாகாதவர்கள் தொகை ஒவ்வோராண்டிலும் பெருகிக்கொண்டேயிருக்கிறது.

இக்கோவிலுக்குச் செல்ல இயலாதவர்கள் தத்தம் சிற்றூர்க் கோவில்களில் உள்ள காமி சிலைக்குமுன் பிரார்த்தனை செய்து கொள்வதும் உண்டு. திருமணப் பிரார்த்தனைகளை ஒரு காகிதத்தில் எழுதி, அக்காகிதத்தைச்

---

*காமன் வணக்கம் சிந்தாமணியிற் கூறப்பட்டிருத்தல் இங்குக் கருதத்தகும்.

†சுரமஞ்சரி காமதேவன் சிலைமுன் இருந்து வேண்டிக் கொண்டமை இங்கு நினைக்கத்தகும்.

சுருட்டித் தங்கள் ஊர்க் கோவிலின் வாயிலில் உள்ள மரச் சட்டங்களில் பிணைத்துவைப்பதும் ஜப்பானியரின் வழக்கம். இதுவும் இயலாதவர் ஒரு காகிதத்தில் தம் பெயரையும் தாம் காதலிப்பவரது பெயரையும் வரைந்து, வேண்டுகோளையும் எழுதி, அக்காகிதத்தை நன்கு சுருட்டி, மரக்கிளைகளில் கட்டிவிடுவர். இக்காகிதத்தை மரக்கிளையில் கட்டும் மணமாகாதவர், தம் இரண்டு கைகளிலும் உள்ள கடை விரல்கள், அல்லது மோதிர விரல்களையே பயன் படுத்த வேண்டுமாம். மற்ற விரல்களைப் பயன்படுத்திக் கட்டினுல் அத்தெய்வம் தமது வேண்டுகோளை ஏற்காது என்பது அவர்களது எண்ணமாகும்.

## திருமண விலக்கு அளிக்கும் தெய்வம்

இட்டாபாஷி (Itabashi) என்னுமிடத்தில் அகன்று உயர்ந்து வளர்ந்த நெடுமரம் ஒன்று இருக்கின்றது. அதனைத் ‘திருமண விலக்கு அளிக்கும் மரத் தெய்வம்’ என்று ஜப்பானியர் நம்புகின்றனர். திருமண விலக்கு விரும்பிய பழங்கால மக்கள் அம்மரம் இருக்கும் இடத்திற்கு யாத்திரை சென்று, மரத்திற்கு எதிரில் நின்று, வழிபாடு செய்வர் ; பின்பு, மரப்பட்டையைச் சிறிது சீவி எடுத்து வந்து அதனை நீரில் வேகவைப்பர் ; அந்த நீரைத் தாம் விரும்பாதவருக்குக் கொடுத்துப் பருகச் செய்வர் ; அவ்வாறு பருகக் கொடுப்பவரின் கருத்தை அம்மரத் தெய்வம் உடனே நிறைவேற்றிவிடும். ஆனுல் இந்த நம்பிக்கை இன்று அருகிவிட்டது. இன்று சட்ட வழியே திருமண விலக்குக் கிடைப்பதால், அதற்கென ஒரு தெய்வம் வேண்டும் தேவை ஜப்பானியருக்கு ஏற்பட வில்லை.

## பரிதி இறைவி

ஜப்பானியர் பரிதியை இறைவியாகக் (Sun Goddess) கொண்டு வழிபடுபவர். தங்கள் நல்வாய்ப்புக்கள் அனைத்

தும் பரிதியால் ஏற்படுகின்றனவாதலின் பரிதியை வழி படுவதே சிறந்ததென அம்மக்களுட் பலர் எண்ணு கின்றனர். சூரியக்கிரகண நாட்களை ஜப்பானியர் மிகச் சிறந்த நாட்களெனக்கொண்டு, திருமணங்கள் போன்ற சடங்குகளை அந்நாட்களில் நிகழ்த்த விரும்புகின்றனர். மனித இன நல்வாய்ப்புக்களுக்கு மட்டுமின்றி விளைவு களுக்கும் கதிரவனே பொறுப்பாயிருப்பதால், உழவர் கதிரவன் போக்கைக் கணக்கிட்டே தங்கள் பயிர்த்தொழிலை நடத்துகின்றனர்.

## புத்தர்பெருமான் திருமுழுக்கு

புத்தர் பெருமானின் பிறப்புத் திருநாள் ஏப்ரல் மாதம் எட்டாம் நாள் ஜப்பானியரால் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. எல்லாக் கோயில்களிலும் இத்திருநாள் சிறப்பிக் கப்படுகிறது; எனினும், இதற்கென அந்நாளில் ஒரு தனிக் கோவில் அமைக்கப்படுகிறது. அக்கோயில் பன்னிறப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு மலர்க்கோயில் போன்றே காட்சி அளிக்கிறது. அக்கோயிலில், ஒரு கையை மேலே உயர்த்தி, மற்றொன்றை நிலத்தைச் சுட்டு வது போலத் தாழ்த்திநிற்கும் புத்தரின் குழந்தை உருவம் வைக்கப்படுகிறது. இவ்வுருவத்திற்கு 'அமாசா' (Amacha) எனப்படும் இனிப்புத் தேநீரால் திருமுழுக்கு நடத்தப் படுகிறது.

புத்தர் பெருமான் பிறந்த அன்றே எழுந்து நின்று நான்கைந்து அடித் தொலை சுற்றி நடந்துவந்து, "எல்லா உலகங்கட்கும் நானே முதல்வன்," என்று உரத்துக் கூறினதாக ஜப்பானியர் நம்புகின்றனர். இந்நம்பிக்கை யின் அடிப்படையாகவே, புத்தர் பிறப்புத் திருநாளின் போது, நின்றிருக்கும் குழந்தை உருவமாகப் புத்தரின் சிலை வைக்கப்பட்டு, அதற்குச் சடங்குகள் நிகழ்த்தப் படுகின்றன.

அமாசா என்பது ஜப்பானில் விளையும் ஒரு வகைக்

குத்துச்செடி. இதன் இலைகள் இனிப்புச் சுவை உடையவை. மலைப்பகுதிகளில் இச் செடிகள் பெரும் புதர்களாக வளர்கின்றன. ஜப்பானியர் இந்த இலைகளைக் கொணர்ந்து நீராவியில் வதக்கி உலர்த்திச் சேமித்து வைக்கின்றனர். உலர்ந்த அமாசாவில் ஒரு பிடி எடுத்து வெந்நீரில் போட்டால் அஃது இனிப்பு மிகுந்த குடிநீராகிவிடுகிறது. இந்த இலைகளை நீரில் இட்டுக் காய்ச்சிக் குடிநீராக்குவதும் உண்டு. ஜப்பானியர் சர்க்கரையை அறியாதிருந்த காலத்தில் இனிப்புச் சுவைக்காக அந்நாட்டில் அமாசா இலைகளே பயன்பட்டுவந்தன. இப்போது கரும்பு பயிரிடுதல் மிகுந்து, சர்க்கரை உற்பத்தி பெருகிவிட்டதால், அமாசாக் குடிநீர் ஆண்டுக்கொரு முறை புத்தர்பிரானின் பிறப்புத் திருநாளன்றுதான் கையாளப்படுகிறது. அண்மையில் போர்க் காலத்தில் சர்க்கரைப் பஞ்சம் நேரிட்டபோது, மீண்டும் இந்த அமாசாக் குடிநீர் ஜப்பானில் வழக்கத்துக்குக் கொணரப்பட்டது ; எனினும், போர் முடிந்த பிறகு, அமாசா பழைய நிலையை அடைந்துவிட்டது.

புத்தரின் பிறப்புத் திருநாளன்று, புத்தர் திருவுருவத்தின் எதிரில் அமாசா பெரிய தொட்டிகளில் நிரப்பப்பட்டிருக்கும். வணக்கத்திற்கு வரும் மக்கள், புத்தரின் குழந்தைத் திருவுருவத்தின்மீது அந்தத் தேநீரை ஒரு சிறு குவளையில் எடுத்து ஊற்றித் திருமுழுக்கு நிகழ்த்துவர். அவ்வாறு ஊற்றப்படும் நீரைப் பிடித்துவைத்துக் கோயிலுக்கு வருபவர்களுக்கெல்லாம் அவ்வினிப்பு நீர் கொடுக்கப்படுவதும், அதனைப் புனிதமானதெனக் கருதி, ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் பகிர்ந்தளித்துக் குடிப்பதும் அந்நாட்டவரின் தொன்மை வாய்ந்த மரபு. இதனால் சமயப்பற்று வளர்கிறது என்றும், இறையன்பு பெருகுகிறது என்றும், உடல்நலம் காக்கப்படுகிறது என்றும் ஜப்பானியர் நம்புகின்றனர்.

## ஜிஸோ தெய்வம்

ஜப்பானில் நாட்டுப்புறப் பகுதிகள் எங்கும் புத்தரின் 'ஜிஸோ' (Jizo) என்னும் உருவம் வணங்கப்படுகிறது. தமிழகத்தில் ஊர்ப் பகுதிகளில் பிள்ளையார் கோயில் மரத்தடிகளிலும் முச்சந்திகளிலும் தெருக் கோடிகளிலும் தெருவுக்கு ஒன்றிரண்டாகக் கல் மேடைகள் மீதும் குடிசை களுக்குள்ளும் அமைக்கப்பட்டிருப்பது போல, ஜப்பானில் நாட்டுப்புறப் பகுதிகளில் நோக்குமிடமெல்லாம் ஜிஸோ உருவச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வுருவங்கள் மூக்குடைந்தும், காதுடைந்தும், கையுடைந்தும் காலநிலையால் பழுதுபட்டுப் பல இடங் களில் காணப்படினும், மக்களின் பற்று மட்டும் குறைய வில்லை. இவ்வுருவத்தைக் கடந்து செல்பவர் சிறிது நேரம் நின்று புத்தமந்திரம் ஓதி, சிறு கல் ஒன்றை எடுத்து, அச் சிலையின் பாதத்தடியிலோ, தோள்மீதோ, தலைமீதோ வைத்துப்போவர். ஜிஸோ 'குழந்தையின் காவற் கடவுள்' என அம்மக்களால் மதிக்கப்படுவதால், இறந்து போன தங்கள் குழந்தைகளுக்கு நற்கதி உண்டாக்க வேண்டு மெனப் பெற்றோர் அத்தெய்வத்திடம் வேண்டுகோள் விடுத்து, சிறு கல்லொன்றை அச்சிலையின் அடியில் வைப்பர். வேண்டிக்கொள்பவர் செல்வராயிருப்பின், கல்லில் சிறு வட்டம் செய்து, அதனை ஒரு மூங்கிற் கழியில் இணைத்து, அச்சிலையருகில் நட்டுவைப்பர். சிலர் மூங்கிற் கூடை கொணர்ந்து அதனை ஒரு மூங்கிற் கழியில் இணைத்து நட்டுவைப்பர். மற்றையோர் அக்கூடைகளில் கற்கள் இடுவர். இவ்வண்ணம் தன் முழங்காலளவு கற்கள் அடுக்கப்பட்டும், தோள்மீதும் தலைமீதும் கற்குவியல்கள் வைக்கப்பட்டும், சுற்றிலும் சிறுகற்கள் நிறைந்த கூடைகள் தொங்கவிடப்பட்டும் நாட்டுப்புறப் பகுதிகளில் ஜிஸோ தெய்வம் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. கற்களையும் கட்டடங்களையும் ஜிஸோவின்மீதோ, அருகிலோ அடுக்கு வதால், தெய்வம் தன் அன்பர்களின் குறைகளைச் செவி

யேற்று, இறந்துபோன அவர்தம் குழந்தைகளுக்கு நற்கதி ஏற்படச் செய்யும் என்று ஜப்பானியர் நினைக்கின்றனர்.

**மலை வணக்கம்**

பண்டைக் காலத்தில் மலைகளுக்கு இறகு முளைத்து, அவை நினைத்த இடத்திற்குப் பறந்து செல்லக்கூடிய ஆற்றல் பெற்றவையாக இருந்தன என்றும், பின்னர் அவற்றின்மீது சினங்கொண்ட தேவேந்திரனால் இறகுகள் அறுக்கப்பட்டன என்றும், அறுக்கப்பட்ட பின்னரே மலைகள் நிலத்துக் கிடக்கவேண்டியவையாயின என்றும், நம் நாட்டுப் புராணங்கள் கூறுகின்றன. மலைகளுக்கு உயிர் இருப்பதாகவும், மலை ஆன்மாக்கள் மக்களுக்குத் தீமை செய்யக்கூடியவை என்றும் ஜப்பானியர் கருதுகின்றனர். எனவே, அவர்கள் நான்ட்டாய் மலை ஆன்மாவுக்கென ஒரு கோவிலைக் கட்டியுள்ளனர். இதற்குப் 'பூட்டாரசான்' (Futaarasan) என்னும் பெயர் இடப்பட்டிருக்கிறது. இக்கோவிலில், நான்ட்டாய் மலையின் ஆன்மா கோயில்கொண்டிருக்கிறதாம்.

ஜப்பானியர் மலைகளையே வணக்கஞ் செய்தலையும் வழக்கமாக உடையவர். ஜப்பானில் உள்ள உலகப் புகழ் வாய்ந்த **பூஜியாமா** மலையை, ஜப்பானியர் அனைவரும் வணங்குதற்குரியதாக மதிக்கின்றனர்.

ஜப்பானில் உள்ள மலைகளுள் '**பூஜியாமா**' (Fujiyama) என்பதே மற்றவற்றிலும் பெரியதாகவும் சிறப்புமிக்கதாகவும் புனிதமானதாகவும் விளங்குகிறது. ஜப்பானியர் இம்மலைக்கு ஆண்டுக்கு ஒருமுறை யாத்திரை செய்கின்றனர். ஜுலை, ஆகஸ்டு ஆகிய இரு திங்கட்காலமே யாத்திரைக்குரிய காலமாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அம்மலைமீது ஏறுகின்றனர். இங்ஙனம் மலையேறுவது, ஜப்பானியர் சமயக் கொள்கைகளுள் ஒன்றாகும்.

மலை ஏறச்செல்லும் மக்கள் தங்கள் உள்ளத் தூய்மையை வெளிக்காட்டுவது போல வெள்ளை உடை அணிந்து செல்லுகின்றனர். ஆனால் இந்த உடைகள் தூய்மையாக இல்லாமல் மாசு அடைந்தும், மலையின்மீது உராய்வதால் ஏற்படும் கறைகளுடனும் காணப்படுகின்றன. எவர் உடை மாசு படிந்தும் கறைகள் மிகுந்தும் காணப்படுகிறதோ, அவர் பன்முறை மலை ஏறியவர் என்பதை விளக்குவதால், மாசுபடிந்த வெள்ளை உடைகளை அம்மலைக்குச் செல்பவர் தங்கள் பெருமைக்குரியவை என்று கருதுகின்றனர்.

உள்ளத் தூய்மை உடையவரே மலைமீது ஏறலாம்; மற்றையோர் தடுக்கப்படுகின்றனர். மலைமீது ஏறுபவர்கள் கையில் நீண்ட கோல் ஒன்றை வைத்துக்கொண்டு 'ரோக்கன் ஷோஜோ' (Rokkon Shojo) என்று உரத்துக் கூவிய வண்ணம் செல்லுகின்றனர். "கண், செவி, மூக்கு நா, உடல், மனம் ஆகிய ஆறு பொறிகளையும் எல்லாத் தீமைகளினின்றும் காப்பாயாக", என்பதே இதன் பொருளாகும். பூஜியாமா போலச் சிறிய செய்குன்றுகளை ஜப்பான் நாட்டின் பல பகுதிகளில் அமைத்து, பூஜிமலைக்குச் செல்ல முடியாதவர்கள் ஆங்காங்கு இருந்தவண்ணம் அதை வணங்குதற்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது.

வீடுதோறும் தெய்வத் திருவுருவங்களை வைத்து நாள்தோறும் வணக்கம் செய்யும் பழக்கமுடைய இந்துக்களைப் போலவே, புத்தர் பெருமானுடைய உருவச் சிலைகளை வீடுகளில் வைத்து நாள்தோறும் வணக்கம் செய்யும் பழக்கம் ஜப்பானில் இன்றளவும் காணப்படுகின்றது.

பொதுவாக, இறை வணக்கத்தில், நம் நாட்டு இந்து சமய மக்களுடைய பழக்கவழக்கங்கள் சில அம்மக்களிடையே சிதைந்த உருவத்தில் காணப்படுகின்றன. ஜப்பானியருக்கு இறைவனையும் சமயத்தையும் அளித்து உதவிய பாரத நாட்டின் சமயத் தொடர்பான செயல்கள் சில, அம்மக்களிடமும் காணப்படுதல் இயல்பேயன்றோ?

# 6. பிறப்புமுதல் இறப்புவரை

## பிறப்பதற்குமுன்

ஆசியாக் கண்டத்து வாழும் மக்களிடையே பழக்க வழக்கங்கள் பல ஒன்றுபோற் காணப்படுகின்றன. ஜப்பானியரும் தமிழகத்தினரும் இத்துறையில் பெரிதும் ஒருமை பெற்றுளர் என்பது மிகையன்று. தமிழகத்திலே, தாயின் கருவிலே உருவாகும் குழவிக்கு ஏழாம் திங்கள் முதல், அக்குழவி பிறந்து வளர்ந்து, மறைந்து பல்லாண்டுகள் செல்லும்வரை, பல்வகைச் சடங்குகள் செய்தல் போன்று, ஜப்பானியரும் செய்கின்றனர்.

ஜப்பானிலே மக்கள் பிறப்பு முதல் இறப்புவரை நிகழ்த்தும் சடங்குகள், விழாக்கள் போன்று எழில் மிக்க தோற்றத்துடன் இலங்குகின்றன. மேனுட்டு நாகரிகம் யாண்டும் பரவிவரும் இக்காலத்தில் ஜப்பானிலும் பண்டைப் பழக்கங்கள் சில அருகிவருகின்றன எனினும், மக்களுட் பெரும்பாலோர் மரபு வழுவாமல் இச்சடங்குகளை நிகழ்த்திவருகின்றனர்.

தாயின் கருவில் ஆறு திங்கட் காலம் வளர்ந்த பிறகே குழவிக்கு உயிர் உண்டாகிறதென்பது ஜப்பானியரது நம்பிக்கை. தாய் கருவுற்ற ஆறும் திங்களில், குழவி தாயின் கருவில் இருக்கும்போதே, முதற்சடங்கு ஜப்பானியரால் நிகழ்த்தப்படுகிறது. ஜப்பானியர் இச்சடங்கினை 'யுவாட்டாஒபி' (Yuwata-obi) என அழைக்கின்றனர். இதன் பொருள் 'வெள்ளைப் பட்டுத் துண்டு' என்பதாம்.

எட்டடி நீளமுள்ள ஒரு வெண்ணிறப் பட்டுத் துண்டைத் தாயின் வயிற்றைச் சுற்றிக் கட்டிவைப்பதுதான் இச் சடங்காகும். இச் சடங்கின்போது, கணவன் பட்டுத் துண்டைத் தன் இடக்கையால் மனைவியிடம் அளிப்பான். அவள் அதனை வலக்கையால் வாங்கித் தன் தாயிடம் கொடுப்பாள் ; அவ்வன்னை அத்துண்டைக் கருக்கொண்ட

தன் மகளின் வயிற்றைச் சுற்றிக் கட்டுவாள். இதனை ஒட்டி உண்டாட்டு ஒன்று நிகழும். உறவினர், நண்பர் எனப் பலர் இவ்விழாவிற்கு அழைக்கப்படுவர். இச் சடங்கினால் தாயும் குழவியும் தீமைகளினின்று காக்கப்படுவர் என்பது ஜப்பானியரின் நம்பிக்கையாகும். இன்றைய ஜப்பானியர் இவ்விழாவில் வெண்மைநிறப் பட்டுத் துண்டினை விடுத்து, செம்மை, வெண்மை, மஞ்சள் என மூன்று நிறங்கள் கலந்த துணி அளித்து வருகின்றனர். செம்மை மகிழ்ச்சிக்கும், வெண்மை தூய்மைக்கும், மஞ்சள் தீமைகளை விலக்குவதற்கும் அறிகுறி என அம்மக்கள் கருதுகின்றனர். நாகரிகத்தில் திளைத்த சிலர் இவற்றை விடுத்துக் கம்பளத் துண்டு கொடுத்து, இவ்விழாவினை நிறைவேற்றுகின்றனர்.

## முதல் ஏழு நாட்கள்

குழந்தை பிறந்த முதல் நாள் மாலை, மூன்றும் நாள் மாலை, ஐந்தாம் நாள் மாலை, ஏழாம் நாள் மாலை என நான்கு நாள் மாலைப்பொழுதுகளிலும் ஒவ்வொரு வகைச் சடங்கினை நிகழ்த்துதல் பண்டை மக்களின் மரபு. இந் நான்கு நாட்களிலும் குழந்தை பிறந்த இல்லம் ஒரு பெரிய விழாக் கூடமாக மிளிரும். ஆனால், இன்று ஜப்பானியரிடை வழக்கத்திலிருப்பது, ஏழாம் நாள் மாலைச் சடங்கேயாகும். இதனை அம்மக்கள் 'ஓஷிகியா' (Oshichiya) என்கின்றனர். இதனைப் 'பெயரிடு விழா' எனல் பொருந்தும். இந்த ஏழு நாட்கள் வரை குழந்தைக்குப் பெயரிடுதலோ குழந்தையைப் பிறர் பார்த்தலோ கூடாது. ஏழாம் நாள் மாலை, குழந்தை நன்கு ஒப்பனை செய்யப்படும். அன்று உற்றார் உறவினர் அனைவரும் விருந்துக்கு அழைக்கப்படுவர். குழந்தையின் பாட்டி அல்லது செவிலி அக் குழந்தையை வெளியிற் கொணர்ந்து, அனைவருக்கும் அறிமுகப்படுத்துவர். அப்பொழுது குழந்தையின் தாய் வெளி வருதல் கூடாது. அவ்விழாவில் குழந்தையின்

தந்தையார் தமக்கு விருப்பமான பெயரைக் குழந்தைக் கிட்டு அழைப்பார். பெண்குழந்தையாயின் தாயார் தமக்கு விருப்பமான பெயரிடல் வேண்டுமென வற்புறுத்து வார். பெயரிடுதலில் தந்தைக்கும் தாய்க்கும் கருத்து வேற்றுமை வலுத்துவிடுமாயின், சான்ருேர் ஒருவரைக் கொண்டு பெயரிடச் செய்வர். இவ்விழாவில் நடைபெறும் உண்டாட்டு வியப்புக்குரியதாகும்: விருந்தினருக்குப் படைக்கும் சோறு, மொச்சை, மீன் முதலிய யாவும் செந் நிறமுடையனவாகவே இருக்கும்; மீன் பல வகையாகச் சமைக்கப்படும்; காய்கறிகளும் வைக்கப்படும். இவற் றுடன் அரிசியைக்கொண்டு செய்யப்படும் 'சாக்கே' எனும் மதுவும் வழங்கப்படும். விழாவிற்கு வரவியலாத உற்ருர் உறவினர்க்கு, அரிசியால் செய்யப்பட்ட இட்டலி போன்ற ஒருவகை உண்டி அனுப்பப்படும். குழந்தை பிறந்த மகிழ்ச்சி அனைவர் உள்ளத்தும் ஏற்படவேண்டும் என்பதே இவ்விழாவின் கருத்தாகும்.

## முதல் திங்கள் முடிந்தபின்

குழந்தை பிறந்து ஒரு திங்கள் முடிந்ததும், ஆணு ஞல் முப்பத்திரண்டாம் நாளிலும், பெண்ணுஞல் முப் பத்து மூன்ரும் நாளிலும் கோயில் புகுவிழா ஒன்று நிகழ்த்தப்படுகிறது. 'மியா மெய்ரி' (Miya mairi) என் பது இவ்விழாவின் பெயராகும். 'முதன் முதலாகக் கோயிற் புகுதல்' என்பது இதன் பொருளாம். பிறந்து ஒரு திங்கள் முடிந்த குழந்தையை அழகு மிக ஒப்பனை செய்து, தாயாவது செவிலியாவது பாட்டியாவது முதுகிற் சுமந்து செல்ல, ஆடையணி அலங்காரங்களொடு விளங் கும் உற்ருர் உறவினர் பின் தொடர, அனைவரும் ஊர்வலம் போன்று ஊர்க் காவற் கடவுள் திருக்கோயிலை அடைவர். பின் தொடரும் ஒவ்வொருவரும் குழந்தையின் உடுப்புக் களுள் ஒவ்வொன்றைத் தத்தம் முதுகிற் போட்டுச் செல் வது காண்பதற்கு வேடிக்கையாயிருக்கிறது. கோயிலுக்

குச் சென்றதும் புரோகிதர் குழந்தையைத் தூய்மைப் படுத்தித் தீக்கோள்கள் எவையும் அணுகாவண்ணம் இறைவனே வணங்கி வாழ்த்துக் கூறுவார். கோயிற் சடங்கு முடிந்த பின்னரே, குழந்தை உற்ருர் உறவினர் இல்லங்கட்கு எடுத்துச் செல்லப்படலாம். குழந்தையைக் கோயிற் சடங்கு முடிந்தவுடன் எவர் இல்லத்திற்கேனும் எடுத்துச் சென்ருல், குழந்தையை எடுத்துச் செல்பவர் தாம் போகும் இல்லத்தாருக்கு ஒரு சிறு மூட்டைக் கோதுமை நொய்யைக் கொடுப்பார். அதைப் பெறும் அவ்வில்லத்துக்குரியோர், காகிதத்தால் செய்யப்பட்ட நாய்ப்பதுமை ஒன்றை அக் குழந்தைக்குப் பரிசாக அளிப்பர். கோதுமை நொய் அளிப்பதன் கருத்து, குழந்தை தன் உணவை நண்பர்களுடன் பகிர்ந்துண்ண விரும்புகிறது என்பதாம். நாய்ப்பதுமை அளிப்பதன் கருத்து, நாய்க்குட்டிகளேப் போன்று விரைந்து நல்லுரத்தோடு குழந்தை வளர வேண்டும் என்பதாகும். இறுதியில் இக்குழுவினர் அனைவரும் குழந்தையின் இல்லம் திரும்புவர். இல்லம் திரும்பியதும் அனைவருக்கும் சிறப்பு முறையில் விருந்தொன்று நடைபெறும்.

## உணவருத்தும் சடங்கு

நான்காம் திங்கள் முடிந்ததும் பால் அருந்துவதை நிறுத்தி, உணவுண்ணும் சடங்கு நடைபெறும். நான்கு மாதக் குழவி உணவருந்துதல் இயலாத செயலெனினும், குறிப்பிட்ட நாளில் அனைவரும் விருந்துக்கு அழைக்கப்பட்டு, விருந்தினர் முன், அக்குழந்தையின் வாயில் ஒரு சோறு வைக்கப்படும். 'குழந்தை விரைவில் வளர்ந்து, உணவில்லாத் துயர் எய்தாதிருக்குமாக' என்று இறைவனை வாழ்த்துவதே இச்சடங்கின் நோக்கமாகும். இச்சடங்கில் சற்று உயர்ந்த சிறுமனை, சோறு, குழம்புடன் கூடிய சிறிய கிண்ணங்கள், கறிவகைகள், சோறுண்ண உதவும் இரு குச்சிகள் (Chop sticks) முதலியவை

குழந்தையின் எதிரில் வைக்கப்படும். ஆண் குழந்தை யாயின், கிண்ணங்களும் மணையும் உள்ளும் புற மும் கறுப்பு நிறம் தீட்டப்பட்டிருக்கும். பெண் குழந்தை யாயின், கிண்ணங்களின் உட்புறம் செம்மை நிறத் துடனும் வெளிப்புறம் வெண்மை நிறத்துடனும் விளங்கும். மணை மேற்புறம் சிவப்பாயும், சுற்றிலும் கருப்பாயும் இருக்கும். இச்சடங்கிலும் செஞ்சோறும் குறிப்பிட்ட ஒருவகை மீனும் விருந்தினருக்கு அளிக்கப் படும். குழந்தை இம்மீனை உண்ணுதெனினும், குழந்தை யின் எதிரில் உள்ள மணைமீது ஒரு மீன் வைக்கப்படும். குறிப்பிட்ட இம்மீன் அக்காலத்துக் கிடைப்பது அரிதா யின், இத்தகைய சடங்குகளுக்கென வணிகர்கள் உலர்த்திப் பதப்படுத்திவைத்துள்ள மீன் பயன்படுத்தப்படும். இச் சடங்கின் போதுதான் குழந்தையைப் பெற்ற தாய் விருந் தினர் காண வெளி வருவாள். அவள் இதற்கு முன் நடை பெறும் சடங்குகள் ஒன்றிலேனும்·வெளிப்பட்டு விருந்தின ருடன் கலந்துகொள்வதில்லை.

**பதுமைக் கொலுவிழா**

குழந்தைக்கு ஒன்பது திங்கள் கழிந்த ஒன்பதாம் நாளன்று பெற்ரூேர் சில பதுமைகள் வாங்கி வழங்குவர். குழந்தையைக் காணவரும் மற்றையோரும் சில பதுமை கள் கொணர்ந்து பரிசாக வழங்குவர். இவ்வாறு ஆண் டில் இருமுறை குழந்தைக்குப் பதுமை வழங்குவதை ஜப்பானியர் ஒரு சடங்காகக் கருதுகின்றனர். தமிழகத் தில் புரட்டாசித் திங்களில் ‘தசரா’வின் போது ஒன்பது இரவுகள்வரை பதுமைக் கொலு நிறுத்துவது போன்று, ஜப்பானியச் சிறுமியர் பங்குனித் திங்களில் தங்களுக்கு அளிக்கப்படும் பதுமைகளைக் கொலு வைத்து, பிற குழந் தைகளை அழைத்துக் கொலுவைக் காட்டித் தின்பண்டங் கள் வழங்கி மகிழவைத்து அனுப்புதல் வழக்கம். சிறுமி களைப் போன்று சிறுவர்களும் சித்திரைத் திங்களில் இத்

தகைய கொலு அமைத்தல் உண்டு. சிறுவர் சிறுமியர் மட்டுமின்றி, இளைஞர்களும் சேர்ந்து ஆனித்திங்களில் ஒரு கொலு வைப்பர். இவற்றுள் சிறுமியர் நிறுத்தும் கொலுவில் ஆண்-பெண் பதுமைகள், சிறிய தட்டு முட்டுச் சாமான்கள் போன்றவையே மிக்கிருக்கும். சிறுவர் நடத்தும் கொலுவில் போர் வீரர்கள், வாள், ஈட்டி, குதிரை போன்ற வீரத்தை விளக்கும் பதுமைகளே இருக்கும். இருபாலரும் சேர்ந்து வைக்கும் கொலுவில் இருவகைப் பதுமைகளும் இடம் பெறும். ஜப்பானியப் பெண்கள் பதுமைகளைச் சேர்ப்பதில் பெருவிருப்புடையவர். ஒவ்வொரு பெண்ணும் தன் முதலாண்டு முதல் திருமணமாகும் நாள் ஈருகக் கிடைத்த பதுமைகளை எல்லாம் திரட்டி வைத்திருப்பாள்; திருமணமானதும், தான் திரட்டி வைத்துள்ள பதுமைகள் அனைத்தையும் தன்னுடன் கணவனில்லம் கொண்டு செல்வாள்.

ஆனால் சிறுவர் ஏழாண்டினை எய்தும்வரைதான் கொலு வைத்தல் கூடும். ஏழாண்டுகளுக்குப் பிறகு, விளையாட்டுப் பருவம் கடந்து விடுகிறது என்பது ஜப்பானியர் எண்ணம். சிறுவர் தாம் நடத்தும் கொலுவில், நெடிய கம்பங்களில் வீரத்தை விளக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்ட கொடிகள் பறக்கவிடுவர்; காற்றாடி பறக்கவிட்டு மகிழ்வர்; சிறுவர் சிறு காற்றாடிகளைப் பறக்கவிட்டு விளையாடினால், இளைஞர் பத்தடிச் சதுர அளவுள்ள பெருங் காற்றாடிகளைப் பறக்கவிட்டு மகிழ்வர். சில சமயங்களில் முப்பதடி நாற்பதடிச் சதுர அளவுக் காற்றாடிகளையும் பறக்க விடுவதுண்டு. இக்காற்றாடிகள், ஓவியங்கள் பல தீட்டப்பட்டவையாயிருக்கும்.

சிறுவர் நடத்தும் கொலுவிழாவில், 'ஷோபு' (Shobu) என்னும் ஒருவகைச் செடியின் இலைகளும் பூக்களும் பல வகையில் பயன்படுத்தப்படும். தமிழகத்தில் வேப்பிலை பயன்படுவது போல, ஜப்பானில் ஷோபு இலை பயன்படுகிறது. தீக்கோள்கள் அணுகாவண்ணம் துரத்தும் ஆற்றல்

ஷோபுஇலைக்கு இருப்பதாக ஜப்பானியர் நம்புவதால், சிறுவர் கொலு விழாவன்று குடிக்கும் குடிவகைகளிலும் குளிக்கும் நீரிலும் இவ்விலைகளை இட்டு வைப்பர். வீட்டின் வாயிலில்கொத்துக் கொத்தாக இவ்விலைகள் செருகி வைக்கப்படும். இக்கொலுவைக் காண வருபவர்களுக்கெல்லாம் ஷோபு இலையிட்ட மது வழங்கப்படும். கொலுவன்று ஷோபு இலையிட்ட வெந்நீரில் சிறுவர்களை நீராட்டினால், அச்சிறுவர் என்றும் பிணிவாய்ப்படாது உடலுரத்துடன் வாழ்வர் என்று ஜப்பானியர் கருதுகின்றனர். இக்கொலு விழாவினால் ஜப்பானியச் சிறுவர் தாங்கள் உடலுரம் வாய்ந்த வீரராக விளங்கவேண்டும் என்னும் படிப்பினையைப் பெறுகின்றனர் என்பது ஜப்பானியப் பெற்றோரின் கருத்தாகும்.

**பிறந்தநாள் கொண்டாட்டம்**

பிறந்தநாள் கொண்டாட்டம் உலகெங்கும் மக்கள் கொண்டாடும் விழாவாகும். ஆனால், ஜப்பானியர் பிறந்த நாள் கொண்டாட்டத்தை நன்றி செலுத்தும் விழாவாகவே கொண்டாடுகின்றனர். குழந்தையின் பிறந்த நாள் விழா ஜப்பானில் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. விருந்துகளும் கேளிக்கைகளும் அவரவர் பொருள் நிலைமைக்கு ஏற்ப நடத்தப்படுகின்றன. உற்றார் உறவினர் குழந்தைகளுக்குப் பல வகையான பரிசுகளை வழங்குகின்றனர். பிறந்த நாட்பரிசுகள் வழங்குதல் ஜப்பானில் சிறப்புடையதாகக் கருதப்படுவதில்லை; விருந்துதான் அங்கு மிகச் சிறப்புடைய தொன்றாகக் கருதப்படுகின்றது. ஆண்டுகள் பல ஆகவாக, அக்குழந்தைகள் தங்கள் பெற்றோர்பால் நன்றியுடன் நடந்துகொள்ளக் கற்பிக்கப்படுகின்றனர். பெற்றோர் தங்களை அன்புடன் வளர்த்தமைக்கும், இறைவன் தங்களைக் காத்தமைக்கும் சிறுவர் சிறுமியர் தங்கள் பிறந்தநாள் விழாவின்போது நன்றி செலுத்துதல் வேண்டும். ஜப்பானியரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் உட்கருத்து இதுவேயாம். எனவே, பெற்றோர்

இறந்த பிறகு, ஜப்பானியர் பிறந்தநாள் விழாக் கொண்டாடுவதில்லே.

## மூன்று–ஐந்து–ஏழாண்டுகள்

ஜப்பானியர் மூன்று, ஐந்து, ஏழு ஆகிய எண்களே நல்வாய்ப்புடைய எண்கள் என எண்ணுகின்றனர். எனவே, குழந்தைகள் இம்மூவகை ஆண்டுகளேயும் எய்துகையில், அவ்வந்நாளே மிக்க சிறப்புடைய பெருவிழா நாளாகக் கொண்டாடுதல் ஜப்பானியர் மரபு. மூன்றும் ஆண்டு நிறைவில் குழந்தைகளே அலங்கரித்து முதன் முதலாக முடிதிருத்தி, ஊர்வலமாகத் திருக்கோயிலுக்குக் கொண்டுசென்று, இறைவணக்கம் புரிந்தபின், இல்லம் மீண்டு, உற்ருர் உறவினருடன் உண்டு மகிழ்தல் ஜப்பானியர் வழக்கமாகும். ஜப்பானியச் சிறுவர் சிறுமியர் ஐந்தாண்டு எய்தியவுடன் இதே போன்று ஒரு விழா நிகழ்த்தப்படுகிறது. இச்சிறுவர் சிறுமியர் ஏழாண்டினே எய்துகையில் ஒரு விழா நிகழ்த்தப்படும். அப்பொழுது அதுகாறும் அவர்கள் உடுத்திருந்த உடைகள் நீக்கப்படும். அதுமுதல் அவர்கள் இளமைப் பருவம் அடைந்ததாகக் கருதி, அதற்கேற்ப உடைமாற்றம் செய்யப்படுகிறது. இவ்விழாவிலும் விருந்துகள் சிறப்புற நடைபெறும்.

## பதின்மூன்ரும் ஆண்டு விழா

பதின்மூன்ரும் எண் நல்வாய்ப்பற்றது என மேனுட்டினரும் நம் பாரத நாட்டிற் சிலரும் கருதுகின்றனர். எனவே, அவ்வெண் இத்தகையாரின் வெறுப்புக்குரியதாக ஆகிவிட்டது. ஆனுல் ஜப்பானியர் பதின்மூன்ரும் எண்ணே மிக்க நன்மை பயத்தற்குரியதாகும் என்று நம்புகின்றனர். அவர்கள் பதின்மூன்ரும் ஆண்டினே நல்வாய்ப்புக்குரிய ஆண்டாகவே மதிக்கின்றனர். இந்த ஆண்டில் ஜப்பானியச் சிறுவரும் சிறுமியரும் பருவம் அடைந்துவிடுகின்றனர்.

என்பது அந்நாட்டு மக்கள் நம்பிக்கை. இந்நாளில் பருவ ஆண்டினை அடைந்தவர்களைப் பெற்றோர் அலங்கரித்துக் கோயிலுக்கு அழைத்துச் சென்று அப்பிள்ளைகளுக்கு அறிவு, செல்வம், புகழ் அனைத்தும் பெருகவேண்டுமென்று இறைவனை வேண்டுவர். அப்பொழுது கோயில்களில் பதின்மூன்று வகையான நிறங்களில் பதின்மூன்று வகை இனிப்புப் பண்டங்கள் செய்து, விற்கப்படும். பெற்றோர் அத்தின்பண்டங்களை வாங்கிப் பதின்மூன்று ஆண்டு நிறைவடைந்த தம் பிள்ளைகளுக்குக் கொடுத்து மகிழ்வர். அப்பதின்மூன்று பண்டங்களை உண்பதால் தம் பிள்ளைகட்குச் செல்வமும் புகழும் வளரும் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

## "தீமை பயக்கும் ஆண்டு" விழா

மனித வாழ்வில் இன்ப துன்பங்கள் ஒன்றையொன்று தொடரும் என்பதை நம் நாட்டினரைப் போலவே ஜப்பானியரும் நம்புகின்றனர். ஆனால் அம்மக்கள் துன்பம் கண்டு அஞ்சுவதில்லை. சடங்குகள் சில செய்வதன் மூலம் துன்பங்கள் நேராவாறு தடுத்துக்கொள்ளல் எளிது என்று அவர்கள் கருதுகின்றனர். எனவே, நல்வாய்ப்பின்மை குறித்து அவர்கள் என்றும் மனங்குன்றுவதில்லை. ஆண்களுக்கு இருபத்தைந்தாவது, நாற்பத்திரண்டாவது, அறுபத்தோராவது ஆண்டுகள் தீமை பயப்பவை என்பதும், பெண்களுக்குப் பத்தொன்பதாவது, முப்பத்து மூன்றாவது, முப்பத்தேழாவது ஆண்டுகள் தீமை பயப்பவை என்பதும் ஜப்பானியரிடை நீண்டகால நம்பிக்கையாக இருந்துவருகின்றன. இவ்வண்ணம் இருபாலாருக்கும் மும்மூன்று தீய ஆண்டுகள் வாழ்க்கையில் நேரிடுகின்றன எனினும், இம்மூன்றனுள் ஒன்று மிகக் கொடியதாயிருக்கும் என்று அவர்கள் எண்ணுகின்றனர். ஆண்களுக்கு நாற்பத்திரண்டாம் ஆண்டும், பெண்களுக்கு முப்பத்து மூன்றும் ஆண்டும் கொடுமை மிக்கவை என்று

அவர்கள் நினைக்கின்றனர். இந்த ஆண்டுகளில் புதிய செயல் எதனையும் அவ்வாண்டுகளை அடைந்தவர் செய்யத் துணியார். இத்தகைய பருவத்தில்தான் கடும்பிணிகளும் இறப்பும் நேரும் என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர். இத் தீய ஆண்டின் கொடுமையை உண்டாக்கும் பேயைப் போக்க அவர்கள் கைக்கொண்டுள்ள சடங்கு விந்தை மிக்கதாகும்.

## தீமையை ஓட்டும் சடங்கு

பிப்ரவரித் திங்கள் இறுதியில் ஒருநாள், ஜப்பானியர் தம் இல்லங்களில் மொச்சைக் கொட்டைகளை வறுத்துக் கைநிறைய எடுத்து, அகத்தே அறைகளைச் சுற்றிலும், புறத்தே இல்லத்தைச் சுற்றிலும் வீசிவீசி எறிவர்; எறிவதோடின்றி, "தீக்கோள் ஒழிக; நல்வாய்ப்பு நுழைக," என்று பெருங் கூச்சலிட்டுக்கொண்டே அம்மொச்சைக் கொட்டைகளை இல்லத் தலைவர் வாரி இறைப்பர். இங்ஙனம் வீசி எறியச் சான்றோர் எவரேனும் அழைக்கப்படுதலும் உண்டு. இவ்வாறு இல்லத்தின் உட்புறம் மொச்சையை எறிந்துகொண்டே கதவுகளையும் சாளரங்களையும் விரைந்து அடைத்துவிடுவர். இதனால் மொச்சையடி தாங்காது பேயும் மூதேவியும் வெளியேறிவிடுமென்றும், மீண்டும் அவை உட்புகா வண்ணமே விரைந்து கதவுகளையும் சாளரங் களையும் அடைத்துவிடவேண்டும் என்றும் ஜப்பானியருள் வைதிகர் கூறுகின்றனர். கோயில்களிலும் இத்தகைய சடங்குகள் பெரிய அளவில் நடைபெறுவதுண்டு. இவற்றைக் காண நெடுந்தொலைவிலிருந்து மக்கள் வந்து குழுமுவர். இங்ஙனம் வீசும் மொச்சையைக் கீழே விழாமல் பற்றுவது நல்வாய்ப்புக்கு அறிகுறி என்று கருதுவதால் அதனைப் பிடிக்க இளைஞர் பலர் அன்று சுற்றித் திரிவர்.

மொச்சை எறியும் சடங்கு முடிந்தபின், குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும், அறுபது ஆண்டுகள் நிரம்பியவர் அறுபத்தொரு மொச்சையும், பத்து ஆண்டு எய்தியவர்

பதினொரு மொச்சையும் என, தமக்கு நிறைவேறிய ஆண்டுக் கணக்கைவிட ஒரு மொச்சை அதிகமாக உண்ணுதல் வேண்டும். ஒவ்வொரு மொச்சையும் ஒவ்வோராண்டின் துன்பங்களுக்கென்றும், மிகுதியாக உண்ணும் ஒரு மொச்சை வரப்போகும் ஆண்டில் ஏற்படக்கூடும் இன்னலைத் தவிர்ப்பதற்கென்றும் ஜப்பானியர் கூறுகின்றனர். இங்ஙனம் மொச்சை உண்பதால் தங்களுக்கு உண்டாகக் கூடிய இன்னல்கள் விலகிவிடும் என்பது அவர்களின் நம்பிக்கை. தீமை பயக்கும் ஆண்டுகளை எய்தியிருப்போர் மொச்சை எறியும் இச்சடங்கினை மிகுந்த கவனத்துடன் நிறைவேற்றுவர். அங்ஙனம் நிறைவேற்ற விட்டாலும் அச் சடங்கு பிழைபட்டாலும் தங்களுக்குப் பேரிடர் நிகழ்வது உறுதி என்னும் அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

## திருமணச் சடங்கு

ஜப்பானியர் திருமணத்தை ''யொமெய்ரி'' (Yomei-ri) என வழங்குகின்றனர். ''மணமகளை மணமகன் குடும்பத்தில் சேர்ப்பது'' என்பதே இச்சொல்லின் பொருளாகும். ஜப்பானியரிடைத் திருமணச் சடங்கு பெரிதும் இரவில்தான் நடைபெறுதல் வழக்கம். ஆயினும் இப்போது, பெரிய நகரங்களில் வாழ்பவர்கள் காலை மாலைகளிலும் திருமணத்தை நிறைவேற்றுகின்றனர். ஜப்பானில் திருமணம் சமயச் சார்புடையதன்றெனினும், 'ஷின்ட்டோ' கோயில்களிலும், மூதாதைகளின் சமாதிகள் முன்னிலையிலும் திருமணங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ஜப்பானியர் திருமணம் ஒரே சடங்குடன் முடிவதாகும். மணப்பெண்ணை அவளுடைய பெற்றோர் மணமகன் இல்லத்திற்கு அழைத்தேகுவர். மணப்பெண் மணத்திற்குரிய ஒப்பனைகளுடன் விளங்குவாள்; தலையில் வெள்ளைப் பட்டுத் துணி ஒன்றைக் கட்டியிருப்பாள். இந்த வெள்ளைப் பட்டுத் துணி கட்டுவதன் கருத்து, பெண்கள் அனைவரும்



ஜப்பானிய மணமக்கள்

அழுக்காறு மிக்கவர்கள் என்பதும், அவ்வழுக்காற்றினைத் திருமணத்தின்போது கட்டுக்கட்டி மறைத்து வைக்கவேண்டும் என்பதுமேயாம்.

திருமண அறையில் மணமகனுக்கு எதிரில் மணமகள் அமர்வாள். மணமக்களின் பெற்றோர், மாப்பிள்ளைத் தோழன், மணப்பெண்ணின் தோழி, பணிப் பெண்கள் ஆகிய சிலரே அத்திருமண அறையில் இருப்பர். மணமக்கள் எதிரில் மூன்று கிண்ணங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மேலுள்ள கிண்ணத்தை மணமகன் எடுப்பான். அதில் பணிப்பெண்களுள் ஒருத்தி அரிசியிலிருந்து இறக்கப்பட்ட 'சாக்கே' மதுவை மும்முறை ஊற்றுவாள். மூன்று முறையாக அவன் அதைக் குடித்து விடுவான். பின்பு பணிப்பெண் அதே கிண்ணத்தில் மீண்டும் மும்முறை அம்மதுவை ஊற்றுவாள். மணமகள் அதனை மூன்று முறை அருந்துவாள். பிறகு இரண்டாம் கிண்ணத்தில் பணிப்பெண் மும்முறை மது ஊற்ற, அதை முதலில் மணமகளும், பிறகு மணமகனும் முன்போலவே குடிப்பர். இறுதியாக மூன்றும் கிண்ணத்தை எடுத்து மணமகன் முதலிலும், மணமகள் ஈற்றிலுமாக அதில் ஊற்றப்படும் மதுவை முன்போலவே பருகுவர். இதுதான் திருமணச் சடங்கு. இதனுடன் திருமணம் முடிவுபெறுகிறது. இச்சடங்கிற்குச் 'சான்-சான்-குடோ' (San-San-Kudo) என்பது பெயர். 'மூன்று, மூன்று—ஒன்பது முறை' என்பது இதன் பொருளாம்.

இச்சடங்கு முடிவுற்றதும், மணமகள் தன் உடையை மாற்றிக்கொள்வாள். பிறகு சிறந்த முறையில் உண்டாட்டு நடைபெறும். மணமகன்—மணமகள் குடும்பத்தாருக்கிடையில் உறவுப் பிணிப்பு ஏற்படுத்துதற்கென்று ஒரு சடங்கு நடைபெறுதல் வழக்கம். இதிலும் அரிசி மதுவே சிறப்பிடம் பெறும். இரு குடும்பத்தாரும் எதிரெதிராக வரிசையாக அமர்வர். ஒவ்வொரு வரிசையிலும் முதலில் சற்று உயர்ந்த பீடத்தில் அவ்வக் குடும்பத் தலைவர் தம்

மனைவியுடன் அமர்ந்திருப்பர். வரிசையின் இறுதியில் எதிரெதிராக மணமக்கள் வீற்றிருப்பர். இவ்விரு குடும்பத்தினரும் அரிசி மதுவை, ஒன்றன்பின் ஒன்றாக மூன்று கிண்ணங்களில் ஊற்றி, மணமகள் குடும்பத்தினர் பருகியதை மணமகன் குடும்பத்தினரும், மணமகன் குடும்பத்தினர் பருகியதை மணமகள் குடும்பத்தினருமாக மாற்றி மாற்றிப் பருகுவர். இங்ஙனம் மாற்றிப் பருகுதல் முதலில் குடும்பத் தலைவர்களிடம் தொடங்கி, இறுதியில் மணமக்கள் வரை வந்து முடியும். இதனுடன் உறவு பிணிக்கும் சடங்கு முடிகிறது. இதன்பின் மணமகள் கணவன் இல்லம் செல்வதும் மீண்டு தாயில்லம் வருவதுமாக மும்முறை இங்குமங்குமாகச் சென்று, மணமகள் கணவன் உறவினர்களுக்கும், மணமகன் மனைவி உறவினர்க்கும் அறிமுகப்படுத்தி வைக்கப்படுவதும், இரு திறத்தாரும் மாறி மாறி ஒன்றிரண்டு விருந்துகள் செய்வதும் பண்டைய மரபு. இக்காலத்தில், மேனாட்டு முறையைப் பின்பற்றி, மணவினைகள் முடிந்த மறுநாள் அல்லது மூன்றாம் நாள் மணமக்கள் இருவரும் எங்கேனும் ஓர் ஊருக்கு, இன்பப் பயணம் புறப்பட்டுச் சென்று மீள்கின்றனர்.

## நாற்பதாம் ஆண்டு விழா

மனித வாழ்க்கையில் நாற்பதாம் ஆண்டு நிறைவேறுவதை ஜப்பானியர் சிறப்பாகக் கொண்டு அதனை விழாவாக நிகழ்த்துகின்றனர். நாற்பதாம் 'ஆண்டே மனித வாழ்வில் நல்ல அநுபவ அறிவும், ஆழ்ந்து சிந்தித்து முடிவு கூறும் வல்லமையும் பெறும் ஆண்டெனக் கருதப்படுவதால், இதனை ஜப்பானியர் சிறப்பாகக் கருதுகின்றனர். நாற்பதாம் ஆண்டு விழாவில் மிகச் சிறந்த விருந்துகள் நடைபெறும். உற்றார் உறவினர் அனைவரும் இதிற் கலந்து மகிழ்ச்சி தெரிவிப்பர்.

## அறுபத்தொன்றும் ஆண்டுவிழா

அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடும் வழக்கம் பண்டை நாட்களில் இருந்தது. இப்போது அவ் வழக்கம் மாற்றம் பெற்று, அறுபத்தொன்றும் ஆண்டு நிறைவு விழா ஜப்பானியரால் கொண்டாடப்படுகிறது. இங்ஙனம் ஆண்டில் முதிர்ந்து அறுபதைக் கடக்கும் ஒருவர், மீண்டும் குழந்தைத் தன்மை அடைவதாக ஜப்பானியர் நம்புவதால், இந்த அறுபத்தோராம் ஆண்டு விழாவின் போது, அவ்வாண்டு நிறைவெய்தப் பெற்றவர் செஞ்சட்டை, செங்குல்லாய், சிவப்புக் காலுறை அணிந்து வீற்றிருப்பார். இந்தச் சென்னிறத்தின் கருத்து, அவர் மீண்டும் குழந்தைத் தன்மை அடைந்துவிட்டார் என்பதைக் குறிப்பதாம். இங்ஙனம் சென்னிறத் தோற்றத்துடன் அமர்ந்துள்ள பெரியாரை, அவருடைய புதல்வர், புதல்வியர், பேரர்கள், உறவினர் முதலிய அனைவரும், பல்லாண்டு வாழுமாறு வாழ்த்தித் தங்கள் அன்பையும் மகிழ்ச்சியையும் வெளியிடுவர். இவ்விழாவில் பெரியவருக்குப் பரிசுகள் வழங்கப்படுதலும் உண்டு. செல்வர் இல்லங்களில் இவ்விழா மிக்க சிறப்பாக நடைபெறும்.

மனித வாழ்வு ஐம்பதாண்டுகளே என்பது ஜப்பானியர் கொள்கை. எனவே, அதற்கு மேலும் வாழ்பவர்களை அவர்கள் பெரிதும் சிறப்பித்துப் போற்றுதலும், அங்ஙனம் நீண்டு வாழ்பவர்களை வாழ்த்துவதில் அனைவரும் கலந்துகொள்வதும் அவர்கள் வழக்கமாகும்.

## "வாழ்தற்கரிய வாழ்வு விழா"

அறுபது ஆண்டுகள் வாழ்வதே அருமை எனக் கருதப்படும் நாட்டில் எழுபது ஆண்டுகள் வாழ்வதெனின், அது வாழ்தற்கரிய வாழ்வாகக் கருதப்படுவதில் வியப்பொன்றும் இல்லையன்றோ? எழுபது ஆண்டுகள் நிறைவெய்திய நாளை ஜப்பானியர் பெருஞ் சிறப்புடன் கொண்

டாடுதல் வழக்கம். அவ்விழாவினைக் ‘ கோக்கி ’ என ஜப் பானியர் வழங்குகின்றனர். அச்சொல் ‘ பண்டைய ’, ‘ அரிய ’ என்னும் இரு பொருள்கள் கொண்டதாம். இந் நெடிய வாழ்வை ஒரு சிலரே எய்துதல் கூடுமாகலின், எழு பதாம் ஆண்டு நிரம்பப் பெற்றவர் உறவினராலும் மக்க ளாலும் மட்டுமின்றி ஊராராலும் பெரிதும் போற்றிப் பாராட்டப்படுவார். மேலும், எழுபதாண்டுகள் நிரம்பிய ஒருவரைப்பெற்ற குடும்பத்தையும் அந்நாட்டினர் பெரிதும் பாராட்டுகின்றனர். இவ்வாறே எழுபத்தேழாம் ஆண்டும், எண்பத்தெட்டாம் ஆண்டும் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றன.

## இறுதிச் சடங்கு

ஜப்பானியர் இறுதி நிலை எய்துகையில், புத்தசமயக் கொள்கைக்கேற்பவே சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இறந்த உடலை வெந்நீரில்தூய்மைப்படுத்தி, வெண் பருத் தித் துணி போர்த்து, தங்க முலாமிட்ட பேழையில் அடக் கம் செய்து, நறுமணப் பொருள்கள் தூவி, ஊர்வலமாக நன்காட்டுக்கு எடுத்துச் சென்று, சிதை அடுக்கி, எரித்துச் சாம்பராக்கி, எலும்புகளைத் திரட்டிவந்து சமாதி கட்டுவது உயிர் நீத்தாருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்கு என்பது ஜப்பான் நாட்டில் பரவியுள்ள புத்த சமயக் கொள்கையாகும்.

ஜப்பானியர் இந்த முறையைத்தான் மேற்கொண்டு ஒழுகிவருகின்றனர். இதனுடன் விலையுயர்ந்த பொருள் களையும், துணிகளையும் சவத்துடன் சேர்த்துப் பெட்டிக்குள் வைப்பது வழக்கம். செப்பு நாணயங்கள், நாணயங்கள் போல எழுதப்பட்ட காகிதங்கள் முதலியவற்றைச் சவப் பெட்டிக்குள் வைப்பதும் வழக்கமாயிருந்தது. இப்போது அவ்வழக்கம் குறைந்துவிட்டது. இவ்வுலகிற்கும் இறை யுலகிற்கும் இடையில் ஆறொன்று பாய்கிறதென்றும், அதைக் கடக்க ஓடக்காரனுக்குக் கட்டணம் கொடுக்கவே,

சவப் பெட்டிக்குள் காசு வைக்கப்படுகிறதென்றும், இறை யுலகு நெடுந்தொலையில் இருப்பதால் காலுக்கு அணிய வைக்கோல் நடையன், வலிமை பொருந்திய கைத்தடி முதலியனவும் சவப் பெட்டிக்குள் வைக்கப்படுதல் வழக்க மென்றும் ஜப்பானியர் கூறுகின்றனர்.

ஜப்பானியர் இறந்தவர் உடலை ஓரிரவு இறந்தவிடத் திலேயே வைப்பது வழக்கம். அன்றிரவு முழுவதும் உற்ருர், உறவினர் அனைவரும் ஆவியற்ற உடலுக்கருகில் அமர்ந்திருப்பர். இரவு முழுவதும் புத்த சமய மந்திரங்கள் ஓதிக்கொண்டேயிருப்பர். ஒருபுறம் நறுமணப்புகை எழுந்தவண்ணமிருக்கும். சவத்தைக் காண வருபவர்கள் மலர்கள், இனிப்புப் பண்டங்கள், சந்தனம், சாம்பிராணி போன்றவைகளைக் கொணர்வர். காண வருபவர்களுக்கு இறந்தவர் வீட்டில் உணவு அளிக்கப்படும்.

சவ ஊர்வலம் செல்வது காண்பதற்கு அழகாக இருக் கும். பெரும்பாலும் சவ ஊர்வலம் இரவில்தான் புறப்படு வது பண்டை வழக்கம் எனினும், இப்போது ஜப்பானி யர் எந்த நேரத்திலும் சவத்தை ஊர்வலமாகக் கொண்டு செல்கின்றனர். எரிக்கும் வழக்கம் மட்டும் என்றும் மாரு வழக்கமாக இன்றளவும் நடைமுறையில் இருந்துவரு கின்றது.

இதனுடன் வாழ்க்கைச் சடங்குகள் முடிந்துவிட வில்லை. இறந்தவர்கள் உடனே மேலுலகம் சென்றுவிடுவ தாக ஜப்பானிய பௌத்தர்கள் நம்புவதில்லை. இறந்த வரின் ஆவி முற்றிலும் இறந்ததாகவும் இன்றி, உயிருடன் இருப்பதாகவும் இன்றி, இவ்வுலக வாழ்விற்கும் மறுவுலக வாழ்விற்கும் இடையில் அலைந்துகொண்டிருக்கும் என்றும், இந்த ஆவி இவ்வாறு இடைநிலையில் நின்று ஏழு முறை மீண்டும் மீண்டும் இவ்வுலகிற்கு வரும் என்றும், ஏழு நாட்களுக்கு ஒரு முறையாக ஏழுமுறை இறக்கும் என்றும் ஜப்பானியர் நம்புகின்றனர்.

அஃதாவது, ஒருவன் இறக்கிருன் ; உறவினர் அழுது

புலம்புகின்றனர் ; இறுதிச் சடங்கு நடத்துகின்றனர் ; உடலை எரித்துவிடுகின்றனர். ஆனால் இறந்தவனின் ஆவி அக்குடும்பத்தை விட்டுப் பிரிந்துவிடுவதில்லை ; ஏழு நாட்கள் வரை அக்குடும்பத்துடனே சுற்றித் திரிந்து, ஏழாம் நாள் மீண்டும் இறக்கிறது. மீண்டும் அந்த ஆவி அக்குடும்பத்தை விட்டுப் போக மனமின்றி, அங்கேயே சுற்றித் திரிந்து பதினான்காம் நாள் மீண்டும் மரிக்கிறது. இங்ஙனம் ஏழு முறை மீண்டும் மீண்டும் அந்த ஆவி இறந் திறந்து நாற்பத்தொன்பதாம் நாள்வரை, ஒவ்வொரு ஏழாம் நாளையும் அக்குடும்பத்தார் வணங்குவதற்குரிய நாளாக ஆக்கிவைக்கிறது. இந்த நாட்களில் உற்றார் உறவினர், இறந்தவரின் ஆன்மா இறைவனுடன் இரண் டறக் கலக்கும் நிலையடைய, இறைவணக்கம் நிகழ்த்துவர் ; மெழுகுத் திரிகள் கொளுத்தி, நறுமணப் புகையூட்டி, புத்த மந்திரங்களை ஓதி வணங்குவர். உணவு நாள்தோறும் இறந்த இடத்தில் வைக்கப்படும். இறந்தவர் ஆவி அதை உண்டு செல்வதாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு நாற்பத்தொன்பது நாட்கள் கழிந்த பிறகே, அந்த உயிர் உலகத் தொடர்பற்று மேலுலகம் செல்கிறதென் றும், அங்கே இறைவன் பத்து நடுவணர்களை அமர்த்தி, அந்த ஆவியின் நல்வினை, தீவினைகளை ஆராய்ந்து விசா ரணை செய்து வீடுபேறளிப்பதா, கொடுநரகுக்கனுப்புவதா என முடிவு கூறுமாறு ஏவுகின்றான் என்றும், உலகிலே உற்றார் உறவினர் செய்யும் வணக்கங்களும், இறந்தவரின் பெருமைகளைக் குறித்துப் பேசுதலும் அந்தப் பத்து நடு வணர்களின் மனத்தை மாற்ற வல்லவை என்றும் ஜப்பானி யர் நம்புகின்றனர். எனவே, அம்மக்கள் நாற்பத்தொன்ப தாம் நாட் சடங்கை விடாமற் செய்வர். புத்த சமயக் கொள்கைப்படி ஆன்மா இறப்பதில்லை ஆதலால், அது செய்த நல்வினை தீவினைப் பயன்களுக்கு ஏற்ப மறு பிறவி எடுக்கிறதென்றும் ஜப்பானியர் நினைக்கின்றனர். ஆத லின் இறந்தவர் ஆன்மா நற்பிறப்புப் பெறவேண்டு

மென்று அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாற்பத்தொன்ப தாம் நாள்வரை நாள்தோறும் இறைவனே வணங்கியும் இறைச்சி மீன் இவற்றை உண்ணுமல் இருந்தும், ஏழை களுக்கு வேண்டியவற்றை அளித்தும், கேளிக்கைகளே விட்டும், துன்பக்குறி காட்டும் உடுப்பணிந்தும் வருகின் றனர். இவ்வாறு செய்வதால் இறந்தவரின் ஆன்மா நற் பிறப்பு அடையுமென்பது அவர்தம் கொள்கை.

## தென்புலத்தார் வழிபாடு

பிறகு, ஏழாம் திங்கள் பதினேந்தாம் நாளன்று இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு நன்றி தெரிவிக்க 'பான்' (Bon) விழாக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா இந்தியாவிலிருந்தே ஜப்பானுக்கு வந்ததென்றும், 'உல்லம் பண' (Ullambana) என்னும் வட சொல்லின் சிதைவே 'பான்' என மரூஉ மொழியாக வழங்குகிறதென்றும் ஜப் பானியர் கூறுகின்றனர்.

இந்தியாவில் ஒருவர், இறந்துபோன தம் பெற்ருேர் வானுலகில் எத்தகைய வாழ்வு நடத்துகின்றனர் என்பதை அறிய அவாக்கொண்டார். அவருடைய கனவில், அவர் தாயார் இறந்தது முதல் அன்றுவரை உண்பதற்கேதும் கிடைக்காமல் பட்டினிகிடந்து வருவதாக ஒரு காட்சி தோன்றியது. எனவே அவர் தம் தாயாருக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தார். ஆனுல் அந்தத் தாயாரின் ஆன்மா அவ்வுணவருந்த வந்தபோது அவ்வுணவு கனலாக மாறி விட்டது. அதுகண்டு பெரிதும் ஏமாற்றமடைந்த கடமை மிக்க அப்புதல்வர், அங்கிருந்த புத்தசமயச் சான்ருேர் ஒருவரை அணுகி நிகழ்ந்தவற்றை நவின்ருர்.

இவற்றைச் செவியேற்ற அப்பெரியார், "உன் தாய் தன் இளமைப்பருவத்தில் பாவங்கள் பலவற்றைச் செய் துள்ளாள். அதன் பலனுகவே இவ்வாறு நேர்ந்தது. புத்தபெருமானுரின் அருள் வாயிலாக அவள் துன்பந் துடைக்கலாம்," என்று கூறினர். அதன்மீது அப்புதல்

வர், புத்தசமயச் சான்ருேர்கள் பலரை அழைத்துத் தன் தாயின் துன்பத்தைப் போக்க வழிதேடினுர் ; புத்த வணக்கம் செய்தார். அவள் இறந்த ஏழாம் திங்கள் பதினைந்தாம் நாள் இந்த வணக்கம் நடைபெற்றது. இதனுல் அத் தாய் துன்பம் நீங்கிப் பசியாறி நன்னிலை அடைந்தாள்.

இந்தக் கதையின் பயனுகவே பான் விழா ஜப்பானில் நிகழ்த்தப்படுகிறது. இவ்விழா நிகழும் நாளில் இறந்த மூதாதைகளின் ஆன்மாக்கள் அவரவர் இல்லங்களுக்கு மீண்டு உறவினருடன் கலந்துறைகிறது என்று ஜப்பானியர் நினைக்கின்றனர். அந்த ஆன்மாக்களுக்கு வழிகாட்டுதற்கென்று இவ்விழா நிகழ்த்தும் வீடுகளில் அழகான விளக்குகள் நிறையத் தொங்கவிடப்பட்டிருக்கும். சிலர் ஆற்றிலும் கடலிலும் ஆயிரக்கணக்கான சிறு விளக்குகளைக் கொளுத்தி மிதக்கவிடுவது வழக்கம். பசியோடு வரும் ஆன்மாக்கள் உண்பதற்கென்று ஓர் அறையில் பல வகையான காய்கறிப் பொருள்கள் தட்டுக்களில் வைக்கப்பட்டிருக்கும். மறுநாள் அவற்றை எவரும் உண்ணுமல் ஆற்றிலாவது, கடலிலாவது விடுவர். அவை ஆன்மாக்களால் தின்னப்பட்டவை ஆதலின், மற்றையோர் அவற்றைத் தின்பது கூடாது என்பது அம்மக்கள் நம்பிக்கை. ஊர்ப்புறங்களில் வாழும் மக்கள் விழா நடைபெறும் இரவு முழுவதும் புல்வெளிகளில் நடனங்கள் ஆடுவர். பழமையில் பற்று உடையோர் அன்றிரவு முழுவதும் மந்திரங்கள் ஓதுவதும், வணக்கங்கள் நிகழ்த்துவதும் புத்தரைத் தொழுவதுமாக இருப்பர்.

இறந்தபின் அந்த ஆன்மா வேறு பிறவி எடுக்கிறதென்பதும், மனிதப்பிறவியோ, மற்றைப்பிறவியோ எடுக்கும் அந்த ஆன்மாவின் நல்வாழ்வுக்காக, இறந்தவரின் வழித்தோன்றல்கள் ஆண்டுதோறும் சடங்குகள் செய்துகொண்டிருத்தல் வேண்டுமென்பதும் அவர்களது நம்பிக்கையாதலின், ஆண்டு தவருமல் அம்மக்கள் இறந்தோருக்குரிய சடங்குகள் செய்கின்றனர். இவற்றுள் இறந்த முதலாண்

டுச் சடங்கு மிகச் சிறப்பாக நிகழ்த்தப்பெறும். இவ்வாறு இறந்த ஒவ்வொருவருக்கும் ஐம்பதாண்டுகள்வரை ஆண்டு தோறும் சடங்கும், அதன்பின், ஒவ்வோர் ஐம்பதாண்டுக் கொருமுறை சடங்குமாக நிகழும். இச்சடங்குகளை நிகழ்த்தாதார் ‘ நன்றி கொன்ற மாக்கள் ’ எனப் பிறரால் பழித்துரைக்கப்படுவர்.

ஜப்பானியர் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் சடங்குகளிலும் அரிசியையும் உப்பையும் கலந்து தூவுதல் வழக்கம். நம் நாட்டில் மஞ்சளையும் அரிசியையும் கலந்து தூவுவதுபோல அவர்கள் இதனை மதிக்கின்றனர். இதனால் தூய்மை ஏற்படுகிறதென்பது அவர்கள் எண்ணம். நிலம் நமக்களிக்கும் பேறு அரிசி. கடல் நமக்களிக்கும் பொருள் உப்பு. இவ்விரண்டும் இயற்கையன்னை மக்கட்கு அளிக்கும் பேறுகலின், ஜப்பானியர் இவற்றைச் சிறப்புப் பொருள்கள் எனவும், எல்லா நிகழ்ச்சிகளிலும் முதலிடம் பெறத்தக்கவை எனவும் மதிக்கின்றனர்.

# 7. பழக்க வழக்கங்கள்–I

## புத்தாண்டு விழா

ஜப்பான் நாட்டு மக்களிடைக் காணப்படும் பழக்க வழக்கங்கள் மிகப்பல. அவற்றுள் குறிப்பிட்டுக் கூறத் தக்கவை அறுபத்தேழு ஆகும். அம்மக்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் பல சடங்குகளை நிகழ்த்தும் வழக்க முடையவராக இருக்கின்றனர்.

ஜப்பானியர் மேனாட்டினரைப் போன்று ஜனவரித் திங்கள் முதல் நாளையே புத்தாண்டாகக் கொண்டுள்ளனர். டிசம்பர் திங்கள் முப்பத்தோராம் நாள் ஆண்டு முடிவுறும் நாளாகும். ஆகவே, டிசம்பர் திங்கள் முப்பத்தோராம் நாள் பிறக்கும் குழந்தைக்கு, ஜனவரித் திங்கள் முதல் நாளன்று இரண்டாவது ஆண்டுத் துவக்கம் என்று ஜப்பானியர் கூறுதல் வழக்கம். தமிழகத்தில் மார்கழித் திங்கள் முப்பதாம் நாள் பிறந்த குழந்தையை மாசித் திங்கள் முதல் நாளன்று, அதாவது, முப்பத்திரண்டு நாட் குழந்தையை மூன்று திங்கட் குழந்தை என்று கூறுதல் போன்று, ஜப்பானியர் இரண்டுநாட் குழந்தையை இரண்டாண்டுக் குழந்தை எனக் கூறுகின்றனர்.

தமிழகத்தில் மார்கழித் திங்களின் இறுதி நாளன்று இல்லத்தைப் புதுக்கிப் பழைய சிதைந்த பொருள்களை ஒழித்து, மறுநாள் தைத்திங்கள் முதல்நாள் புத்தாண்டுப் பெருநாளாகக் கொண்டாடி மகிழ்வது போன்றே, ஜப்பானியரும், டிசம்பர் திங்கள் முப்பத்தோராம் நாளன்று, அவ்வாண்டிற்குரிய பல நிகழ்ச்சிகளுக்கு முடிவுகாண விழைகின்றனர். கடன்பட்டிருப்போர் அன்று தங்கள் கடன்கள் அனைத்தையும் கொடுத்துத் தீர்த்துக் கணக்கை முடித்துவிடுகின்றனர். பெருங்கடன் பட்டு உழல்வோரும் அவ்வாண்டின் இறுதிநாளன்று எவ்வகையானும் முயன்று கடன் கணக்கை முடித்துவிடுவர். புத்தாண்டில் புதுக் கணக்கு வைத்தலே அவர்தம் மரபு. எவரேனும் இங்ஙனம்

கடனைத் தீர்க்காது புத்தாண்டுத் துவக்கநாளிலும் கடனாளி என இருந்தால், அவர் ஜப்பானியரிடை மானமிழந்தவராக வும் ஒழுக்கம் குன்றியவராகவுமே கருதப்படுவர்.

கடன் மட்டுமே இங்ஙனம் கவனிக்கப்படுகிறது என்பதன்று. அவ்வாண்டின் இறுதி நாளில் இல்லங்கள் தூய்மை செய்யப்படும். இவ்வாறு தூய்மை செய்யும் நாளை 'சூ சூ அராய்' (Susu harai) என ஜப்பானியர் வழங்குகின்றனர். 'ஆண்டின் இறுதியில் இல்லம் தூய்மையாக்கப்படும் சடங்கு' என்பது இதன் பொருளாம். தூய்மை மிக்க இல்லமே திருமகள் உலாவும் இல்லமாகும் என்பது அம் மக்களின் கருத்து. அவர்கள் அன்று தங்கள் இல்லங்களை அழகுபடுத்துகின்றனர்; புத்தாடைகள் தைக்கின்றனர்; பழம்பொருள்கள் பலவற்றைப் புதுப்பிக்கின்றனர். புத்தாண்டு விழா பண்டை ஜப்பானியரால் பதினைந்து நாட்கள்வரை கொண்டாடப்பட்டது. இன்றுள்ள மக்கள் ஏழு நாட்கள் வரை அவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

பழைய துன்பங்கள் அனைத்தையும் மறந்து இன்பமாகப் புத்தாண்டு விழாக் கொண்டாடுதல் வேண்டும் என்பது அவர்தம் கொள்கையாகும். டிசம்பர் திங்கள் 31–ஆம் நாள் நள்ளிரவில் கோயில்களில் 108 முறை மணி அடிக்கப்படும். 108–ஆம் முறை அடிக்கப்படும் மணி ஒலியுடன் பழைய ஆண்டு கழிந்துவிடுகிறது என்பது அவர்தம் நம்பிக்கை. இந்த விழாவில் அவர்கள் பற்பல வகைச் சிற்றுண்டிகளைத் தயாரித்து, விருந்துகள் செய்து மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றனர். ஜப்பானியர் தமிழகத்தாரைப் போன்றே புத்தாண்டு விழாவன்று பரிதி வணக்கம் செய்கின்றனர். அவர்கள் நாட்டுவளத்தைக் காட்டும் பற்பல வகை விளைபொருள்களையும் பிறவற்றையும் வைத்துப் பரிதி இறைவியை வணங்குகின்றனர்.

ஜப்பானியப் பெண்கள் புத்தாண்டு விழா நாட்களில் சமையல் செய்வதில்லை; அதற்கு முன்னரே பலவகைச் சிற்றுண்டிகளைச் செய்து வைத்துக்கொண்டு விழாநாட்

களை இனிதே கழிக்கின்றனர். அவர்கள் புத்தாண்டு விழா வன்று விடியற்காலையில் எழுந்து நீராடிப் புத்தாடைகள் உடுத்து, முதன்முதலாகத் தேநீர் அருந்துகின்றனர் ; பின்னர் இவ்விழாவுக்கெனச் சிறப்பாகச் செய்யப்பட்ட அரிசி மதுவைப் பருகுகின்றனர். இந்த மது மிளகு, சுக்கு, கிராம்பு, மொச்சை, பலவகை மருந்துச்சரக்குகள், மூலிகைகள், வேர்கள் முதலியவற்றையிட்டுக் காய்ச்சப் படுகிறது. இதன் பெயர் 'டோஸோ' (Toso) என ஜப்பானியரால் வழங்கப்படுகிறது. மதுவருந்திய பின்னர்ப் பலவகை உண்டிகள் உண்பதை அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் புத்தாண்டின் இரண்டாம் நாள், வேலைகளைத் துவக்கும் நாள் எனக் கொண்டு, அவரவர் செய்யும் வேலையினை அன்று சிறிது துவக்கி வைத்துவிடுவர்.

கனவுகளில் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. புத்தாண்டின் இரண்டாம் நாள் இரவில் ஏதேனும் தீய கனவு கண்டுவிட்டால், ஆண்டு முழுவதும் தீமை பயக்கு மென்று எண்ணி, அன்றிரவு துயிலச் செல்லுமுன், நற் செய்யுள் ஒன்றினை யாத்துத் தலையணையின்கீழ் வைத்துத் துயில்கின்றனர். செய்யுள் இயற்ற அறியாதவர்கள் இதற் கென விற்கப்படும் செய்யுள்களை வாங்கி வைத்துக் கொள்வது வழக்கம்.

### குரங்குத் திருநாள்

ஊர்ப்புறங்களில் குரங்குத் திருநாள் ஒவ்வோர் இல்லத் திலும் நடைபெறுகிறது. மூன்று குரங்குருவங்கள் செதுக் கப்பட்ட ஒரு கல் ஊர்ப்புறப் பாதையிலாவது அல்லது ஊர் எல்லையிலாவது வைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு வைக்கப்பட்டுள்ள கற்கள் ஒவ்வொரு ஊரிலும், ஊர்ப்புறப் பாதைகள் பலவற்றிலும் இருக்கின்றன. குரங்குருவங்கள் கொண்ட இக்கல்லை ஜப்பானியர் 'கோஷின்' (Koshin) என்னும் பெயரால் வழங்கித் தெய்வமாக வழிபடுகின்றனர்.

இது பிரயாணிகளேயும், சிற்றூர்களில் வாழும் மக்களேயும் காக்கும் கடவுள் என்பது அவர்கள் நம்பிக்கை. "தீயவற்றைக் காண்பதுவும் தீது ; தீயவற்றைக் கேட்பதுவும் தீது ; தீயவற்றை உரைப்பதுவும் தீது" என்னும் அறிவுரையை அக்குரங்குகள் ஒன்று கண்ணேக் கையால் பொத்திக் கொண்டிருப்பது போன்றும், மற்ருென்று காதைக் கையால் அடைத்துக் கொண்டிருப்பது போன்றும், பிறிதொன்று வாயைக் கையால் மூடிக்கொண்டிருப்பது போன்றும் அமைந்து, மக்களுக்குக் கற்பிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். முற்காலத்தில் இக்குரங்குகள் நிறுவப் பட்டுள்ள இடங்களுக்கு ஊர் மக்கள் சென்று, குரங்குத் திருநாளுக்கு முன்னிரவு விழித்திருந்து, இரவு முழுவதும் உண்டு குடித்து மகிழ்ந்து கிடப்பராம். இப்போது இவ் விழாவை ஊர்மக்கள் தத்தம் வீடுகளில் நிகழ்த்துகின்றனர்.

**சதுக்கத் துண்டு**

ஜப்பானியர் ஒவ்வொருவரும் கைத்துண்டுபோன்ற தொரு சதுக்கத் துண்டு வைத்திருக்கின்றனர். இது கைத்துண்டாகப் பயன்படுத்தப்படுவதில்லே. செல்வர் களிடம் இருக்கும் சதுக்கத் துண்டில் அவரவர் குடும்பச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். இத் துண்டுகளில் அழகிய பூப்பின்னல், ஓவியங்கள் முதலியன காட்சியளிக் கும். அவரவர் தகுதிக்கேற்ப, இச் சதுக்கத் துண்டுகள் பட்டாகவும் பருத்தியாகவும் இருக்கும். சதுக்கத் துண்டில் நாம் இங்கே நான்கு மூலேகளேயும் இழுத்துவைத்து மூட்டைகள் கட்டுவதுபோன்று, ஜப்பானியர் எந்தப் பொருளேயும் தங்களிடமுள்ள சதுக்கத் துண்டில் கட்டியே எடுத்துச் செல்வர். பள்ளிப்பிள்ளேகள் தங்கள் நூல் களேயும், பணியாளர்கள் தத்தம் சிற்றுண்டிகளேயும் சதுக்கத் துண்டில் கட்டியே எடுத்தேகுவர். கடைகளில் வாங்கும் பொருள்களும், காய்கறிகளும் உடுப்பு முதலியவை களும் இவ்வாறே கட்டி எடுத்துச்செல்லப்படும்.

இந்த வழக்கம் ஜப்பானியரிடை ஏற்பட்டதற்கு ஒரு வரலாறு கூறப்படுகிறது: அஃதாவது, பதினான்காம் நூற்றாண்டில் முரோமாட்சி மன்னன் ஆட்சி நடத்தியபோது கியோட்டோவில் தன் அரண்மனையில் மிகப் பரந்த நீராடும் அறை ஒன்றைக் கட்டினான். அரசாங்க அதிகாரிகள், அரசவைச் செல்வர்கள் முதலியோர் அங்குச் சென்று நீராடுவது வழக்கம். நீராடிய பின்னர் உடுத்தும் அறைக்கு வரும்போது ஈரக்கால்களுடன் வருவதால் உடுப்பறையின் தரை நனைந்துவிடும். ஆதலின், அக்காலச் செல்வர்கள் சதுக்கமாக ஒரு துணி எடுத்து, அடையாளத்திற்கென அவரவர் குடும்பச் சின்னம் பொறித்து, அதில் தாங்கள் உடுத்துக்கொள்ளவேண்டிய உடைகளைக் கொணர்ந்து அவ்வுடுப்பறையில் வைத்துவிட்டு நீராடச் செல்வர்; நீராடி முடிந்ததும் அங்கு வந்து உடுத்திக்கொள்வர். இந்த வழக்கம் நாளடைவில் பொதுமக்களிடைப் பரவி, உடுப்புக்கள் மட்டுமின்றி எல்லாப் பொருள்களையும் எல்லாரும் இச்சதுக்கத் துண்டில் கொண்டுசெல்வதென்பது வேரூன்றிவிட்டது. இதனை ஜப்பானியர் 'புரோஷிகி' (Furoshiki) எனக் கூறுகின்றனர். 'நீராடும் அறை விரிப்பு' என்பது இதன் பொருளாம்.

## விருதுகள்

ஜப்பானியக் குடும்பம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விருது பெற்றதாகவே இருக்கிறது. ஒவ்வொரு குடும்ப விருதும் ஒரு குறிப்பிட்ட சின்னமாக அமைந்திருக்கும். மலர்கள், செடி கொடிகள், விலங்குகள், விந்தைப் பொருள்கள் முதலியன அவர்களின் குடும்ப விருதிற்குரிய சின்னங்களாக அமைந்திருக்கின்றன. இந்தச் சின்னங்கள் தங்கள் குடும்பப் பண்டை வரலாற்றுக்கு உரியவையாகவும், மதிப்பிற்கு உரியவையாகவும் ஜப்பானியரால் போற்றப்படுகின்றன. இவை இல்லங்களில் பொறிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றித் தத்தம் பொருள்கள், அனைத்

தின்மீதும் பொறிக்கப்பட்டுவிடும். ஒரு சிறு தேக்கரண்டி முதல் மோட்டார் வண்டி ஈருகக் குடும்பச் சின்னம் பொறிக்கப்படாமலிரா. இதுவே, தங்கள் குடும்பப் பெருமையை விளக்குவதென்றும், நெடுந்தொலேயில் பிரிந்து வாழும் மக்களெனினும் ஒரு குடும்பத்தினர் என்பதைக் குடும்பச் சின்னத்தின் வழியே கண்டுகொள்ளுதல் இயலுமென்றும் அவர்கள் கூறுகின்றனர். இவ் வண்ணம் குடும்பச் சின்னமற்று எவரேனுமிருப்பின், அவரை இழி குலத்தவராகவும், சேர்ந்து வாழுதற்குரிய தகுதியற்றவராகவும் பிறர் கருதுவர்.

**பச்சை குத்தும் பழக்கம்**

பச்சை குத்திக்கொள்வதில் ஜப்பானியர் மிகுந்த விருப்பம் உடையவர்கள். முதுகிலும், மார்பிலும், கைகளிலும், கால்களிலும், தொடைகளிலும் வகைவகையான ஓவியங்களைப் பன்னிறங்களில் பச்சை குத்திக்கொள்ள அவர்கள் விரும்புகின்றனர். இளைஞர்களும் இளநங்கையரும் தங்கள் உடலெங்கும் பச்சை குத்திக்கொள்வதும் நீராடும் பொது இடங்களில் தங்கள் நண்பர்களுக்கு அவற்றைக் காட்டிப் பெருமையடைவதும் ஜப்பானியர் வழக்கம்.

சில அழகிய ஓவியங்களை முப்பது நாட்கள் வரையில் நாள்தோறும் சிறிது சிறிதாகக் குத்துவதும் உண்டு. ஊசி கொண்டு தோலில் குத்திப் பன்னிறங்களை ஏற்றுவதால் உண்டாகும் வலியினை, பச்சை குத்திக்கொள்வதில் உள்ள பெருவிருப்பங் காரணமாக அவர்கள் பொறுத்துக் கொள்ளுகின்றனர். பலவகையான ஓவியங்கள் இவ்வாறு குத்தப்படுவதுண்டு. கறுப்பு, சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறங்கள் இதில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. பச்சை குத்துவதை ஜப்பானியர் ஒரு சிறந்த கலையாக வளர்த்துள்ளனர். இடையில் சிறிது காலம் இவ்வழக்கம் தடுக்கப்பட்டதெனினும், இது மீண்டும்

இப்போது நாடெங்கும் பரவிக்கிடக்கிறது. ஜப்பானில் பச்சைகுத்தியிராத ஆணையோ, பெண்ணையோ காண்பது அரிது. அழகிய இயற்கைக்காட்சிகள், விலங்கு உருவங்கள், அழகிய பெண்ணுருவங்கள், கடவுள் தோற்றங்கள், காதலர் பெயர்கள் முதலியவற்றை அவர்கள் பச்சை குத்திக்கொள்ளுகின்றனர்.

## உடைச் சிறப்பு

மேனாட்டவருடைய நெருங்கிய தொடர்பால் இன்றைய ஜப்பானியருட் பலர், மேனாட்டு உடைகளையே விரும்பி அணிகின்றனர். இக்கால மேனாட்டு உடைகளை எவ்வண்ணம் தயாரித்தல் வேண்டும் என்பதைக் கற்பிக்கும் வகையில் முப்பதுக்கு மேற்பட்ட நூல்கள் அங்கு அச்சாகி வெளியிடப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து, மேனாட்டு உடையில் ஜப்பானியருக்கு இருக்கும் காதல் எத்தகையது என்பது நன்கு விளங்கும். உடைமட்டுமின்றித் தலை முடியையும் ஆண்களும் பெண்களும் இன்று மேனாட்டவரைப் போலவே கத்தரித்துக்கொள்கின்றனர். முடி வெட்டும் தொழிலில் ஆண்களைப் போலவே பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஜப்பானியரின் தேசீய உடை 'கிமோனோ' (Kimono) என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இந்த உடை மேனாட்டு உடைகளிலும் விலை உயர்ந்தது. கிமோனோ வெறும் பட்டாக இராமல் பலவகைப் பூக்கள் ஒளிரும் அழகு மிகுந்த உடையாகும். ஜப்பானியர் இதனை இப்போது விழாக் காலங்களில் பயன்படுத்துகின்றனர்.

## ஆணையிடும் வழக்கம்

ஜப்பானியர் எதையேனும் ஆணையிட்டுக் கூறினால், அவ்வாணையை மீறுவதில்லை. சிறுவர்களும் இவ்வாறே பழக்கப்பட்டுள்ளனர். இரு சிறுவர்க்கிடையில் பிணக் கேற்பட்டு, அவர்கள் பிணக்கொழிந்து நட்புடனிருப்பதாக

உறுதி செய்துகொள்ளுவதற்கு, இருவரும் வலக்கையை நீட்டி, சிறு விரலை வளைத்துக் கோத்துக்கொள்வர். இவ்வாறு இரு சிறுவரும் வலக்கைச் சிறுவிரலை வளைத்துக் கோத்தனராயின், பிறகு மீண்டும் பிணங்கிக்கொள்ள மாட்டார். இவ்வழக்கம் பெண்களிற் பெரியவர்களிடத்தும் காணப்படுகிறது. தெய்வங்களின் பெயரைக் கூறி ஆணையிடும் வழக்கமும் அவர்களிடம் இருக்கிறது. குழந்தைகள் பிணிவாய்ப்பட்டிருக்கும் காலத்தில், தாயோ அல்லது தந்தையோ பிணி நீங்கினால் ஓராண்டுவரை உப்பைப் பயன்படுத்துவதில்லை என்றும், குறிப்பிட்ட காலம்வரை தேநீர் குடிப்பதில்லை என்றும் வேண்டுதல் செய்துகொள்வதுண்டு. இவ்வண்ணம் ஜப்பானியர் ஆணையை மீறுமலும், வாக்குறுதி பிறழாமலும் நடப்பதில் விருப்பமுடையவராக விளங்குகின்றனர்.

## வயிற்றின் சிறப்பு

நாம் மனத்திற்குச் சிறப்பளிப்பதுபோல, ஜப்பானியர் வயிற்றுக்குச் சிறப்பளிக்கின்றனர். மனித உடலில் தலையும் மார்பும் மற்றைய நாட்டினருக்குச் சிறப்பான உறுப்புக்களாக இருப்பதுபோல, ஜப்பானியருக்கு மனித உடலில் வயிறே சிறப்பிடம் பெற்ற உறுப்பாக இருக்கிறது. வயிறுதான் ஆன்மாவின் இருப்பிடம் என்பது ஜப்பானியரின் நம்பிக்கை. 'பரந்த மனமுடையவன்' என்று நாம் சொல்வதை, ஜப்பானியர் 'பெருவயிற்றன்' என்று கூறுகின்றனர்; நேர்மையற்ற, நம்பமுடியாத வஞ்சகனைக் 'கருவயிற்றன்' என்று சொல்லுகின்றனர். கருநிறம் குற்றத்துக்கும் தீமைக்கும் வஞ்சகத்துக்கும் அறிகுறியாகும் என்று, ஜப்பானியர் நம்புகின்றனர்; 'தெளிந்த மனத்தான்' என்று நாம் கூறுவதை, அவர்கள், 'தூய வயிற்றன்' என்று மொழிகின்றனர்; நெஞ்சுறுதி அற்ற கோழைகளை 'வயிறில்லாதவன்' என்று செப்புகின்றனர்; தன் குணம், நெறி முதலியவற்றினைப் பிறர் உணர்ந்து

கொள்ள முடியாதபடி நடந்துகொள்பவனை 'வயிற்றின் போக்கை உணர முடியாத நிலையில் உள்ளவன்' என்றே கூறுகின்றனர். ஜப்பானியர் மானத்துடன் வாழ்வதில் கண்ணுங் கருத்துமாயிருப்பர்; மானக்கேடு நிகழ்ந்தால் உயிர் நீப்பர்; இவ்வாறு உயிர் நீப்பதை 'ஹராகிரி' (Harakiri) என்று வழங்குகின்றனர்; இதன் பொருள் 'தற்கொலை' என்பதாம். ஜப்பானியர் தற்கொலை என்பது வயிற்றை வாளினுல் கிழித்துக்கொண்டு உயிர்நீப்பதாகும்.

## எழிலுடையவர்

முட்டை வடிவ முகமும், குறுகிய இடுப்பும், மெல்லிய உடலமைப்பும், கருங்கூந்தலும், மஞ்சள் கலந்த வெண்மை நிறமுமே எழில் மிக்க பெண்களுக்குரியவை என ஜப்பானியர் எண்ணுகின்றனர். "எழில் மிக்க தோல் ஏழு குற்றங்களை மறைக்கும்," என்ருெரு பழமொழியும் அவர்களிடை வழங்குகிறது. ஆனுல் இன்று ஜப்பானியருட் சிலர் உருண்டை வடிவ முகமுடைய பெண்களையே அழகிகள் என மதிக்கின்றனர்.

## நாட்டு மருந்துகள்

பழமையில் பற்றுடைய ஜப்பானியர் பிணிகளைப் போக்கப் பயன்படுத்தும் மருந்துகள் வேடிக்கையானவை. நவீன நாகரிகம் பரவிய பிறகு, மேனுட்டு மருந்தினங்கள் பல ஜப்பானில் செய்யப்படுகின்றன. மேனுட்டு மருத்துவக் கல்வியும் பிணிபோக்கும் முறைகளும் நாடெங்கும் பரவியுள்ளன. ஆயினும் பண்டை முறையும் அந்நாட்டில் வழக்கில் இருக்கின்றது. பண்டை முறைப்படி மருந்துகள் விற்கும் கடைகள் நாகரிகம் பரவிய பெரிய நகரங்களிலும் காணப்படுகின்றன.

அக்கடைகளில் கக்குவாய் எனப்படும் இழுப்பு இருமலைப் போக்க, பொசுக்கிய கொக்குக்கால் விற்கப்படுகிறது. சித்தப் பிரமை, நரம்பு அதிர்ச்சி, மூளைக் கோளாறு,

பைத்தியம், போன்ற பிணிகளைப் போக்க மலைஎலி, காக்கை, நாரை முதலியவற்றைச் சுட்டுப் பொசுக்கிக் கொடுக்கின்றனர். சோகை நோயைப் போக்க ஆப்பிள் பழத்தை வதக்கிக் கொடுப்பது பண்டை மருத்துவ முறை. உளமாந்தை எனப்படும் க்ஷயரோகம் தீரப் பாம்பைச் சுட்டுப்பொசுக்கிக் கொடுக்கின்றனர். இவ்வண்ணம் புறா, குயில், வானம்பாடி, மீன், குரங்கின் மூளை, கோழிக்குஞ்சின் தலை, கழுகின் தலை ஆகிய இவற்றையெல்லாம் சுட்டுக் கருக்கி, உடல் மெலிவு, ஈளை, பார்வை மழுங்கல், பிளவை, புற்று முதலிய பிணிகளுக்கு மருந்தாகப் பயன்படுத்துவதும் விற்பதும் பழமையில் பற்றுடையாரிடம் இன்றும் காணலாம். நீர் உடும்பு என்னும் ஓருயிரைச் சுட்டுக் கருக்கி மணமக்கள் உட்கொண்டால் இறுதிவரை அவர்கள் இணைபிரியாக் காதலராய் இன்பவாழ்வு வாழ்வர் என்பது பண்டைமக்கள் நம்பிக்கை. எனவே இதனை ஜப்பானியர் ‘ காதல் மருந்து ’ என்றும் கூறுகின்றனர்.

## பரிசளிக்கும் பண்பு

ஜப்பானியர் பரிசளிப்பதில் விருப்பமுடையவர்கள். ஒவ்வொரு விழாவிலும் அவர்கள் தம் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசுகளை அனுப்புவர். எதைச் செய்தாலும் ஒழுங்காகவும் அழகாகவும் செய்யவேண்டும் என்பது அவர்தம் கருத்து. அதற்கேற்பப் பரிசைத் தேர்ந்தெடுத்து, பெட்டிக்குள் வைத்து, மேலே காகிதம் சுற்றி அழகாக மடித்து, நாடாக்கள் சுற்றிக் கட்டி அனுப்பி வைப்பர். அப்பரிசின் ஒரு மூலையில் “ நோஷி ” (Noshi) ஒட்டுவர். இந்த நோஷியை ஒட்டி, நாடாக்கள் கட்டி வராத பரிசுகள், ஜப்பானியரால் பரிசுகளாகவே மதிக்கப் படுவதில்லை. “ நோஷி ” என்பது ஒருவகை மீனின் சதையைக் காகிதம்போலச் செய்து, சிறு அறுகோணத் துண்டுகளாக நறுக்கிவைப்பது. இத்துண்டுகளுள் ஒன்று பரிசுப்பெட்டிமீது ஒட்டப்பட்டிருத்தல் வேண்டுமாம்.

துவக்கத்தில் காய்கறிகள், பறவைகள் இந்த நோஷி என்னும் மீன் முதலியவைகளே பரிசுப் பொருள்களாக இருந்தன. இவையே முதலில் இறைவனுக்குப் படைக்கப் பட்டன. பிற்காலத்தில் பல மாறுதல்கள் நேரிட்டன எனினும், பழமையை மறவாமலிருத்தற் பொருட்டு இன்றைய பரிசுகளில் 'நோஷி' ஒட்டவைக்கப்படும் வழக்கம் இன்னும் இன்றியமையாததாகவே கருதப்படுகிறது.

## விரல் முத்திரை இடும் வழக்கம்

அடையாளத்துக்காக வலக்கைப் பெருவிரல் முத்திரை யிடும் வழக்கம் ஜப்பானில் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. ஆனால் இவ்வழக்கம் எளிய மக்களுக்கே உரியது. செல்வர்கள், வீரர்கள், வணிகர்கள், தொழில் அறிஞர்கள், கலையறிஞர்கள் போன்றோர் தத்தமக்குரிய சொந்த முத்திரைகள் செய்து வைத்திருப்பர். உழவர், மீன் பிடிப்போர், உழைப்பாளிகள் முதலியோரே கைப்பெரு விரல் முத்திரையிடுவர். ஒப்பந்தம், உடன்பாடு, கடன் பத்திரங்கள் முதலியவற்றில் இவ்வெளிய மக்கள் தங்கள் பெயரையும் எழுதிக் கீழே வலக்கைப் பெருவிரல் முத்திரையும் இடுதல் வேண்டும். இவ்வழக்கம் மிகப் பழங் கால முதலே ஜப்பானில் இருந்துவருகிறது. போர்த் தலைவர்கள் தங்கள் இடக்கை மோதிர விரலில் நகத்தின் கீழ்ச் சிறு கத்தியால் கீறி இரத்தம் வரச்செய்து, அந்த இரத்தத்தைக் கொண்டு உடன்பாடுகளிலும் உறுதி மொழி களிலும் கைவிரல் அடையாளம் இடும் வழக்கமும் பழங்கால ஜப்பானியரிடை இருந்தது. இவ்வாறு இரத்த முத்திரை யிடப்பட்ட பத்திரங்கள் ஜப்பானியரால் மிகுந்த மதிப் புடையனவாகக் கருதப்பட்டன.

## இடி விழாமல் தடுப்பது

நம் நாட்டில் பழைமையில் பற்றுடைய மக்கள், கடுமை யாக இடியிடித்து மழை பொழியும் சமயத்தில் வெளியிற்

சென்றிருந்தால், இடியிடிக்கும் நேரத்தில் "அர்ச்சுனு, அர்ச்சுனு" என்று கூறுவர். இவ்வாறு கூறுவதால் இடி தலைமீது விழாதென்பது அவர்தம் நம்பிக்கை. இது போன்று, ஜப்பானியரும் இடி கடுமையாக இடிக்கும் சமயம் 'குவாபரா-குவாபரா' (Kuwabara) என்று உரத்துக் கூவுகின்றனர்; இவ்வாறு கூவும் ஒலி கேட்ட இடி இடர் விளைக்காது திரும்பிவிடும் என்று நம்புகின்றனர். இவ்வழக்கம் இன்னும் விரிந்த பொருளில் பரவி, ஏதேனும் இன்னலுக்குரிய செய்தி, அச்சுறுத்தும் செய்தி, துன்பந் தரும் செய்தி முதலியவற்றைக் காதில் கேட்டாலும் உடனே ஜப்பானியர் 'குவாபரா' என்று கூறிவிடுவர்; இங்ஙனம் கூறுவது தங்களுக்கு நேரவுள்ள இன்னலைப் போக்குவதாகும் என்று கருதுகின்றனர்.

'குவாபரா' என்று கூறும் கருத்துப்பற்றி ஜப்பானியரிடை வேடிக்கையான கதை ஒன்று உலாவுகிறது: ஒசகாவைச் சேர்ந்த இசுமி மண்டலத்தில் குவாபரா என்னும் பெயருடன் ஒரு சிற்றூர் இருக்கின்றது. அங்கு ஒரு முறை இடியொன்று எதிர்பாரா வகையில் ஒரு கிணற்றில் வீழ்ந்துவிட்டது. இதைக் கண்ட அவ்வூர்க்காரர்கள் உடனே கனத்த மூடி ஒன்றைக் கொண்டு அக்கிணற்றை மூடிவிட்டனர். அக்கிணற்றிலிருந்து தப்பி வானகம் ஏக இயலாமற் போனதறிந்த அந்த இடி, அவ்வூரார் விரும்பியவாறு, இனி எப்போதும் அவ்வூர்ப்பக்கம் தான் வருவதில்லை யென்று வாக்குறுதி அளித்தபிறகு, விடுதலை பெற்று வானகம் சென்றது. அதுமுதல் அவ்வூரில் இடியே விழுவதில்லை. ஒருமுறை இசுமி மண்டலத்தில் குவாபராவைச் சுற்றிலும் இருந்த பல ஊர்கள் இடி விழுந்து நாசமாயின எனினும் குவாபரா மட்டும் இடியால் எக்கேடும் உறவில்லை.

எனவே, இக்கதையினை அடிப்படையாகக் கொண்டு தான் இடி குமுறுகையில் 'குவாபரா' என்று ஒலியெழுப்பும் வழக்கம் ஏற்பட்டதென்று ஜப்பானியர் கூறுகின்றனர்.

## தீப்பற்றுமல் காக்கும் வழி

மாளிகைகள், கோயில்கள், இல்லங்கள் ஆகியவற்றின் கூரைகள்மீது, அச்சமூட்டும் கடல் விலங்கு ஒன்றின் உருவங்கள் பக்கத்துக்கு ஒன்ருக இரண்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இது திமிங்கிலத்தையும் கொல்லவல்ல கடல் விலங்காம். பார்வைக்கு இது பெரிய இறகு முளைத்த முதலை போன்றிருக்கிறது. ஆனல் இருபுறமும் கூரிய வாள் நீட்டிக்கொண்டிருப்பது போன்ற வலிமை மிக்க நீண்ட வால் இதற்கிருக்கிறது. அந்த வாலை வளைத்துத் தலைக்குமேல் நிமிர்த்தி வைத்திருப்பது போல, இந்த உருவங்கள் வெண்கலத்தாலேனும் களிமண்ணுற் செய்து சுட்டேனும் கூரைகள்மீது வைக்கப்பட்டுள்ளன. கட்டடம் தீக்கு இரையாகாமற் காக்கும் வல்லமை இந்த உருவங்களுக்கு உண்டு என்று ஜப்பானியர் கூறுகின்றனர்.

## முகமூடியிட்டு ஆடுதல்

ஜப்பானியப் பெண் ஒருத்தியை 'ஒட்டாபுகு' என்ருே, 'ஒகேமி' (Okame) என்ருே அழைத்தோமாயின், அவள் தன்னை அவமதிப்பதாகக் கருதுவாள் ; ஆனல் ஒட்டாபுகு என்பது ஒருவகை முகமூடியின் பெயராகும். இம்முகமூடி மீது வேடிக்கையான முகம் போன்ற படம் தீட்டப்பட்டிருக்கும். அதனை முகத்தில் கட்டிக்கொண்டு இளைஞர்கள் வேடிக்கையாக ஆடுவது வழக்கம். ஒருமுறை பரிதி தேவதை மனக்குறைகொண்டு சுவர்க்க வீட்டிற்குள் புகுந்து பாறைக் கதவுகளை மூடிக்கொண்டாள். அவள் வெளி வராமற்போகவே உலகெங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. அதையறிந்த மற்றை மூன்று தேவர்கள் ஒட்டாபுகு முகமூடியணிந்து, பரிதி மறைந்திருந்த வீட்டு வாயிலின் முன் பாட்டிசைத்து நடனமாடியபோது, பரிதி தேவதை, கதவைத் திறந்து, அந்நடனத்தில் மகிழ்ந்து, பழையபடி வெளிப்பட்டு உலகிற்கு ஒளியையும் வெம்மையையும் நல்கினுள்.

இக்கதையை அடிப்படையாகக்கொண்டு, ஒட்டாபுகு முகமூடி நல்வாய்ப்பு அளிக்கவல்லது என்று ஜப்பானியர் கருதுகின்றனர். ஜப்பானியச் சிறுவர் ஒட்டாபுகு முகமூடி உருவம் போன்ற ஒன்றை ஒரு காகிதத்தில் எழுதி நிறந் தீட்டி, மூக்கு, கண்கள், புருவங்கள், வாய், காதுகள் என வெவ்வேருக நறுக்கி வைத்துக்கொள்வர். மற்ருெரு வெள்ளைத் தாளில் அதன் வெளிக் கோட்டினை மட்டும் வரைந்திருப்பர். தங்களுள் ஒருவனுடைய கண்களைக் கட்டிவிட்டு, அவனிடம் நறுக்கிய துண்டுகளைத் தனித் தனியாகக் கொடுத்து, அவற்றை வெளிக்கோடு மட்டும் வரைந்துள்ள வெள்ளைத்தாளில் பொருந்துமாறு வைக்கச் சொல்வர். கண்கள் கட்டப்பட்டிருப்பவன் ஒவ்வொன்ருக வாங்கி, வெளிக்கோடுடைய தாளில் பொருத்தமாக வைத்து, அதை ஒட்டாபுகு முகமாக்கிவிட்டால் அவன் வென்றவனுகக் கருதப்படுவான். சில சமயங்களில் இந்த ஆட்டத்தில் சிறுவர்கள் மட்டுமின்றிப் பெரியவர்களும் ஈடு படுவதுண்டு. இந்த ஆட்டம் பார்ப்பவர்களுக்கு மிகுந்த களிப்பூட்டுவதாக இருக்கும்.

## ‘தனபாட்டா’ திருவிழா

ஜூலைத் திங்கள் ஏழாம் நாள் இவ்விழா ஜப்பானிய மக்களால் கொண்டாடப்படுகிறது. அதன் பெயர் ‘தனபாட்டா’ என்பது. தன் காதலியை விட்டுப் பிரிந்துள்ள உடுக்கணங்களுள் ஒன்று, இந்நாளில் தன் காதலியைச் சந்தித்து மகிழ்கிறது என்பர். இதனை நாட்டுப்புறங்களில் வாழும் ஜப்பானியர் – சிறப்பாகப் பெண்கள்–மிகச் சிறப்பான நாளாகக் கொண்டாடு கின்றனர். இந்த நாளைக் கொண்டாடுவதால், பெண்களின் காதல் நிறைவேறும் என்றும் நெசவு, தையல், பின்னல் முதலிய தொழில்களில் பெண்களுக்கு நல்ல திறமை உண்டாகும் என்றும் அம்மக்கள் நம்புகின்றனர். பிரிந்து கூடும் உடுக்கள் இரண்டும் வானகத்தில் நெசவுத் தொழி

லுக்குத் தலைமை பெற்றவை. ஆகையால், தங்களைத் தொழும் மக்களுக்கு அத்தொழிலில் சிறந்த ஆற்றலை உண்டாக்கி வைக்கும்', என்று அவர்கள் கூறுகின்றனர்.

'தனபாட்டா' (Tanabatta) நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கெனச் சிறப்பு வகையிற் சிற்றுண்டிகள் செய்யப்பட்டும் பெரிய விருந்துகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பெண்கள் வீட்டின் பின்புறம் மூங்கில் ஒன்றை நட்டு, அதில் தாங்களே எழுதிய செய்யுள் ஒன்றுள்ள காகிதத்தை ஒட்டி வைக்கின்றனர். மாலையில் பெண்கள் வட்டமாக நின்று முழவு ஒலிக்கேற்ப நடனம் ஆடுகின்றனர். பண்டைக் காலத்தில் ஜப்பானில் நூல் நூற்றல், நெய்தல், தைத்தல் முதலிய தொழில்களைப் பெண்களே செய்தனர். ஒரு குடும்பத்திற்கு வேண்டிய உடைகள் அனைத்தையும் அக் குடும்பப் பெண்களே உற்பத்தி செய்வது பண்டை வழக்கம். ஆனால் இக்காலத்தில் அவ்வழக்கம் அருகி, நெசவாலைகள் பெருகிவிட்டன; எனினும் தனபாட்டா விழா மட்டும் இன்றும் ஜப்பானியப் பெண்களால் கொண்டாடப்படுகிறது.

# 8. பழக்க வழக்கங்கள்—II

## மனித ஆன்ம உருண்டை

காதல் நிறைவேருமல் இறந்த ஆண்-பெண்கள், பகைமை முற்றியவர், செல்வத்தில் பெரும் பற்றுடையவர் முதலியோர் இறந்தால், அவர்தம் ஆன்மாக்கள் நீல ஒளியுடன் கூடிய உருண்டை வடிவில் காற்றில் மிதந்த வண்ணம் இருக்கும். இந்நீல ஒளி உருண்டையில் வால் போன்று சிறிது நீண்டு தொங்கும் ஒளியும் உண்டு. அஃதாவது, வால் முளைத்த உருண்டை ஒளி வடிவத்தில், ஆன்மா காற்றில் மிதந்தவண்ணம் பகைவர் வீட்டையோ, தம் செல்வம் இருக்கும் இடத்தையோ, காதலர் வீட்டுக்கு அருகிலோ சுற்றிக்கொண்டிருக்கும். இந்த ஒளி வானத்தில் பறந்து சென்றுவிடுவதில்லை. இதனை இக்கால மக்கள் நம்புவதில்லை; எனினும், பழைமையில் பற்றுள்ள மக்கள் இன்றும் இதனை நம்புவதுடன், இவ்வுருவத்தை எப்போதேனும் காண்பதாகக் கூறுகின்றனர். இங்ஙனம் நீல ஒளித் தோற்றம் உண்டாதல் இயற்கையே என்றும், கந்தக ஆவி கலந்த காற்றுப் புகுந்த நீர்க் குமிழிகளே காற்றில் இவ்வண்ணம் மிதந்து செல்லுகின்றன என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே, கந்தகக் காற்றுப் புகுந்த குமிழிகள் இரவில் நீல ஒளியுடன் காணப்படுவதை அடிப்படையாக வைத்துப் பண்டை மக்கள் இவ்வாறுன கதைகளைக் கற்பனை செய்துவிட்டிருக்கலாம் என்பது அறியக் கிடக்கிறது.

## தாமரை இருக்கை

ஜப்பானியர் தாமரை மலரை மிகுதியாகப் போற்றுகின்றனர். புத்த சமயச் சான்றேர்கள் சுவர்க்கத்தில் தாமரை இருக்கையில் வீற்றிருக்கின்றனர் என்றும், தாமரை இருக்கை கிடைப்பது அரிதென்றும், வாழ்க்கையில் சான்ருண்மை மிக்கோரே அதனைப் பெறத்தக்கவர் என்றும்

ஜப்பானியர் கருதுகின்றனர். நம் நாட்டினரைப் போன்றே, எழிலுக்கும் ஏற்றத்திற்கும் புனிதத்துக்கும் புகழுக்கும் உரிய தாமரை, சமயப் பற்றுக் கலந்ததொரு மலர் என ஜப்பானியராலும் மதிக்கப்படுகிறது. தாமரை மலர் இருக்கையே ஜப்பானிய பௌத்தர்களின் இறுதி வேட்கை யாகும். ஜப்பானியத் துறவிகளின் சிலைகள் தாமரை இருக்கையில் வீற்றிருப்பது போலவே செய்யப்பட்டிருக் கின்றன.

இந்நிலையடைய, புத்தமதத் துறவிகளும் சமயப்பற்று மிக்கோரும் இரவு பகலாக இறைவனை வணங்காநிற்பர். மக்கள் மனத்தில் உள்ள இந்தச் சமய வேட்கையினைத் தந்நலம் மிக்க பொய்த் துறவிகள் சிலர், பணம் பறிக்கப் பயன்படுத்திக்கொள்வதும் உண்டு. இத்தகையோர் துறக்கத்தில் தாமரை இருக்கை கிடைக்க வழி செய்வ தாகச் செல்வரிடம் பணம் பறித்துச் செல்வதும் உண்டு.

முன்னர் ஒரு முறை பணப்பற்று மிக்க துறவிகள் சிலர் ஒன்று கூடி, ஒரு செல்வரைத் தூண்டி, அவருக்குத் தாமரை இருக்கை இவ்வுலகிலும் மறுவுலகிலும் கிடைக்கு மாறு செய்வதாக உறுதி கூறி, அவரை நம்ப வைத்து, அவர் செல்வத்தில் பெரும் பகுதியைப் பெற்றனர் ; பின்னர், ஒரு கோவிலுக்குள், குவியவும் விரியவும் இயலுமாறு மரத் தாலும் வண்ணக் காகிதங்களாலும் ஒரு தாமரை மலரைச் செய்துவைத்தனர் ; அச்செல்வரின் உற்றார் உறவினர் காண, ஒரு நாள் மாலை அவரை அத்தாமரை மலரிருக்கை யில் வீற்றிருக்கச் செய்தனர் ; பொழுது சாய்ந்ததும், தாமரை குவியும் இயல்புடையதெனக் கூறி, அம்மரத் தாமரையைக் குவியச் செய்து, மறுநாட்காலை கதிரவன் தோன்றிய போது, அதனை விரியச் செய்தனர். செல்வர் மூச்சுத் திணறி உயிர் நீத்தார். ஆயினும், அச் செல்வர் தாமரை இருக்கையில் அமர்ந்தவண்ணம் உயிர் நீத்து, மறு உலகில் தாமரை இருக்கை பெற்றுவிட்டார் என்றே அங்கிருந்த மக்கள் நம்பினர். இரவெல்லாம் விழித்துத்

தங்கள் உறவினர்க்குத் தாமரை இருக்கை அளிக்குமாறு இறைவனைத் தொழுத வண்ணம் இருந்த அச்செல்வரின் உறவினரிடம் அத்துறவிகள் அங்ஙனமே கூறி, அவர்களை நம்புமாறு செய்தனர். இங்ஙனம் ஏமாற்றம் அடைந்து உயிர்துறந்த செல்வரும் பணம் திரட்டிய துறவியரும் பலர் என்னலாம். எனினும், இந்த எண்ணம் இக்காலத்தில் பெரிதும் மறைந்துவிட்டது.

தாமரை மலர் இதழ்கள் பிணி போக்கும் சத்துடையவை எனக் கருதப்படுகிறது. தாமரைத் தண்டு, கிழங்கு முதலியவை ஜப்பானியரால் உண்ணப்படுகின்றன. தாமரை இலைகள் உலர்ந்தபின், பல் வலி, வேனிற்காலக் கட்டிகள் முதலியவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகின்றன. எனவே, ஜப்பான் நாட்டில் செந்தாமரை, வெண்டாமரை ஆகிய இரண்டு வகையும் உழவரால் பயிராக்கப்படுகின்றனவோ என ஐயுறும் அளவில் சிறு குளங்களில் எல்லாம் காணப்படுகின்றன. தாமரைத் தண்டிலிருந்து மெல்லிய நார் எடுத்துப் புத்தர் பெருமான் உருவம் அமையுமாறு ஒருவகைச் ‘சல்லாத் துணி’ நெய்வது ஜப்பானில் சமயப் பற்று மிக்காரின் நோன்பாக அமைந்திருக்கிறது.

## உப்பு—புனிதப்பொருள்

விரும்பத் தகாதவர்கள், வேண்டாதவர்கள், தீயவர்கள் முதலியோருள் எவரேனும் ஒரு வீட்டுக்குச் சென்றால், அவர் அவ்வீட்டைவிட்டு வெளியேறியவுடன், அவ்வீட்டுப் பெண், அடுக்களையிலிருந்து உப்பெடுத்துச் சென்று, அவ்வுப்பினை வீட்டு வாயிலில் தூவிவிடுவாள். இங்ஙனம் செய்வதால் அத்தீயவருடன் வந்த தீக்கோள்கள் தம் குடும்பத்திற்கு இன்னல் விளைக்கா என்பது அவளது நம்பிக்கை.

உப்பு, புனிதத்தின் சின்னம், இயற்கையளிக்கும் பெரும்பேறு என்பது ஜப்பானியர் தம் உள்ளக் கிடக்கை. ஆகலின் இப்புனிதப் பொருளைத் தூவுவதால் தீக்கோள்கள், பேய், பிசாசுகள், தீய கருத்துக்கள், வஞ்சகச் செயல்கள்

முதலியவை தம் இல்லங்களை அணுகாவென அம்மக்கள் நம்புகின்றனர்.

வணிகர் தங்கள் கடைகளின் வாயிலில், காலையில் கடை திறக்கும்போது உப்பைச் சிறு குவியலாக வைப்பர். இதனால் நல்ல வாணிகம் நடைபெறும் என்று அம்மக்கள் நம்புகின்றனர். இறந்தவர் இல்லத்துக்கோ, சவத்துடன் இடுகாட்டுக்கோ சென்று வந்தவர், நேரே தங்கள் இல்லத்திற்குள் நுழையார்; இல்லத்திற்குள் நுழையுமுன் வாயிலில் நிற்பர். வீட்டுப் பெண்கள் உப்பைக் கொணர்ந்து, அவர் மீதும், வாயில் முழுவதிலும் தூவுவர். அதன் பின்னரே அவர் இல்லத்துள் நுழைவர். இங்ஙனம் செய்யாவிடின், அக்குடும்பம் பல இடையூறுகளுக்கு உள்ளாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். கைகளையும் வாய்களையும் உப்பு நீரினால் கழுவுதல், உப்புத் தூளினால் பல் விளக்குதல் முதலியவை புனிதச் செயல்கள் என அம்மக்கள் எண்ணுகின்றனர்.

## சிறுவரை அச்சுறுத்தும் முறை

நம் நாட்டில் சிறுவர்கள் குறும்பு செய்தால், ' கண்ணில் சுக்குப் போடுவேன் ' என்று நாம் அச்சுறுத்துவது உண்டல்லவா ? அதே போன்று ஜப்பானியர், ' ஒக்யூ ' வைப்பேன் என்றால், எத்துணைக் குறும்புடைய சிறுவனும் அஞ்சி அமைதியாக இருந்துவிடுவான். ' ஒக்யூ ' (Okyu) என்பது உடலில் எங்கேனும் வாதவலி இருக்கும் இடத்தில் சில இலைகளை வைத்துச் சுடுவதேயாம். ஜப்பானியர் இதனை மருத்துவ முறையாகக் கைக்கொண்டபோதினும், பிள்ளைகள் இப்பெயரைக் கேட்டதும் அஞ்சுகின்றனர். இச்சுடுமுறையால் தோலில் சுட்ட தழும்பு ஏற்படுவதோடு, சுடும்போது வலியும் மிகுந்திருப்பதால் இப்பெயரைக் கேட்டவுடன் பிள்ளைகள் அஞ்சுகின்றனர்.

**விசிறிகள்**

விசிறிகளைப் பயன்படுத்தும் வழக்கம் ஜப்பானிய ரிடைப் பெருகிக் காணப்படுகிறது. கோடையில் புழுக்கந் தவிர்க்க விசிறி பயன் படுத்துவதோடு விழாக்களிலும், கேளிக்கைகளிலும், கொண்டாட்டங்களிலும் உண்டாட்டுக் களிலும் ஆண்டு முழுவதும் பல சடங்குகளிலும் அம் மக்கள் விசிறியும் கையுமாக வீற்றிருப்பதைக் காணலாம். அவர்கள் இன்றியமையாப் பொருள்களெனக் கருதுகிற வற்றுள் விசிறியும் ஒன்றாகும்.

ஜப்பான் விசிறிகள் இருவகையானவை. ஒன்று திறந்தவாறே இருக்கும் ; மற்றொன்று மடிப்பு விசிறி. பருவநிலை எத்தகையதாக இருந்தாலும், அரசர் அவைக்குச் செல்லும் போதும், பிற கொண்டாட்டங்களின் போதும், விழா உடைகள் அணியும் போதும் கையில் மடிப்பு விசிறியுடன் இருத்தல் வேண்டுமென்பது ஆங்கு இன்றி யமையாததொரு வழக்கமாகிவிட்டது. விருந்தினருக்கு முதலில் விசிறியே அளிக்கவேண்டும் என்பது அவரது கருத்து. எனவே, வீடுதோறும் விசிறிகள் பல தேவை யாகிவிட்டன. அதனால் ஜப்பானில் விசிறி செய்வது ஒரு சிறந்த தொழிலாகியது. மடிப்பு விசிறிகள் மிக்க அழகாக வும் ஓவியங்கள் பொறிக்கப்பட்டனவாகவும் செய்யப்படு கின்றன.

**தீக் கனவு தோன்றாமல் தடுப்பது**

துயிலும்போது தீய கனவு கண்டு அதனால் துயில் கலைந்து அச்சம் ஏற்பட்டால், அதனைப் போக்க ஜப்பா னியர் கைக்கொண்டுள்ள முறை வேடிக்கையானதாகும். ஜப்பானியரின் கற்பனைக் கதைகளில் வரும் உருவங்களில் ‘பாகூ’ (Baku) என்னும் கரடிபோன்ற விலங்கும் ஒன்றாகும். இவ்விலங்கு கனவுகளையே உணவாக உட் கொள்ளுமாம். எனவே, இதனைக் ‘‘கனவுண்ணி’’ என் றும் ஜப்பானியர் கூறுகின்றனர். ஒரு காகிதத் துண்டில்

இந்த விலங்கின் உருவம் பொறித்தோ, அல்லது இதன் பெயரை எழுதியோ, கனவில் அஞ்சுபவர் துயிலும் படுக்கையில் தலையணையின்கீழ் வைத்துவிட்டால், அவருக்கு ஏற்படும் அச்ச மூட்டும் கனவுகள் அனைத்தையும் அவ் விலங்கு தின்றுவிடும் என்பது அவர்தம் நம்பிக்கை. இவ் விலங்கு தோற்றத்தில் கரடிபோன்று இருப்பினும், காண்டா விலங்கின் கண்களையும் யானையின் துதிக்கை போன்ற மூக்கையும், புலியின் கால்களையும், பசுவின் வாலையும் பெற்றிருப்பதாகத் தீட்டப்படுகிறது. இந்த விலங்கு, பாறைகளையும் எஃகுப் பாளங்களையும் தின்றுவிடக்கூடியதென ஜப்பானியர் கருதுகின்றனர்.

### அரி-ரையோஜி

மென்மை வாய்ந்த மூன்றங்குல ஊசிகளை உடலிற் சதையில் அழுத்துவதற்கே 'அரிரையோஜி' (Hari-Ryoji) என்னும் பெயரை ஜப்பானியர் வழங்குகின்றனர். இவ் வண்ணம் உடலில் ஊசிகளை அழுத்துவதால், வலி உண்டாவதுமில்லை ; குருதி வெளிப்படுவதுமில்லை. இந்த மருத்துவ முறை இன்றும் அவர்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படுகிறது.

உள்ளம், உடல் பற்றிய பிணிகள் பலவற்றை இம் மருத்துவ முறை நலப்படுத்திவிடுகிறதாம். பக்கவாதம், குருதித் தடை, வீக்கம், நரம்புத் தளர்ச்சி முதலியவற்றினைப் போக்க இம்மருத்துவ முறையே ஏற்றதென அம்மக்கள் கருதுகின்றனர். உடலில் நரம்புகளையும் தசை நார்களையும் இயக்குவதற்குரிய இடங்கள் அறுநூற்றறுபது இருக்கின்றன என்றும், பிணியாளர்கள் உடலில் அப்பிணியை நீக்குவதற்கு, இவற்றுள் சில இடங்களைத் தேர்ந்தெடுத்து ஊசி யழுத்துதல் நல்ல பலனைத் தரும் என்றும், சதையில் ஊசி அழுத்துவதால், பிணிபற்றிய தசை நார்களும் நரம்புகளும் ஊக்கப்பட்டு இயங்குகின்றன என்றும் அம் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இப்போது ஜப்பானியர் இந்த மருத்துவ முறைக்கு அரசாங்கம் ஆதரவு அளித்திருப்பதுடன், இதற்கெனப் பயிற்சியும் தேர்வும் வைத்துப் பலருக்கு இத்துறையில் திறமை ஏற்பட வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

## இறந்தாருடன் தொடர்பு

இறந்து போனவரின் ஆவி, சிலர்மீது ஏறி, உயிருடனிருப்பவர்களிடம் தன் கருத்துக்களை வெளியிட முடியும் என்பது ஜப்பானியரது நம்பிக்கை. எனவே, ஆவி ஆவேசமாக வரப்பெறும் கூட்டம் ஒன்று அந்நாட்டில் வளர்ந்துள்ளது. இக்கூட்டம் இச்சிகோ (Ichiko) என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. முற்காலத்தில் இச்சிகோ மார்பில் மண்டையோட்டு மாலையணிந்து செல்வது வழக்கம். இம் மண்டையோடு, இறந்தோரின் ஆவியை ஈர்க்கும் ஆற்றல் உடையதாம். ஆவிக்கு உணர்ச்சியூட்டி எழுப்ப, இச்சிகோ ஒரு வில்லைக் கொணர்ந்து நாணை இழுத்து வருவதன் மூலம் பேரொலி எழுப்புவான். இவ்வொலி கேட்டதும் அந்த ஆவி அவனைத் தன்பீடமாகக் கொண்டு விடுகிறதாம். இக்காலத்தில் இவ்வழக்கம் குறைந்துவிட்டது. இப்போது, இச்சிகோ இடைவிடாமல் மந்திரங்கள் ஓதுகின்றான். மந்திரவேகமும் பிராத்தனை நேரமும் நீடிக்க, அவன் உடல் முழுவதும் குலுங்கித் தன்னை மறந்தவனாகிறான். அதன்மீது அவனுடலில் ஆவி புகுந்து, அவன் வாய்வழியே தான் எண்ணியிருப்பவற்றை அந்த ஆவி கூறுகின்றது. இச்சிகோ இவ்வாறு கூறுபவற்றுள் ஒன்றினையாவது, சுயநிலை அடைந்த பிறகு, நினைவுபடுத்திக் கூறுவதற்கு இயலவில்லை. இவ்வேலையில் முதியோரும், பெண்களுமே பெரிதும் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களிடம் சென்று பொருள் அளித்து, இறந்தவர்களுடன் பேச விரும்பும் மக்கள் பலராவர்.

## சூருவளி பற்றிய சில நம்பிக்கைகள்

சூருவளி (Typhoon) சுழன்றடிக்க இருப்பதை, ஜப்பானியர் சில அறிகுறிகளைக் கொண்டு, முன்னதாகவே தெரிந்துகொள்ளுகின்றனர். பறவைகளோ தேனீக்களோ மரத்தின் அடிக்கிளையில் கூடுகட்டுவதும், வழக்கத்திற்கு எதிராக எறும்புகள் மிகுதியாக வீட்டுக்குள் புகுவதும் பெருஞ்சூருவளி அடிக்கும் என்பதை உணர்த்தும் அறிகுறிகளாம். கிச்சிலி மரத்தில் கொப்புக் கிளையில் காய்த்தால் சூருவளி இல்லையென்றும், உட்புறமாகக் காய்த்தால் சூருவளி வீசுமென்றும் அந்நாட்டு மருத நிலமக்கள் நம்புகின்றனர். வள்ளிக்கொடி நிலத்தின்மீது தவழ்ந்து செல்லாமல் மேல் நோக்கி எழுமாயின், சூருவளி வீசுதல் உறுதி என அவ்வுழவர்கள் கருதுகின்றனர். ஆமைகள் வழக்கத்திற்கு மாருக, மேட்டுப் பகுதியில் முட்டைகள் இட்டால், சூருவளி அடித்தல் உறுதியென நெய்தல்நில மக்கள் கூறுகின்றனர். பறவைகளும் செடிகளும் கொடிகளும் இயற்கையாற்றல் பெற்றுள்ளன என்றும், சூருவளியினின்று தப்ப அவை தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வழிதேடுகின்றன என்றும், அவற்றைக் கூர்ந்தறிவதன் மூலம் நாமும் அதனை உணரலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

## மணிகளைப் பயன்படுத்தும் வழக்கம்

நம் நாட்டினரைப் போலவே, ஜப்பானியரும் மணிகளைப் பலவகையில் பயன்படுத்துகின்றனர்; கோவில்களில் பெரிய மணிகள் கட்டித் தொங்கவிடுகின்றனர். இறை வழிபாடு செய்யச் செல்பவர்கள் அந்த மணிகளினின்று ஒலியெழச் செய்கின்றனர்; வீட்டில் சிறிய மணிகள் வைத்திருக்கின்றனர்; நாய், பூனை, ஆடுமாடுகள் முதலியவற்றின் கழுத்தில் மணியைக் கட்டிவைக்கின்றனர். பொதுவாக, நம்மவர்கள் எங்ஙனம் மணிகளைப் பயன்படுத்துகின்றனரோ, அங்ஙனமே ஜப்பானியரும் பயன்படுத்துகின்றனர். அந்நாட்டுப் பெண்கள் தாங்கள் பயன்படுத்தும்

கத்தரிக்கோல்களிலும் சிறு மணிகளைக் கட்டிவைத்துக் கத்தரிக்கும் போது எழும் ஒலி கேட்டு மகிழ்கின்றனர். ஜப்பானியருக்கு மணி ஒலியில் விருப்பம் மிகுதி உண்டு. காற்றின் அசைவினுல் மணி ஒலித்துக்கொண்டே யிருத்தலைக் கேட்டு அவர்கள் மகிழ்கின்றனர் ; காற்றின் இயக்கத்தினுல் ஒலிக்கக் கூடியவாறு மணிகளைச் செய்து, அவற்றை வீட்டுக் கூரைமீது நாட்டிவைக்கின்றனர். இல்லங்கள் பலவற்றின் கூரைகள் இவ்வாறு காற்றி ஞல் இயக்கப்பட்டு ஒலிக்கும் மணிகளுடன் விளங்கு வதைக் காணலாம். இத்தகைய மணிக்குப் ‘பூரின்’ (Furin) என்று அவர்கள் பெயரிட்டிருக்கின்றனர். ஓசகாக் கோவிலில் இருபத்தாறு அடி உயரத்திலும் கியோட்டோ கோவிலில் பதினெட்டு அடி உயரத்திலும், நாரா கோவிலில் பதினைந்து அடி உயரத்திலும் மிகப் பெரிய மணிகள் இருக்கின்றன.

## பூனை வளர்த்தல்

ஜப்பானியருக்குப் பூனை வளர்ப்பதில் விருப்பம் மிகுதி. ஜப்பானிய அரச மாளிகையில் பூனைக்கு மிகுந்த மதிப்புண்டு. அந்நாட்டில் அரசர் அவையிலும் பூனைகளைக் கொண்டு செல்ல அனுமதி உண்டு. ஜப்பானியப் பெண்கள் உயர்ந்தோராயினும் தாழ்ந்தோராயினும் பூனை வளர்ப்பதில் மட்டும் ஒரே வகையினராகக் காணப் படுகின்றனர். ‘நாயும், மற்றைச் சிறு பிராணிகளும் மனிதரின் ஏவற்படி நடக்க, மனிதர் பூனைகளின் ஏவலாளர் போன்று நடந்துகொள்கின்றனர்,’ என்று கூறுமாறு ஜப்பானியர் பேரன்புடன் பூனைகளை வளர்க் கின்றனர். பழமையில் பற்றுடையவர் பூனையை மந்திர சக்தியுடைய விலங்கென்று நம்புகின்றனர்; பூனை முதுமை அடைந்தால், மனிதர் பேசுவதை உணரும் ஆற்றல் அடை கிறதென்றும், மனிதரைப் போன்று பின்னங்கால்களில் நின்று நிமிர்ந்து நடக்குமென்றும், தனக்கு இறுதி உண்டா

தலை முன்னதாக உணர்ந்து, மனிதர் காணாவண்ணம் எங்கேனும் சென்று மறைவான இடங்களில் உயிர் துறக்கும் என்றும் கருதுகின்றனர். எனவே, அவர்கள் முதுமை அடையும் ஆண் பூனைகளை வீட்டில் வைத்துக்கொள்வ தில்லை. அந்நாட்டில் பூனையின் தோல் ஒருவகை இசைக் கருவிகளைச் செய்யப் பயன்படுகிறது.

## நாள் பார்க்கும் வழக்கம்

'நல்ல நாள் பார்த்தல்' என்னும் வழக்கம் நம் நாட்டில் பல வீடுகளில் உண்டு. இதைப்போலவே, ஜப்பானியரும் நாள் பார்க்கும் வழக்கம் உடையவர்களே. நாட்களுள் சில தீயவை, சில நல்லவை என்பது அவர்தம் நம்பிக்கை. திருமணம், பயணம் செய்தல், ஏதேனும் தொழில் துவக்கு தல் போன்ற ஒவ்வொரு செயலும் நல்ல நாள் பார்த்தே துவக்கப்படும். சவ அடக்கச் சடங்கும் நாள் பார்த்துத் தான் செய்யப்படும். இந்த நம்பிக்கை நகர மக்களிடை குறைந்துவருகிறது எனினும், பழைமையில் பற்றுடைய வர்கள் இன்றும் நல்ல நாட்களில் நம்பிக்கை உடையவர் களாகவே இருக்கின்றனர்.

## தேநீர் பருகுதல்—ஓர் அழகுக் கலை

தேநீர் பருகுவது உலக நாடுகளில் இருத்தலைவிட ஜப்பானில் பெரும்பழக்கமாயிருக்கிறது. அங்கே அரசன் முதல் ஆண்டி ஈறுக மக்கள் அனைவரும் தேநீர் பருகும் பழக்கமுடையவர்களே. தேநீர் பருகுதலை ஓர் அழகுக் கலையாகவே அம்மக்கள் மதிக்கின்றனர். அவர்கள் உணவு டனும், உணவுக்கு முன்னும் பின்னும் என ஒரு நாளில் பன்முறை தேநீர் பருகுகின்றனர்; தம் வீட்டுக்கு எவர் எந்த நேரத்தில் வந்தபோதிலும், முதலில் தேநீர் அளிக் கின்றனர். தேநீர் உடலுக்கு உரமூட்டவல்ல ஊட்டப் பொருள் என்பதை ஜப்பானிய விஞ்ஞானிகள் மெய்ப்பித் திருக்கின்றனர்.

தேநீரை அளவுடன் பருகினுல், உடலுக்கு உரமூட்டு வதுடன் மட்டுமின்றி, இறைச்சி, மீன் போன்ற உணவுப் பொருள்களின் தீய சத்துக்கள் இரைப்பையில் தங்குவதை யும் வெளியேற்றிவிடும். அமிலத்திற்கு எதிரான பொருள் தேயிலேயில் மிகுந்திருப்பதால், இரைப்பையில் அமிலம் தங்கித் தீய பலன் உண்டாக்காமல் தடுக்கும் ஆற்றல் தேநீருக்கிருக்கிற தென்பது அந்நாட்டு அறிஞர்களின் கருத்து. தேயிலேயில் உள்ள மாங்கனிசம் மனித உடலில் உண்டாகும் நுண்ணிய புழுக்களேக் கொல்ல உதவுகிற தென்றும், அதிலுள்ள இரும்புச் சத்து குருதி ஓட்டத்தைப் பெருக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்துகிறதென்றும், உயிர்ச்சத்து ஏ, ஸி (Vitamins A & C) தேயிலேயில் மிகுந்திருப்பதால் இது ஒரு நல்ல உணவாகப் பயன்படக் கூடியதென்றும் அந்த அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

**சாஞேயு**

ஜப்பானியர் அடிக்கடி தேநீர் விருந்துகள் நடத்து கின்றனர். இது ஒரு சடங்கே போன்று நடத்தப்படு கிறது. விருந்தினர் பலர் இதற்கு வரவழைக்கப்படுவ தில்லே. ஐவர் அல்லது அறுவரே விருந்தினராதல் உண் டெனினும், இதனே நடத்தும் முறை உலகில் வேறு எங்கும் நிகழாத தொன்ருயுளது. அவர்கள் இந்தச் சிறிய தேநீர் விருந்தினேச் "சாஞேயு" (Cha-noyu) எனக் கூறு கின்றனர்.

இந்த விருந்தை எங்ஙனம் நடத்துவது, விருந்தறை எவ்வாறு இருத்தல் வேண்டும், தேநீர் பரிமாறுதல் எவ்விதம் என்பன போன்றவை ஜப்பானியச் சிறுமிகளுக் குக் கற்பிக்கவென்று ஆங்குப் பல நிலேயங்கள் இருக் கின்றன. அவற்றில், இதுபற்றிய முறைகள் ஒன்றேனும், விடாமல் கற்பிக்கப்படுகின்றன. ஜப்பானியப் பெண்களுள் ஒருவரேனும், இதனேக் கற்றுக்கொள்ளாமல் இருப்ப தில்லே. மேஞட்டு நாகரிகம் பரவிவிட்ட இஞ்ஞான்றும்

சாஞேயு வழக்கம் மட்டும் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் ஒரே முறையில் நடைபெறுகிறது.

தேயிலேயை ஒரு கிண்ணத்தில் போட்டு, அதன்மீது வெந்நீர் ஊற்றிஞல் தேநீர் தயாராகிவிடும். இது மிக எளிய வேலேயே. ஆயினும் ஜப்பானியர் இதை ஒரு கலேயாகவும், சடங்காகவும் நடத்துகின்றனர். இந்தச் சாஞேயு சடங்கின் மூலம் அமைதி, அடக்கம், பணிவு, விருந்தோம்பல், பெரியவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும் பண்பு, நாகரிகம், பிறர் மனத்தைக் கவருமாறு நடத்தல் முதலிய நற்பண்புகள் அனைத்தும் அப்பெண் களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. தேநீர் விருந்தினேச் சடங்காக்கி, அதன் மூலம் பெண்மக்களுக்கு நற்பண்பு உண்டாக்கும் முறைகளே ஜப்பானியர் தொன்றுதொட்டு நிறைவேற்றிவருதலே மரபாகக் கொண்டிருக்கின்றனர்.

ஜப்பானியர் நடத்தும் இந்தத் தேநீர் விருந்து கலே யுடன் இணைக்கப்படுவது எங்ஙனம் என்பது அறிதற்குரிய தாகும்: சாஞேயு தேநீர் விருந்தில் பச்சைத் தேயிலேப் பொடியே பயன்படுத்தப்படுகிறது. அஃதாவது, ஜப்பானி யர் உயர்ந்த தேயிலேயைப் பறித்துப் பசுமை மாருமல் உலரவைத்துப் பொடியாக்கி, அப்பொடியை இச்சடங்கில் பயன்படுத்துகின்றனர்.

இச்சடங்கில் தேயிலே வைத்துள்ள பெட்டி, அதை அள்ளிப்போடும் மூங்கிற் கரண்டி, வெந்நீர் வைத்துள்ள பாண்டம், தேநீர் குடிக்க வைக்கப்பட்டுள்ள கிண்ணங்கள் முதலிய அனைத்தும் தலேமுறை தலேமுறையாகக் காக்கப் பட்டுவந்தவையாகவும், குடும்பப்பெருமை, வரலாற்றுச் சிறப்பு, ஓவியத்திறன் முதலியவற்றை விளக்குபவை யாகவும் இருக்கும்.

ஐவர் அல்லது அறுவரே பெரும்பாலும் இந்தச் சாஞேயு விருந்திற்கு அழைக்கப்படுவர். இவருள் ஒருவர் தலேமை விருந்தினராயிருப்பார். முதலில் தலேமை விருந் தினரை அழைத்து, அவருக்கு இணக்கமானவர்களே

மற்றை விருந்தினராக அழைக்கப்படுவர். இவர்கள் முதலில் விருந்தினர் அறையில் தங்குவர். சாஞேயு விருந்துக்கென ஒரு தனியிடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அத்தனியறை, தோட்டத்தின் ஒரு புறத்தில் இருந்தால் விருந்தினர் ஒருவர் பின் ஒருவராக வரிசையாய் அவ் வறைக்குச் செல்வர். சாஞேயு விருந்தறையில் நுழையப் பெரிய வாயில் இராது. சாளரம் போன்றதொரு குறுகிய வாயிலே அமைக்கப்பட்டிருக்கும். விருந்தினர் அதன் வழியே குனிந்து நுழைந்து அறைக்குள் செல்வர். அவ் வறை இருபகுதியாயிருக்கும். ஒரு பகுதி வந்த விருந்தினர் அமர்ந்திருக்க ஆகும். மற்ருென்று தேநீர் தயாரித்துப் பருகும் அறையாகும்.

தேநீர் தயாராகிவிட்டது என்பதை அறிவிப்பதற்குத் தேநீர் தயாரிக்கும் பெண், அவ்வறையிலுள்ள சேமக் கலம் போன்றதொரு வெண்கல மணியில் மரச்சுத்தி கொண்டு தட்டி ஒலியெழுப்புவாள். அது செவிக்கினிய ஒலியாக இருக்கும். அதைக் கேட்ட விருந்தினர் தேநீர் அறைக்குள் நுழைவர். முதலில் விருந்தினருக்கு நீராக உள்ள, அதாவது பொதுவாக உலகெங்கும் பருகுவது போன்ற தேநீர் அளிக்கப்படும். இந்தத் தேநீரைப் பருகிய பின் விருந்தினர் மீண்டும் அறையின் மற்ருெரு பகுதிக்குச் சென்று பேசிக்கொண்டிருப்பர். அரைமணி நேரத்திற்கெல்லாம், விருந்துக்குரிய தேநீர் வழங்கப்படும். இத் தேநீர் வழங்குவதற்குமுன், இவ்விருந்திற்கெனச் செய்யப்பட்ட சிற்றுண்டிகள் வழங்கப்படுவதுமுண்டு.

இரண்டாவது முறையாக அளிக்கப்படும் தேநீர்தான் இத்துணைச் சடங்கு ஆரவாரங்களுக்கும் உரியதாகும். இது தான் உலர்த்தி வைக்கப்பட்டுள்ள பச்சைத் தேயிலைப் பொடி கொண்டு தயாரிக்கப்படுவதாகும். இந்தத் தேநீர் குழம்பாக இருக்கும். ஏறத்தாழ நம் நாட்டில் செய்யப் படும் கஞ்சிக்கு, இதனை ஒப்பிடலாம். இந்தக் குழம்புத் தேநீர், விருந்தினர் வந்து அமர்ந்த பிறகு, அவர்களுக்

கெதிரில்தான் செய்யப்படும். இந்த விருந்தில், தேயிலைத் தூள் வைக்கப்பட்டுள்ள பாண்டம், கரண்டி, தேநீர் அருந்தவுள்ள கிண்ணங்கள் ஆகியவற்றை விருந்தினர் பார்வையிடுதல் மரபு.

ஜப்பானியர் பாய்களிட்டு அவற்றின்மீதே அமர்வர். சில இல்லங்களில் வட்டவடிவமாகத் தைக்கப்பட்ட இலவம் பஞ்சு மெத்தைகள் இருக்கையாக வழங்கப்படுதலும் உண்டு. மேனுட்டு நாகரிகமுடைய வீடுகளில் நாற்காலி மேசைகளிட்டும் இவ்விருந்து நடத்தப்படுவதுண்டு. ஆனுல், பெரும்பாலான மக்கள் தரையில் பாய்கள்மீது அமர்த்தியே இவ்விருந்தை நடத்துகின்றனர். இவ் விருந்தில், விருந்தினர் தேநீர்க் கிண்ணத்தை உள்ளங் கையில் ஏந்தி மற்ருெரு கையால் பிடித்துக்கொண்டு, தேநீர் பருகிய பிறகு, தமக்கெதிரில் வைத்துவிடவேண்டும். விருந்தளிப்பவர் முதலில் தலைமை விருந்தினர் எதிரில் உள்ள கிண்ணத்தில் தேநீரை ஊற்றிய பிறகே மற்றவர்கள் எதிரில் உள்ள கிண்ணங்களில் ஊற்றுவார்.

இந்த விருந்து நிகழ்ந்து முடிய நான்குமணி நேரம் ஆகும். இந்த விருந்தின்போது, அங்குள்ள பாண்டங் களின் வரலாறு, அவற்றின் ஓவியம், அறையில் காணப் படும் வரலாற்றுச் சிறப்புடைப் பொருள்கள் முதலியவை பற்றியே விருந்தினர் பெரிதும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருப்பர்.

ஜப்பானியர் எளிய வாழ்க்கையை விரும்புபவர்கள் ; ஏராளமான தட்டுமுட்டுச்சாமான்களைச் சேர்த்துத் தங்கள் இல்லங்களை அடைக்க விரும்பாதவர்கள். எனவே, எளியவருடைய இல்லமும் பார்ப்பதற்கழகாய்த் தோன்றும். வரலாற்றுச் சிறப்பு, குடும்பப் பெருமை முதலியவற்றை விளக்கும் பொருள்களே ஆங்குக் காணப்படும். சுவர் களிலும் மிகுதியாகப் படங்களைத் தொங்கவிடுவது இல்லை.

நம் நாட்டவரைப்போலவே ஜப்பானியரும் விருந் தருந்தும் அறைக்குள் செருப்புகளுடன் போகார். செருப்பு

களை வெளியில் கழற்றிவைத்துவிட்டே விருந்தறைக்குள் அவர்கள் நுழைகின்றனர். விருந்தறைக்குள் நுழையுமுன் கை வாய்களைக் கழுவிக்கொள்வதற்காக வெளியில் தண்ணீர் வைக்கும் வழக்கமும் நம்மவரிடம் இருப்பது போன்று அவர்களிடையிலும் இருக்கின்றது.

ஒருவர் தேநீர் பருகிய கிண்ணத்தில் மற்ருெருவருக்குத் தேநீர் அளிக்க நேர்ந்தால், அக்கிண்ணங்களைக் கழுவித் தூய்மையாக்கிய பின்பே அளிக்கப்படுகிறது. இதற்காக விருந்தறையில் இவற்றைக் கழுவித் தூய்மையாக்குவதற்கென்று ஒரு பெரிய கலத்தில் தண்ணீர் நிரப்பி வைக்கப்பட்டிருக்கும்.

விருந்தினர் வந்தவுடன் ஜப்பானியர் அவர்களை வரவேற்பது பணிவு நிறைந்த வழக்கமாயிருக்கிறது. இடுப்புவரை தலையைக் குனிந்து விருந்தளிப்பவர் வரவேற்க, விருந்தினரும் அதேபோன்று தலைகுனிந்து வணங்கி உட்செல்லுகின்றனர். சிற்றுண்டி வழங்குவது, தேநீர் அளிப்பது, விருந்துமுடிந்தபிறகு பிரிந்துசெல்வது முதலிய சமயங்களிலும் விருந்தளிப்பவர் பணிவும் அன்பும் எழிலும் தோன்ற அளிப்பார். பொதுவாக இந்தச் சடங்கு வெளிநாட்டாருக்கு மிக வேடிக்கையாகவும் வியப்பூட்டுவதாகவும் காணப்படுகிறது.

இத்துணை ஆரவாரத்துடன் நடைபெறும் இவ்விருந்தில் அளிக்கப்படும் இக்குழம்புத் தேநீர், பாலோ, சர்க்கரையோ கலக்கப்படாத வெறும் தேயிலைக் கொதிநீரே யாகும். பச்சைத் தேயிலைத்தூளில் ஓரளவு வெந்நீர் விட்டு, இதைக் கலக்குவதற்கென்று வைக்கப்பட்டுள்ள முனையில் மயிர்க்குச்சு போன்றுள்ள நீண்ட மூங்கிற் குச்சியால் (Chop sticks) நன்கு துழவியபின், தேநீர் வழங்குவது நடைபெறும். இதில், தேயிலைத் தூளை மூங்கிற் கரண்டியால் அள்ளிப் போட்டு, மூங்கிற் குச்சியால் துழாவியே தேநீர் தயாரிக்கவேண்டும். கையால் அள்ளிப்போட்டோ வெந்நீரை அதற்கென உள்ள கரண்டியைப் பயன்படுத்தா

மல் ஏனத்தோடு எடுத்து ஊற்றியோ, மூங்கிற் குச்சியால் துழாவாமல், அப்படியே அதனைச் சுழற்றிக் கலக்கியோ தேநீர் தாயாரிக்கப்பட்டால், அதனை எவரும் பருகார்; அத்தகைய செயல் இழிவுபடுத்துதற்குரிய செயலாகவும் கருதப்படும். மேலும் இவ்விருந்திற் பயன்படுத்தும் பாண்டங்கள், கிண்ணங்கள், கரண்டிகள் முதலிய பொருள்கள் அனைத்தும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றுக்குரியதாக இருக்கும். பொதுவாக, இந்தத் தேநீர் விருந்துச் சடங்கை உல்லாசப் பொழுது போக்குக்காகவும், நெருங்கி உரையாடவும் ஜப்பானியர் பயன்படுத்துகின்றனர். சிறப்பாக, தங்கள் குடும்பப்பெருமை, வரலாறு முதலியவற்றைப் புதியவர்களுக்குத் தெரிவிக்கவும் நெருங்கிய நண்பர்களுடன் கலந்து உறவாடி அடிக்கடி நினைவூட்டிக்கொள்ளவும் இவ்விருந்துகள் பயன்படுகின்றன. தேநீர் துழாவும் மூங்கிற்குச்சி ஒன்று மிகப் பழமை வாய்ந்ததென்பதற்காகப் பத்தாயிரம் 'என்' (ஜப்பானிய நாணயம்) விலைகொடுத்தும் தேயிலைத் தூள் வைக்கும் பழைய கிண்ணம் ஒன்று 1,89,900 என் விலை கொடுத்தும் வாங்கப்பட்டதெனின், ஜப்பானியர் இதில் காட்டும் ஆர்வமும், கொண்டுள்ள மதிப்பும் எத்தகையவை என்பது நன்கு விளங்கும்.

இவ்வாறு சானோயு தேநீர் விருந்து கலைச்சுவைப் பொழுது போக்காக நடந்த பிறகு விருந்தினர் தலை வணங்கி விடை பெற்றுக்கொள்வர். சில சமயங்களில் விருந்தினர் விடைபெற்றுப் போகையில், நீர்த் தேநீர் வழங்குவதும் வழக்கமாகும்.

இவ்விருந்து, தூய்மையில் பற்று, எளிமையில் விருப்பம், ஓவியத்திறன், இயற்கை எழில் முதலியவற்றைப் பாராட்டுதல், பழைமையைப் போற்றுதல், பணிவுடன் நடத்தல், ஒருவருக்கொருவர் அளவளாவி மகிழ்ந்து அன்புடன் வாழ்தல் முதலிய நற்பண்புகள் வளர வாயிலாக அமைந்துள்ளது என்று ஜப்பானியர் கருதுகின்றனர்.

# 9. பாராட்டத்தகும் பண்புகள்

## அரசர் பற்று

ஜப்பானியர் மிகச் சிறந்த நாட்டுப் பற்றுக் கொண்ட வர். நாட்டுப் பற்றில் இவர்களுக்கு ஈடாக இவ்வுலகில் வேறு எவரையுமே கூறமுடியாது. "நாட்டிற்காக உயிரை வழங்க வேண்டும். இதற்காக மக்கள் தேவை", என்று ஜப் பானிய அரசர் ஓர் அறிக்கை வெளியிட்டால், அவ்வளவில், அம்மக்கள் உயிர் வழங்கக் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்துவிடுவர். அவர்களுக்குள்ள நாட்டுப் பற்றும் அரச அன்பும் மிகவும் உயரியவை; புனிதமானவை; போற்றுதற்குரியவை.

## கல்வி சிறந்த நாடு

ஜப்பானில் படிக்காத பெண்களோ, ஆண்களோ இல்லை. கட்டாய இலவசக் கல்வி நடைமுறையில் இருப் பதால், அனைவரும் படித்தவராகவே இருக்கின்றனர். இவர் கள் துவக்கப் பள்ளியில் படிக்கும் போதே நகரத் தூய்மை, ஒப்புரவொழுகல் போன்ற வாழ்க்கைப் பொறுப்புக்களும் கடமைகளும் கற்பிக்கப்படுகின்றனர். இது பற்றிய விவரங்கள் முன்னரே கூறப்பட்டன.

## ஒன்றே குலம்

ஜப்பானில் உயர்வு தாழ்வு, சாதி வேறுபாடு முதலியவை இல்லை. எவரும் தமக்கு விருப்பமான எந்த வேலையையும் செய்யலாம். "ஒன்றே குலம்" என்னும் திருமூலரது விழுமிய கருத்து அம்மக்களிடையே நடை முறையில் இருந்துவருகிறது. ஜப்பானியர் அறிவுக்குத் தான் மதிப்புக் கொடுக்கின்றனர்.

## காதல் மணம்

ஜப்பானியரிடை இன்று காதல் திருமணங்கள் நிகழ் கின்றன. எனினும், பழைமையில் பற்றுடைய மக்க

ளிடையே திருமணங்களைப் பெற்ருேரே முடித்துவைக்கின்றனர். பெற்ருேர் அனுமதியின்றி எவரும் தம் விருப்பம்போலத் திருமணம் செய்துகொள்வதென்பது இரண்டாம் உலகப் பெரும் போருக்கு முன்வரை இயலாத செயலாக இருந்தது. ஆனல் இப்போது பதினெட்டு ஆண்டு நிரம்பிய எவரும் விருப்பம்போல மணந்து கொள்ளுகின்றனர். வழக்கம் இவ்வாறு மாறியதெனினும், ஆண்டில் முதிர்ந்த பெரியவர்களிடம் ஜப்பானிய இளைஞர் மட்டற்ற பணிவும் அன்பும் காட்டுகின்றனர்.

## கொடி படரும் குடில்கள்

ஜப்பான் கந்தகக் கலப்புடைய நிலமாகையால், அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம். எனவே, ஜப்பானிய மக்கள் சிறு மர வீடுகள் கட்டிக்கொண்டு அவற்றில் உறைகின்றனர். சில இடங்களில் களிமண் சுவர்களுடன் கூரை வேயப்பட்ட வீடுகளும் காணப்படுகின்றன. நம் நாட்டில் ஓலைகொண்டு கூரை வேயப்படுதல் போன்று அங்கு நாணல், வைக்கோல் முதலியவற்ருல் தடித்த கூரை வேயப்படுகின்றது. நகரங்களில் இத்தகைய கூரை வீடுகள் அகற்றப்பட்டுவிட்டன எனினும், சிற்றூர் மக்கள் இத்தகைய வீடுகளையே பெரிதும் விரும்புகின்றனர். தமிழ் மக்கள் தங்கள் கூரைகள்மீது சுரை, புடலை, பீர்க்கு முதலிய கொடிகளைப் படரவிடுவது போன்று ஜப்பானியரும் தங்கள் வீட்டுக் கூரைகள்மீதும் குடில்முன் உள்ள பந்தல்கள்மீதும் மலர், காய், கனி ஆகியவை தரும் கொடிகளைப் படரவிடுகின்றனர். கூரைமீது பசுமையான கொடிகள் படரும் வீட்டில் பிணிகள் நுழைய அஞ்சும் என்பது அம்மக்கள் நம்பிக்கையாகும்.

## நாணல் இலைத் தொப்பி

தமிழகத்தில் சிற்றூராரும் உழவர்களும் மழைக் காலத்தில் வெளியே செல்லுகையில் தங்கள் உடலும்

தலையும் நனையாமலிருக்க, ஓலையில் செய்துவைத்திருக்கும் சாதனம் போன்று ஜப்பானியரும் நாணல் இலைகளைக் கொண்டு உடலை மழையில் நனையாமல் காத்துக்கொள்ள ஒரு சாதனம் செய்துகொள்கின்றனர். தலைக்கு அவர்கள் செய்துவைத்திருக்கும் பெரிய வட்டவடிவமான நாணல் இலைத் தொப்பி மழைக்கும் வெயிலுக்கும் நல்லதொரு காப்புச் சாதனமாக விளங்குகிறது.

**மக்கள் பொறுப்பு**

ஜப்பானியர் ரயில், டிராம், பஸ் முதலியவைகளில் பிரயாணம் செய்கையில், பிரயாணச் சீட்டு வாங்காமல் செல்லார். மூன்றுவது வகுப்புப் பிரயாணச் சீட்டு வாங்கியவர் வேறு எந்த மேல் வகுப்பிலும் செல்லமாட்டார் ; போக வேண்டும் இடத்தை அடைந்ததும், பயன்படுத்திய சீட்டுகளைக் கண்டபடி கீழே எறிந்துவிடாமல், அதற்கென அங்கு வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலே போட்டுவிட்டுப் போவர்.

ஜப்பானியர் உறைவிடங்களில் உள்ளே செல்லுகையில் காலில் எதனையும் அணிவதில்லை. வெளியிற் செல்லும்போது காலில் செருப்பு அணியாதவரையே காணுதற்கியலாது.

ஜப்பானியர், தங்கள் இல்லங்களில் பூசை அறை வைத்துக்கொண்டிருக்கின்றனர் ; அங்குச் சிறிய புத்தர் உருவம் வைத்து வணங்குகின்றனர்; இறந்தவரது சாம்பலை வைத்துப் பூசிக்கின்றனர்.

ஓரிடத்தில் எத்தனை பெண்கள் இருந்தாலும், பெண்களின் பெருங் கூட்டமே இருந்தாலும் அல்லது குழந்தைகளே இருந்தாலும் கூச்சல் என்பதே இராது. அனைவரும் மிக்க அமைதியாகவே இருப்பர்.

ஜப்பானியர் எதனையும் அழகாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்வதில் மிகுந்த விருப்பம் உடையவர் ; காட்சிக்கு எளிய தோற்றம் அளிப்பவர் ; தாம் உறைவது குடிசையாயிருப்பினும் அதனையும் அழகாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொண்டிருப்பர்.

ஜப்பானியர் தமக்குத் தேவையில்லாத பொருள்களை வாங்கி இல்லங்களில் அடைத்து வைப்பதில்லை; தட்டு முட்டுச் சாமான்களையும் தேவைக்கு மேல் வாங்கி அடுக்கி வைத்துக்கொள்வதில்லை. சுவர்களில் நிறையப் படங்களையோ மற்றவற்றையோ தொங்கவிடுவதில்லை; வீட்டுப் பொருள்களை உரிய இடங்களில் செவ்வையாக வைத்துள்ளனர்.

தோற்றத்தில் எளிமையும் அமைதியும் காணப்படும் வகையில் வாழ்க்கை நடத்தும் அந்த மக்களை நோக்கினால், 'இவர்களா இத்துணை அற்புத வேலைகளைச் செய்கின்றனர்!' என்று நமக்கு வியப்புத் தோன்றும். வாழ்க்கையில் மனநிறைவுடன் வாழும் வழக்கம் ஜப்பானியர் ஒவ்வொருவரிடமும் காணப்படுகிறது.

உணவு விடுதிகள், வணிக நிலையங்கள், தொழிற்சாலைகள், அரசாங்கப் பிரிவுகள், ரயில் நிலையங்கள், அஞ்சல் நிலையங்கள், கடலில் மூழ்குதல், மீன்பிடித்தல் முதலிய எல்லாவற்றிலும் ஜப்பானியப் பெண்கள் ஈடுபடுகின்றனர். இங்ஙனம் பணியாற்றும் பெண்கள் அனைவரும் இள நங்கையராகவும், திருமணம் ஆகாதவராகவும் காணப்படுகின்றனர். இவர்கள் தேவையான அளவு கல்வி கற்றுப் பதினெட்டு ஆண்டுகள் நிறைந்த பிறகே பணியாற்ற வருகின்றனர்.

## பொருளீட்டும் மாணவர்

மாணவர்கள் தங்கள் விடுமுறைக் காலத்தை வீணிற் கழிப்பதில்லை; அலுவலகங்கள், தொழிற் சாலைகள், முதலியவற்றில் வேலைக்கமர்ந்து ஊதியம் பெறுகின்றனர். இவ்வாறு விடுமுறை நாட்களில் ஈட்டும் பணத்தைச் சேர்த்துவைத்து, மீண்டும் பள்ளி திறந்தவுடன் அதிற் சேர்ந்து படிப்பதற்கு உதவியாக வைத்துக்கொள்ளுகின்றனர்.

**உழைப்பே மந்திரம்**

ஜப்பானில் சோம்பித் திரிபவர் எவரையும் காண முடியாது. இரப்போர் எவரையும் அங்குக் காணுதல் அரிது. உழவுக்கும் தொழிலுக்கும் உண்மையில் வந்தனை செய்பவர் ஜப்பானியரே என்பதை உறுதியாகக் கூறலாம். உழைக்காமல் உண்டு கொழுத்து உல்லாஸ வாழ்வு நடத்து வது என்பது அவரிடம் இல்லை.

**மரியாதை மிக்கவர்**

ஜப்பானியர் ஒழுக்கத்திலும் சிறந்தவராவர். அவர்கள் எவரையும் மிகுந்த மரியாதையுடன் நடத்துவது வழக்கம்; பிறரை விளித்துப் பேசுகையிலும் மரியாதையான சொற் களையே பயன்படுத்துவர். வீட்டு முதல்வராயினும், வேலைக்காரராயினும் மரியாதையுடன் அழைக்கப்படல் வேண்டும் என்பதே அவர்தம் பண்பாகும். எவரையும் பணிவுடன் மண்டியிட்டு வரவேற்கும் வழக்கம் ஜப்பானிய ரிடை மிகுந்திருக்கிறது. நண்பர் இல்லங்களுக்குச் சென்றால் பணிப்பெண்கள் மண்டியிட்டு வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வர். 'திரு பிள்ளையவர்கள்' என எழுது தலும், 'பிள்ளை அவர்களே', என்று பேசும்போது விளித் தலும் நமது வழக்கம். இது போன்றே ஜப்பானியர் **சான்** (San) என்னும் மரியாதைச் சொல்லைப் பெயருக்கு இறுதியிலே சேர்த்துக்கொள்கின்றனர். சான்றாக, 'ராம சாமி சான்', 'சுந்தரராசன் சான்' என்றே அவர்கள் அழைப்பர்; எழுதுவர்.

மலைகளை அவர்கள் பக்தியுடன் கருதுவதால் மலை களின் பெயர்களையும் இவ்வாறு 'சான்' என்னும் அடை மொழியை இறுதியில் சேர்த்தே கூறுகின்றார்கள். ஜப்பானிய மொழியில் 'யாமா' (Yama) என்றால் 'மலை' எனப் பொருள்படும். இதனை வெறும் 'யாமா' என்று கூறாமல், 'யாமா சான்' என்றே ஜப்பானியர் கூறு கின்றனர். ஜப்பான் மொழி இலக்கணத்தில் ஆண்பால்—

பெண்பால் என்ற வேறுபாடு இல்லை. வேலைக்காரன், வேலைக்காரி ஆகியவர்களையும் இங்ஙனம் சான் அடை மொழி சேர்த்தே அழைக்கின்றார்கள். உயர்திணை, அஃறிணை யாவற்றிற்கும் மரியாதை காட்டப்படவேண்டும் என்பது அவர்தம் கொள்கையாகும்.

ஜப்பானிய வேலைக்காரரிடம் எப்பணியிட்டாலும் அவர்கள் புன்முறுவல் பூத்த முகத்தினராய் இட்ட பணியை ஒழுங்காகச் செய்கின்றார்கள். ஒழுங்கு, கட்டுப் பாடு, அடக்கம், அமைதி, பணிவு, மரியாதை என்னும் பண்புகளை அவர்களிடம் சிறக்கக் காணலாம்.

## வாணிகத் திறமை

வாணிகத்தில் ஜப்பானியர் மிகவும் திறமை பெற்றவர். எவரேனும் வெளிநாட்டார் அங்குச் சென்றால், சென்ற வரின் பெயர், தங்கியிருக்கும் இடம், தொழில், தங்கும் காலம், என்னென்ன தேவை, எத்தனை முறை ஜப்பானுக்கு வந்தவர் என்னும் விவரங்களை எல்லாம் "பயர்ஸ் டெய்லி நியூஸ்" (Buyers Daily News) என்னும் பத்திரிகையில் வெளியிட்டுவிடுவர்; வணிகர்கள் மறுநாட் காலையில் தங்கி யிருக்கும் இடத்திற்கு வந்து குவிந்துவிடுவர்; எல்லாப் பொருள்களையும் கொண்டுவந்து காட்டுவர். ஜப்பான் செல்லுகிறவர் பெரிய வணிகராயின் அவர்கள் அட்டை போல அவரை விடாமல் தொடர்ந்து, எல்லாவகை உபசாரங் களும் செய்து, வணிகத் தொடர்பை நிலைநாட்டிவிடுவர்.

## பலவகை விளையாட்டுக்களும் உடற்பயிற்சியும்

ஜப்பானியர் விளையாட்டுக்கள் பலவற்றில் விருப்பம் உடையவர்கள். அந் நாட்டில் பனிக்காலத்தில் பனி பெய்து பூமியில் இறுகி சுவிட்சர்லந்து போலக் காட்சி தருமாதலின், பனிச்சறுக்கல் விளையாட்டை ஜப்பானிய ஆண்களும் பெண்களும் சேர்ந்து விளையாடுகின்றனர். "பேஸ் பால்" (Base ball) விளையாட்டு அந்நாட்டுத்

தேசிய விளையாட்டாகக் கருதப்படுவதால், பலர் அதில் ஈடு படுகின்றனர். நீந்தி மூழ்குதலும் போட்டிக்குரிய விளை யாட்டாக நடைபெறுகிறது.

வில்லை வளைத்து அம்பெய்வது ஜப்பானில் நடை பெறும் ஒரு சிறப்பு விளையாட்டாகும். நல்ல உடற்கட்டும், நெஞ்சுரமும் அற்றவர்கள் இந்த விளையாட்டில் சேர்க்கப் படமாட்டார்.

உதைபந்து, படகோட்டும் போட்டி, பனிநிலத்தில் சறுக்கிக்கொண்டே ஹாக்கி ஆடுதல், மீன் பிடித்தல் முதலியவை எல்லாம் ஜப்பானியரின் விளையாட்டுக்கள். குதிரைப் பந்தயம், சைக்கிள் பந்தயம், மற்போர், குத்துச் சண்டை, எருதுச் சண்டை, ஆட்டுக்கடாச் சண்டை போன்றவைகளையும் ஜப்பானியர் விளையாட்டுக்களாகக் கொண்டிருக்கின்றனர். ஜப்பானியரின் கத்திச் சண்டையும் கோல் சண்டையும் காணத் தக்கவை.

ஜப்பானியரின் தேசீய உடற்பயிற்சியாகக் கருதப்படும் "ஜூஜுட்சு" என்பது உடல் உரமற்றவர்களின் தற் காப்புக்காகக் கற்பிக்கப்படும் மற்போர் முறையாகும். இது ஜப்பான் நாடெங்கும், சிறப்பாக மகளிருக்குக் கற்பிக் கப்படுகிறது.

**நடனம் முதலியன**

நடனம், நாடகம், பொம்மைக் கூத்து முதலியவை ஜப்பானில் சிறப்புற நடைபெறுகின்றன. ஜப்பானியர், அழகிய நாடகங்கள் பல நடத்துகின்றனர். அவர் களுடைய இசையரங்கு விரும்பிச் செவிமடுக்கக் கூடிய தாக இருக்கிறது; பலவகையான நடனங்கள் ஆடுகின் றனர்; குழல், யாழ், முழவு போன்ற கருவிகளை இசைக் கின்றனர்.

**'பான்சாய்' கலை**

அவர்கள் தங்கள் இல்லங்களை அலங்கரித்து வைத்துக் கொள்வதில் பெருவிருப்புடையவர். ஒவ்வோர் இல்லத்

திலும் பின்புறம் சிறு தோட்டமாவது வைத்து அதைப் பூங்காவாக்கிவைப்பதில் அவர்களுக்கு ஆவல் மிக உண்டு. இல்லங்களை அலங்கரிக்க, ஓவியங்களைப் பயன்படுத்துவதுடன், மரங்களைக் குட்டையாக்கி வைக்கும் விந்தைக்குரிய செயல் ஒன்றை அவர்கள் செய்கின்றனர் ; இங்ஙனம் மரங்களைக் குட்டையாக்குவதைப் 'பான்சாய் (Bonsai) கலை' என வழங்குகின்றனர். சில மரங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை ஒன்றிரண்டு அடிகட்கு மேல் வளர விடாதபடி குட்டையாக்கி, இல்லத்திற்குள் அலங்காரப் பொருளாக வைப்பதில் ஜப்பானியர் கைதேர்ந்தவர். இங்ஙனம் குட்டையாக்கப்பட்ட மரங்கள் சில, பல ஆண்டுகட்கு மேலும் பட்டுப் போகாமல் இருக்கின்றனவாம்.

## முற்போக்கு மிக்கவர்

ஜப்பானியர் எல்லா வகையிலும் முற்போக்கு மிக்கவர்; கல்வியறிவு படைத்தவர் ; கலையறிவு நிரம்பப் பெற்றவர்; தொழில் வளர்ச்சியில் பேரார்வங் கொண்டவர். 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை உன்னி, முயன்று பொறுமையுடன் பணியாற்றுகின்றனர்.

ஜப்பானியரிடம் சீனரின் பழக்க வழக்கங்கள் பல காணப்படுகின்றன. இன்றும் அவர்கள் சீன மொழியைச் சிறப்புடையதெனக் கருதுகின்றனர்.

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது போல், ஜப்பானியர் சிறு பொருள்களையும் பயன்படுத்திப் பெரும் பணிகளை நிறைவேற்றி முடிக்கும் இயல்பினராவர். அவர்கள் உற்பத்தி செய்யும் மூங்கிற் குடை, மழைக்கும் வெயிலுக்கும் பயன்படுவதுபோல, மீன் பிடிக்கும் படகுகளில் பாய்மரமாகவும் பயன்படுகின்றது. உராடோ (Urado) என்னும் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் சிறு படகுக்காரர்கள் இந்த மூங்கிற் குடைகளையே பாய்மரங்களாகப் பயன்படுத்தி மீன் பிடித்துவந்து விற்கின்றனர்.

**கூந்தல் ஒப்பனை**

ஜப்பானியப் பெண்களின் கூந்தல் அலங்காரம் கண் கவர் வனப்புடையதாகும். அப்பெண்கள் சிறப்பாக ஐந் தாறு வகையில் கூந்தல் ஒப்பனை செய்கின்றனர். மண முடித்தவள் என்பதை அவர்களுடைய கூந்தலைக் கொண்டே கூறிவிடலாம். மணமுடித்த பெண்களின் கூந்தல் ஒப்பனை மருமேஜ் (Marumage) என வழங்கப்படுகிறது. மணவினைக்குரிய ஆண்டெய்திய இளம்பெண்களின் கூந்தல் ஒப்பனை• ஷிமடா (Shimada) என வழங்கப்படு கிறது. பணிப்பெண்களின் கூந்தல் ஒப்பனைக்கு இக்கோ கெய்ஷி (Icho Gaeshi) என்பது பெயராகும். சிறு பெண் களின் கூந்தல் ஒப்பனை மோமோவேர் (Momoware) எனப் படுகிறது.

**சிறந்த பண்பினர்**

ஜப்பானில் உள்ள அஞ்சல் நிலையங்கள் யாவற் றிலும், தந்திச் செய்தி அனுப்பவேண்டுமாயின், விரும்பிய வாறு செய்தியை எழுதிக்கொடுத்து உரிய கட்டணமும் செலுத்தவேண்டும்; செலுத்தியதற்குச் சான்ருகச் சீட்டுப் பெற வேண்டுமாயின், நான்கு என்கள் கொடுத்தே பெற வேண்டும். இதைப்போலவே கடிதங்களையும், அவை அனுப்பவேண்டிய இடத்திற்கு ஏற்றவாறு பணம் தந்து விடுதல் போதும். அஞ்சல் நிலையத்தார் தக்கவாறு தபால் பில்லைகளை (Stamps) ஒட்டிக் குறித்த முகவரிக்கு அக் கடிதங்களை அனுப்பிவிடுவர். இதுகுறித்து அஞ்சல் அனுப்பியவர் கவலை கொள்ள வேண்டுவதில்லை. அஞ்ச லகத்தார் தவருது, குறித்த கடமையைச் செய்தே முடிப்பர்.

ஜப்பானியர் எந்த வேலையையும் நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் செய்பவர். அரசாங்கத்தின் ஆதரவு பெற்று நடத்தும் உணவு விடுதிகளில் வேலை செய்யும் பணிப் பெண்டிரும் ஆடவரும், நாமே விரும்பி, பணி

மக்கள் அனைவருக்கும் மொத்தமாக அன்புக்கூலி கொடுத்தாற் பெறுவரே அன்றித் தாமே தனித்தனியாக வலிந்து வந்து புன்முறுவல் காட்டிப் பொருள் பெறுதற்கு மனம் ஒவ்வார்.

பொதுவாக, ஜப்பானியர் பலவகை நற்பண்புகளை உடைய மக்களாவர். உணர்ச்சியும், ஊக்கமும், காலத்தைப் போற்றலும், எதனையும் வீணாக்காது பொருளாக்கிப் பொருளீட்டும் முயற்சியும், இடையறு உழைப்பும் நாட்டுப்பற்றும் அவர்தம் சிறந்த கொள்கைகள் ஆகும்.

அவர்கள் உழைப்புக்குப் பெருமதிப்பளிப்பவர்; ஜப்பானியர் ஒவ்வொருவரும் தம் நாட்டை உலகிற் சிறப்புடைய நாடாகச் செய்யவேண்டும் என்னும் பெருநோக்குடன் உழைப்பவராகவே காணப்படுகின்றனர்.

**"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?"**

**—பட்டினத்தார்**

---